மலர் : 51 இதழ் : 07

தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

ஜனவரி 2020
விலை ரூ.20

இந்த இனிய புத்தாண்டில் தடைகளை தகர்த்து, வெற்றிகளைப் பெற்று, வளமான தமிழகத்தைப் படைத்திடுவோம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி – 31.12.2019

புத்தம்புது பொலிவுடன் மலரும் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந்த இனிய நாளில், எனது அன்பிற்குரிய தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது உளம்கனிந்த ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழி மறிக்கும் தடைகளை எல்லாம் தகர்த்து, வெற்றிகளைப் பெற்று, புதிய சாதனைகளைப் படைத்து, வளமான தமிழகத்தை படைத்திடுவோம் என இந்த ஆங்கிலப் புத்தாண்டில் நாம் அனைவரும் உறுதியேற்போம்.

இந்த இனிய புத்தாண்டில், அனைவரின் வாழ்விலும் வசந்தம் மலரட்டும், வளம் பெருகட்டும், அமைதி நிலவட்டும் என்று வாழ்த்தி, தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

கே. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2050 – 51
விகாரி வருடம் : மார்கழி – தை
ஜனவரி 2020
மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 7

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **பொ. சங்கர் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
பா. செல்வாம்பாள்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
மு.அ. ரோசன் குர்சிதா பேகம்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
மாய குமரேசன்
சு. கமலா
தேச. கலையரசன்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

புத்தகம் என்பது மனிதர்களுடைய வாய் திறந்து பேசாமல் பேசுகின்ற நண்பன். புத்தகங்கள் இல்லையெனில், மனித குலம் இத்தகைய வளர்ச்சியைக் கண்டுபிடிக்க முடியாது. உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ, அதுபோலவே மனப்பயிற்சிக்கு புத்தக வாசிப்பு அடிப்படையானது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

★ **மத்திய அரசால் வெளியிடப்பட்ட நல் ஆளுமைத் திறனுக்கான தரவரிசையில் 18 பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது!**
*மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோஹித்** அவர்கள் 06.01.2020 அன்று சட்டப்பேரவையில், 2020ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரை தொடங்கி வைத்து ஆற்றிய உரை.* 5

★ **விவசாய குடும்பத்தில் பிறந்த நான், மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில், மக்கள் நலனைப் பற்றியே சிந்தித்து ஆட்சி நடத்தி வருகிறேன்!**
*மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 06.01.2020 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய பதிலுரை–09.01.2020* 17

★ **சுற்றுலா பயணிகளின் வருகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது!!**
*46ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2019–2020யை தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – 22.12.2019* 35

★ **அடுத்த ஆண்டிலிருந்து புத்தகக் காட்சிக்கு அரசு சார்பாக ரூ.75 இலட்சம் வழங்கப்படும்!**
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.01.2020 அன்று தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்படும் 43ஆவது சென்னை புத்தகக் காட்சியை துவக்கி வைத்து ஆற்றிய உரை* 55

★ **மக்களின் கோரிக்கையை ஏற்று காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பிரித்து புதிதாக செங்கல்பட்டு மாவட்டம் தொடங்கப்பட்டுள்ளது!**
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 29.11.2019 அன்று செங்கல்பட்டில் நடைபெற்ற விழாவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்தினைத் தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.* 71

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.01.2020 அன்று சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றினார்கள்.

மத்திய அரசால் வெளியிடப்பட்ட நல் ஆளுமைத் திறனுக்கான தரவரிசையில் 18 பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது!

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்
திரு. **பன்வாரிலால் புரோஹித்** அவர்கள்
06.01.2020 அன்று சட்டப்பேரவையில்,
2020ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரை
தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, வணக்கம்.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2020ஆம் ஆண்டின் இந்த முதல் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 2020ஆம் ஆண்டு, தமிழ்நாட்டு மக்களுக்கு மேன்மேலும் அமைதியையும், வளத்தையும், வளர்ச்சியையும் வழங்கும் என்று நான் வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் உறுதியோடு பீடுநடை போட்டு வருகிறது. தமிழ்நாடு மற்றும் தமிழ்நாட்டு மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு, ஏழை, எளியோர் மற்றும் நலிவுற்றோர் நலனைப் பாதுகாப்பதில் இந்த அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. நல் ஆளுமை நாளான 25.12.2019 அன்று, மத்திய அரசால் முதன்முறையாக வெளியிடப்பட்ட நல் ஆளுமைத் திறனுக்கான குறியீட்டுப் பட்டியலில், நாட்டில் உள்ள 18 பெரிய மாநிலங்களில், ஒட்டுமொத்தத் தரவரிசையில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது, நாம் அனைவரும் பெருமைப்படத்தக்க சாதனையாகும். மேலும், 'இந்தியா டுடே' பத்திரிகை நவம்பர் 2019இல் 'மாநிலங்களின் நிலை' என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்விலும் 'ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க மாநிலம்' என்று தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய தனிச்சிறப்பு வாய்ந்த, மிகவும் பெருமைக்குரிய சாதனைகளுக்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பாராட்டுகிறேன். தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலம் ஆக்க வேண்டும் என்ற, மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் குறிக்கோளினை இந்த அரசு அடைந்துள்ளது.

தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசு, இந்த அரசு. 2011ஆம் ஆண்டு மே மாதம் முதல், ஆளுநர் உரைகளில் அறிவிக்கப்பட்ட

105 அறிவிப்புகளில், 73 அறிவிப்புகள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு, மீதமுள்ள அறிவிப்புகள் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 2017ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள், விதி எண்: 110இன் கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரை 453 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அவற்றில், 114 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், 303 அறிவிப்புகளுக்குத் தேவையான ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவையும் விரைவில் நிறைவு செய்யப்படும். இந்த அரசு, அனைத்து அறிவிப்புகளையும் திறம்படச் செயல்படுத்தி வருவதை இது தெளிவாக்குகிறது.

பன்னெடுங்காலமாக அடித்தள மக்களாட்சி உணர்வு தமிழ்நாட்டுப் பாரம்பரியத்தில் இரண்டறக் கலந்துள்ளது. பல்வேறு தடைகள் வந்தபோதிலும், 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் முறையாக நடத்தப்படுவதை இந்த அரசு உறுதி செய்தது. மீதமுள்ள 9 மாவட்டங்களிலும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரைவாக தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. இந்தச் செயல்பாடு, மக்களாட்சியைப் பரவலாக்குவதில் இந்த அரசுக்கு உள்ள முனைப்பினை எடுத்துக்காட்டுகிறது.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு தொடர்ந்து திறம்பட நிலைநாட்டப்பட்டதன் விளைவாக, நல் ஆளுமைக் குறியீட்டின் ஒரு பகுதியான நீதித்துறை மற்றும் பொதுப் பாதுகாப்புக் கூறுகளில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது. 'மாநிலங்களின் நிலை' என்ற தலைப்பில் 'இந்தியா டுடே' மேற்கொண்ட ஆய்விலும், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் நாட்டிலேயே 'சிறந்த செயல்திறன் மிக்க மாநிலம்' என்ற தரநிலையை தமிழ்நாடு பெற்றுள்ளது. காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அருள்மிகு அத்திவரதர் திருவிழா, திருவண்ணாமலை கார்த்திகை தீபம் மற்றும் தேவர் ஜெயந்தி போன்ற பல பெரிய நிகழ்வுகள் அனைத்தும், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றன. சரியான நேரத்தில் உடனடியாக எடுக்கப்பட்ட தடுப்பு மற்றும் தீர்வு நடவடிக்கைகளினால் மாநிலம் அமைதியாகவும், அசம்பாவிதங்கள் ஏதுமின்றியும் காக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 11, 12 ஆகிய நாட்களில், மாண்புமிகு இந்திய பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கும், சீனக் குடியரசின் அதிபர் மேதகு.ஷிஜின்பிங் அவர்களுக்கும் இடையேயான இரண்டாவது இந்திய–சீன அரசுமுறை சாராத உயர்நிலை சந்திப்பு மாமல்லபுரத்தில் நடைபெற்றது. உள்ளூர் மக்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி அச்சந்திப்பு சுமூகமாக நடப்பதை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட விரிவான பாதுகாப்பு மற்றும் பிற ஏற்பாடுகள், பரவலான பாராட்டுகளைப் பெற்றன. மாமல்லபுரம் சுற்றுலா மேம்பாட்டிற்கு உதவி செய்ய மாண்புமிகு பாரதப் பிரதமர் உறுதியளித்துள்ள நிலையில், 563.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதற்கான திட்டம் தீட்டப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான அனுமதியை விரைவாக வழங்கிட மத்திய அரசினை நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் சகோதர மாநிலமாக சீனாவின் பியூஜியன் மாநிலத்தோடும், சென்னையின் சகோதர நகரமாக குவான்சூவோ நகரத்தோடும் தொடர்புகளை ஏற்படுத்திட இச்சந்திப்பின்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக சீனாவிலிருந்து ஒரு உயர்மட்டக் குழுவும் சமீபத்தில் சென்னைக்கு வந்தது.

இந்த அரசு திறமையான நிதி மேலாண்மைக்கு அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறது. பல்வேறு சவால்கள் இருந்தபோதிலும், நிதிநிலை வரம்புகள் மீறாமல் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிதி குறைந்துள்ளது. மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டை, பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரைகள் அதிகரித்துத் தந்துள்ளன என்ற பரவலான கருத்து உள்ள நிலையில், மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் மொத்த நிதியளவு குறைந்துள்ளது என்பதே உண்மை நிலவரமாகும். மேலும், பதினான்காவது நிதிக்குழு பரிந்துரைத்த, மாநிலங்களுக்கு இடையிலான மத்திய வரிகளின் பகிர்வு வழிமுறை தமிழ்நாட்டிற்கு மேலும் அதிக அளவிலான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

பதினைந்தாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளை தமிழ்நாடு மிகவும் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளது. இந்த அரசு, நிதிக்குழு முன்பு தனது கருத்துகளை விளக்கமாகச் சமர்ப்பித்துள்ள நிலையில், மாநில அரசுகளின் செயல்திறனையும், செயல்பாட்டையும் ஊக்குவிக்கும் வகையில், நியாயமான மற்றும் சமமான நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் என்ற நம்பிக்கையுடன் உள்ளது.

தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு, இதுவரை பொருட்கள் மற்றும் சேவை வரி இழப்பீடாக 7,096 கோடி ரூபாயை பெற்றுள்ளது. மேலும், மத்திய அரசின் மானியமாக, 17,957.31 கோடி ரூபாய் இந்த ஆண்டில் இதுவரை பெறப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழ்நாட்டிற்கான நிலுவைத் தொகைகளை விடுவிப்பதில் நிலவி வரும் சில சிக்கல்களைக் களைந்து நிலுவைத் தொகையினைப் பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொருட்கள் மற்றும் சேவை வரியை நடைமுறைப்படுத்திய முதலாவது ஆண்டில், அதாவது 2017–2018ஆம் ஆண்டில், பல்வேறு மாநிலங்களில் வசூலிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவை வரியில், ஒதுக்கீடு செய்யப்படாத தொகையான 88,344.22 கோடி ரூபாயிலிருந்து 50 சதவீதத்தை, மாநில பொருட்கள் மற்றும் சேவை வரி வசூல் அடிப்படையில் வழங்குவதற்குப் பதிலாக, மத்திய அரசு தனது தொகுப்பு நிதிக்கு தவறாக எடுத்துச் சென்றுவிட்டது. மேலும், பதினான்காவது நிதிக் குழுவின் நிதிப்பகிர்வு முறையின்படி, இத்தொகையில் 42 சதவீதம் மட்டுமே மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டது. இதன் விளைவாக, தமிழ்நாட்டிற்கு 4,073 கோடி ரூபாய் நிகர இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலுவைத் தொகையை நமது மாநிலத்திற்கு விரைவாக விடுவிக்குமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசு எடுத்ததொடர் முயற்சியின் பலனாக, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண, பொருட்கள் மற்றும் சேவை வரி மன்றத்தால் அமைச்சர்கள் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினையில், சாதகமான முடிவை விரைவாக நாங்கள் எதிர்பார்க்கிறோம். மாநிலங்களின் நலன்களை முறையாகப் பாதுகாப்பதில் மிகுந்த முனைப்பினைக் காட்டும் இந்த அரசு, பல்வேறு மன்றங்களிலும், உயர்மட்ட நிலையிலும், இத்தகைய பிரச்சினைகள் தொடர்பான தனது கருத்தினை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. தமிழ்நாடு அரசுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகைகளை விரைவில் விடுவிக்குமாறு மத்திய அரசை மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பங்கீட்டில் தமிழ்நாட்டின் நலனை உறுதியுடன் பாதுகாப்பதற்காக இந்த அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. கருநாடக அரசால் மேகதாது திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை நிராகரித்து உடனே திருப்பியனுப்பவும், மாண்புமிகு உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாடு அரசின் முன் அனுமதியின்றி கருநாடகாவிலுள்ள காவேரி வடிநிலப் பகுதியில் எந்த கட்டுமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் தடுத்து நிறுத்துவதை உறுதி செய்யவும், மத்திய அரசை மீண்டும் ஒருமுறை இந்த அரசு வலியுறுத்துகிறது. பெண்ணையாற்றுப் படுகையில் உள்ள மார்க்கண்டேய ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க கருநாடக அரசு திட்டமிட்டுள்ளது. மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள், 2012ஆம் ஆண்டு மே மாதத்தில் அப்போதைய பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதி, கருநாடகாவில், பெண்ணையாற்றில் நீர்த்தேக்கம் அமைப்பதற்கோ அல்லது நீரோட்டப் பாதையை மாற்றி அமைப்பதற்கோ தனது கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்தார். இது சம்பந்தமாக மத்திய அரசிடம் தொடர்ந்து பலமுறை வலியுறுத்தப்பட்டு, இறுதியில் 2018ஆம் ஆண்டு மே மாதத்தில், தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தது. உச்சநீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் அடிப்படையில், 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பிரச்சினைகள் சட்டத்தின் கீழ், பெண்ணையாறு விவகாரம் குறித்து தீர்ப்பாயம் ஒன்றை அமைக்குமாறு மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு கோரியுள்ளது. இது தொடர்பான அசல் வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. இதற்கான தீர்ப்பாயத்தை விரைவில் அமைக்குமாறும், தமிழ்நாடு அரசின் ஒப்புதலின்றி பெண்ணையாற்றின் வடிநிலப் பகுதிகளில் நீர்த்தேக்கப் பணிகள் அல்லது நீரோட்டப் பாதையை மாற்றியமைக்கும் எந்த ஒரு கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என்று கருநாடக அரசுக்கு அறிவுறுத்தும்படியும், மத்திய அரசிடம் இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் இணக்கமான அணுகுமுறையையும், திருவனந்தபுரம் சென்று, மாண்புமிகு கேரள முதலமைச்சருடன் நன்மை பயக்கும் பேச்சுவார்த்தை மேற்கொண்ட அவரது முயற்சியையும், நான் பாராட்டுகிறேன். இதன் தொடர்ச்சியாக, அதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முல்லைப் பெரியாறு அணையை வலுப்படுத்துவதற்கான பணிகளை மேற்கொண்டு, அதன் நீர்த்தேக்க அளவினை மீண்டும் 152 அடிக்கு உயர்த்த, தமிழ்நாட்டிற்கு மாண்புமிகு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. இதன்படி, அணையை பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அரசு 7.85 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இப்பணிகளுக்கு

சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது. எனவே, முல்லைப் பெரியாறு அணையை வலுப்படுத்துவதற்குத் தேவையான அனுமதிகளை கேரள அரசும், மத்திய அரசும் விரைவாக வழங்க வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

சென்னை குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து நீரைத் திறந்து விடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சரிடம் கோரியதன் அடிப்படையில், சென்னைக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் செய்த இந்த உதவிக்காக, ஆந்திர அரசிற்கு இந்நேரத்தில் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டுமென, தமிழ்நாடு அரசு மத்திய அரசினை வலியுறுத்தும். தமிழக மக்கள், எந்த ஒரு மதத்தையோ அல்லது சமயத்தையோ பின்பற்றினாலும், அவர்கள் அனைவரின் நலன்களும் பாதுகாக்கப்படுவதை தமிழ்நாடு அரசு உறுதி செய்யும்.

தமிழ்நாடு அரசு எடுத்த முனைப்பான நடவடிக்கைகளால், பாக் வளைகுடாவில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் குறைந்துள்ளது. இன்றைய நிலவரப்படி, 17 மீனவர்கள் மட்டுமே இலங்கை அரசின் சிறைக்காவலில் உள்ளனர். அவர்களையும் விரைவில் விடுவிப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு, விரைவில் சுமூகத்தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையை மாநில அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

நிருவாகத்தில் தூய்மையும், ஆளுமையில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையும் உறுதி செய்வதுதான் இவ்வரசின் முதன்மையான நோக்கமாகும். 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு லோக்ஆயுக்தா சட்டம் இயற்றப்பட்டு, அதன் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களை நியமித்ததன் மூலம், தமிழ்நாடு லோக்ஆயுக்தா அமைப்பு செயல்படத் துவங்கியுள்ளது. ‘அம்மா திட்டம்’ மற்றும் ‘வட்ட இணைய வழி மனுக்கள் கண்காணிப்பு அமைப்பு’ மூலம் பொதுமக்களின் குறைகள் விரைந்து தீர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் குறைகளைக் களையும் வகையில், ஒரு முன்னோடித் திட்டமாக ‘மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம்’ கடந்த 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் துவக்கப்பட்டு, அதன் கீழ் 9.77 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 5.18 இலட்சம் மனுக்களுக்கு 40 நாட்களுக்குள்ளேயே மக்களுக்கு உதவும் வகையில் தீர்வு காணப்பட்டு, சாதனை படைக்கப்பட்டுள்ளது. தென்காசி, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய ஐந்து மாவட்டங்கள் புதிதாகத் துவக்கப்பட்டதன் வாயிலாக, அரசு நிருவாகம் மக்களிடம் மேலும் நெருங்கிச் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ள எப்போதும் தயார் நிலையில் இருப்பதும், உடனடியாக நிகழ்விடத்திற்குச் சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை திறம்பட மேற்கொள்வதும், உயிர்களையும், உடைமைகளையும் காக்க உதவுகின்றன. 2030ஆம் ஆண்டு வரையிலான மாநிலப் பேரிடர் மேலாண்மைக்கான முன்னோக்குத் திட்டம், ஒரு முழு சிறப்புக் காவல்படைப் பிரிவுடன் தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு உருவாக்கம் உட்பட, ஆளில்லா விமானம் (Unmanned Aerial Vehicle) மூலம் எடுக்கப்படும் வான்வழி புகைப்படம், புவித் தகவல் அமைப்பு (Geographical Information System), உயர்தொழில்நுட்பத் தகவல் தொடர்பு மற்றும் மீட்புச் சாதனங்கள் பயன்பாடு இந்த தயார்நிலைக்கு பெரிதும் உதவியுள்ளன. இயற்கைப் பேரிடர் காலங்களில் உயிரிழப்பு மற்றும் உடைமைகளுக்கு சேதம் ஏற்படுவதைக் குறைப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

தமிழ் மொழி மற்றும் தமிழர் பண்பாட்டை ஊக்குவிப்பதில் இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. 1956இல், தமிழ்நாடு மாநிலம் உருவான நாளை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் ஒன்றாம் தேதியை ‘தமிழ்நாடு நாள்’ என அறிவித்ததற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரை பாராட்டுகிறேன். 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிகாகோவில் நடைபெற்ற 10வது உலகத் தமிழ் ஆய்வு மாநாட்டுக்கு தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்ததோடு, அமெரிக்காவிலுள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க 1 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. தமிழறிஞர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த தலைவர்கள் பேரில் விருதுகள் வழங்கியும், மணிமண்டபங்கள்

நிறுவியும், ஆண்டுதோறும் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடியும், இந்த அரசு அவர்களை நினைவுகூர்ந்தும், அவர்களது சேவையை சிறப்பித்தும் வருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவு மண்டபம், ரூ.50.80 கோடி மதிப்பீட்டில் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

மகாத்மா காந்தியடிகளின் நினைவைப் போற்றிட, அவரின் 150ஆவது பிறந்த நாளினை இந்த ஆண்டு நாம் கொண்டாடி வருகின்றோம். ஆங்கிலேயர் ஆட்சியினால் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட மோசமான வறுமை நிலையை இந்த உலகத்திற்கு உறுதிபட எடுத்துக் காட்டுவதற்கு, மகாத்மா காந்தி அவர்கள் அரையாடையுடன் மேல் துண்டை மட்டுமே அணியும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை, மதுரையில் 1921ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ஆம் நாளன்று எடுத்தார். இந்நிகழ்வினை நினைவூட்டும் வகையில், மதுரை அருகிலுள்ள காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தினை மேம்படுத்தி, அதனை ஊரக வளர்ச்சி மற்றும் காந்திய மெய்யியலுக்கான ஒப்புயர்வு கல்வி மையமாக உருவாக்க இந்த நேரத்தில் மத்திய அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். பாரதரத்னா மூதறிஞர் இராஜாஜி அவர்களால் 1925ஆம் ஆண்டு பிப்ரவரி 6இல், திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் நிறுவப்பட்டது. மகாத்மா காந்தி அவர்கள் இருமுறை இந்த ஆசிரமத்துக்கு வருகை புரிந்துள்ளார். மகாத்மா காந்தி அவர்களின் 150ஆவது பிறந்த நாளின் நினைவாக, திருச்செங்கோட்டிலுள்ள காந்தி ஆசிரமத்தின் செயல்பாடுகளுக்கு உதவிடும் வகையில், இரண்டு கோடி ரூபாயை ஒருமுறை மானியமாக அளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. மகாத்மா காந்தியின் கொள்கையினை மேலும் பரப்பும் விதமாக, ஆசிரமத்தின் நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிக்க அரசு உதவும். 2019ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் நடைபெற்ற தூய்மை பாரத விழாவில், தமிழகத்திற்கு ஊரகத் தூய்மை ஆய்வு–2019இல், இந்திய அளவில் சிறந்த மாநிலத்திற்கான விருது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் அருகி வரும் நீர் வளங்களை, மக்கள் பெருமளவில் நன்மையடையும் வகையில், பயன்படுத்திட வகைசெய்வது நமது புனிதமான கடமையாகும். இதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘தமிழ்நாடு நீர்வள ஆதாரப் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்’ என்ற ஒரு இயக்கத்தை மக்கள் இயக்கமாகத் தொடங்கியுள்ளார். இதனால், ஏரிகள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், கால்வாய்கள் மற்றும் குளங்களை மக்களின் பங்களிப்போடு புனரமைப்பதற்கு செயல்படுத்தப்படும் குடிமராமத்து திட்டம் மேலும் உத்வேகம் அடைந்துள்ளது. 2016–2017ஆம் ஆண்டு முதல், இந்தத் திட்டத்தின் கீழ், 4,871 பணிகள் 931.76 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்தியதன் காரணமாக, இந்த ஆண்டு பெய்த மழைப்பொழிவை, நீர்ப்பாசனம், குடிநீர் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டலுக்காக சேமித்து வைக்க முடிந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவேரி ஆற்றின் பெருமைமிக்க தூய்மையை மீட்டெடுக்கும் பொருட்டு ‘நடந்தாய் வாழி காவேரி’ என்ற திட்டத்தை அறிவித்துள்ளார். தமிழ்நாடு, தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலமாக இருப்பதால், அதன் நீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்கு, வடிநிலங்களுக்கு இடையே நதிநீரை மடை மாற்றம் செய்வது அவசியமாகிறது. இதன் முதல் கட்டமாக, கோதாவரி ஆற்றிலிருந்து குறைந்தபட்சம் 200 டி.எம்.சி. தண்ணீரையாவது காவேரி வடிநிலத்திற்கு வழங்க வேண்டுமென மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்துகிறது. தமிழ்நாடு அரசு தன் பங்காக, தமிழ்நாட்டிற்குள் பாய்கின்ற நதிகளை இணைக்கும் பணியை மேற்கொள்ளும் விதமாக, காவேரி–குண்டாறு ஆறுகள் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும். இதில் முதல் கட்டமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னரே அறிவித்தவாறு, காவேரி–தெற்கு வெள்ளாறு இணைப்புத் திட்டம் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

விவசாயிகளுக்கான நிலைக்கத்தக்க வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்காக, முன்னோடி தொழில்நுட்ப விரிவாக்கம், சந்தை ஒருங்கிணைப்பு, மதிப்புக் கூட்டு உற்பத்தி, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஊக்குவிப்பு மூலமாக இந்த அரசு தீவிரமாக முயற்சித்து வருகிறது. இந்த ஆண்டு நிலவிய சாதகமான பருவமழை மற்றும் சிறந்த நீர் மேலாண்மையின் மூலம் கடைமடைப் பகுதி வரை பாசன நீர் சென்றடைந்ததால், பயிரிடும் பரப்பளவு 7 இலட்சம் ஏக்கர் வரை அதிகரித்துள்ளது. உணவு தானிய உற்பத்தி 115 இலட்சம் மெட்ரிக் டன் அளவு எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மற்றும் நுண்ணீர் பாசனத்

திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் காப்பீடு இழப்பீட்டுத் தொகையாக 7,200 கோடி ரூபாய்க்கும் அதிகமாக தமிழ்நாட்டு விவசாயிகள் பெற்றுள்ளனர். வேளாண் உற்பத்திப் பொருட்களை ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விலைக்கு விற்பதற்கு ஏதுவாக, 'தமிழ்நாடு வேளாண் உற்பத்தி மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணையச் சட்டம்–2019' இயற்றப்பட்டது. சர்க்கரைத் தொழிற்சாலைகள் கடுமையான இடர்பாடுகளை சந்தித்து வருவதால், கரும்பு விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இதனைச் சரிசெய்ய, சர்க்கரை ஆலைகளின் நிதி மறுகட்டமைப்பு செய்ய வேண்டியது அவசியம் எனக் கருதி, தமிழ்நாட்டின் சர்க்கரை தொழிற்சாலைகளின் மறுமலர்ச்சிக்கு உதவும் வகையில் மத்திய அரசு சிறப்பு நிதிச் சலுகைகளை அறிவிக்க வேண்டும் என நான் வேண்டுகிறேன்.

கடந்த 2016–2017 முதல் 2018–2019 வரையிலான மூன்றாண்டுகளில், ஆண்டுதோறும் மாறா விலை அடிப்படையிலான மொத்த மாநில மதிப்புக் கூட்டுதலில், வேளாண் துறை பங்களிப்பைவிட கால்நடைத் துறையின் பங்களிப்பு அதிகரித்துள்ளது. விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள், செம்மறியாடுகள் மற்றும் நாட்டுக் கோழிகளின் விநியோகம் உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் முன்னோடித் திட்டங்களின் வெற்றியே கால்நடைத் துறையின் இந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு காரணமாகும். 2011ஆம் ஆண்டிலிருந்து அரசு இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரிகளை நிறுவியுள்ளதன் மூலமும், சேலம் மாவட்டம், தலைவாசலில் ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு ஒப்புதல் அளித்ததாலும், மாநிலத்தில் உள்ள மொத்தக் கால்நடை மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது. கால்நடைத் துறைக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் சேலம் மாவட்டம் தலைவாசலில், 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை அறிவியல் ஆராய்ச்சிக்கான மேம்பட்ட ஒருங்கிணைந்த கல்வி நிறுவனம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் அடிக்கல் நாட்டவுள்ளார்கள். தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கிணங்க, இந்தியாவின் பால் உற்பத்தி தொழில் துறையை பாதுகாக்கும் வகையில் ஆசியான் அமைப்பு மற்றும் பசிபிக் நாடுகளுடன் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (RCEP) கீழ் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் மத்திய அரசு கையெழுத்திடாததற்கு நான் நன்றி கூறுகிறேன்.

பாக் வளைகுடாவில் இழுவை வலை மீன்பிடிப் படகுகளை, ஆழ்கடல் சூரை மீன்பிடிப் படகுகளாக மாற்றியமைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி அளித்துள்ளதற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மூக்கையூர் மற்றும் குந்துக்கல்லில் முறையே 120 கோடி மற்றும் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மீன்பிடித் துறைமுகங்கள் கட்டும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வெள்ளப்பள்ளத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படவுள்ளது. திருவொற்றியூர் குப்பம், தரங்கம்பாடி மற்றும் முதுநகரில் 420 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன்பிடி துறைமுகங்களை அமைப்பதற்கு மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கியிடமிருந்து இசைவு பெறப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும், மாநிலத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்பை மேலும் ஊக்குவிக்கும்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம், பிற மாநிலங்களும் தொடர்ந்து பின்பற்றுவதற்கான முன்மாதிரியாக அமைந்துள்ளது. முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு, ஆதாருடன் இணைக்கப்பட்ட பொது விநியோக அமைப்பு நடைமுறைகளினால், 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' திட்டத்தை தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்த முடிகிறது. இந்த ஆண்டு, நமக்கு சராசரி மழைப்பொழிவு இருந்தும், வேளாண் பெருமக்கள் அறுவடைக்காக காத்திருக்கின்றனர். விவசாயிகள் மகிழ்ச்சியாக இருந்தால் மட்டுமே நாடு செழிப்படையும். தமிழ்நாட்டு மக்கள் பொங்கல் பண்டிகையை சந்தோஷமாகக் கொண்டாட, இந்த ஆண்டும் குடும்பம் ஒன்றிற்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகளுடன் 1,000 ரூபாய் ரொக்கத் தொகையும் வழங்கப்படும் என அறிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் சிந்தனையில் உதித்த, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023இல் உள்ள நோக்கங்களை நிறைவேற்றிடும் வகையில், தமிழ்நாட்டின் மனிதவள ஆதாரங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளின் காரணமாக, உற்பத்தி, வர்த்தகம்மற்றும்சேவைத்துறைகளில்முதலீடுசெய்வதற்கு மிகவும் உகந்த இடமாக நமது மாநிலம் உருவாகி

வருகிறது. பன்முகப் பொருளாதாரம், எளிதாக தொழில் செய்தல், முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் அரசு மற்றும் எளிதில் அணுகக்கூடிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமை ஆகிய வலுவான அடிப்படைக் காரணிகளால், தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு, தொழில் முதலீட்டாளர்களிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் அதிகளவில் தொழில் முதலீட்டினை ஈர்ப்பதற்கு நேரடிப் பொறுப்பேற்று, 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் துபாய் ஆகிய நாடுகளுக்குச் சென்றும், ஒற்றைச் சாளர அனுமதிகளை விரைவுபடுத்துவதற்கான உயரதிகாரக் குழுவிற்கு தலைமையேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். பெரும் வெற்றி பெற்ற 2019ஆம் ஆண்டு ஜனவரி மாத உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலமாக, 10.5 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ரூ.3,00,501 கோடி அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதுவரை 53 திட்டங்களுக்கான தொழில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளதோடு, 219 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பின்னர் 63 புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, 19,136 கோடி ரூபாய் முதலீடு பெறவும், 83,837 புதிய வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தமிழ்நாட்டிலுள்ள தொழில்துறை வேலை வாய்ப்பிற்கு முதுகெலும்பாகத் தொடர்ந்து விளங்கி வருவதுடன், 21.53 இலட்சம் பதிவு பெற்ற நிறுவனங்கள் மூலம், 1.38 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துவரும் ஜவுளித் துறைக்கு மேலும் ஊக்கமளிக்கவும், புதிய முதலீடுகளை ஈர்க்கவும், தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், திறனை மேம்படுத்தவும், 'தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை–2019' வெளியிடப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் புத்தொழில் தொடங்குவதற்கும், எளிதாக வணிகம் செய்வதற்கும், தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்ட "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை", தொழில் தொடங்குவதற்கான சூழ்நிலையை பெரிதும் மேம்படுத்தியுள்ளது.

பொதுச்சேவைகள் அளிக்கப்படுவதை மேம்படுத்தவும், நிருவாகத்தில் மேலும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை அரசு முழுமையாகப் பயன்படுத்தி வருகிறது. மாநிலமெங்கும் அகண்ட அலைவரிசை இணைய வசதிகளை அதிகரிப்பதற்கு, ரூ.1,815.31 கோடி மதிப்பீட்டில், பாரத்நெட் திட்டத்திற்கு, தமிழ்நாடு அரசு மத்திய அரசிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுள்ளது. இத்திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளையும் இணைக்கும். இதன் அடுத்த கட்டமாக, அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை இணைப்பதற்காக, தமிழ்நெட் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), நம்பிக்கை இணையம் (Blockchain), பொருட்களின் இணையம் (Internet of Things), தரவுப் பகுப்பாய்வு (Data Analytics) போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) அரசின் சேவைகளை மேம்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பெருமளவு வேலைவாய்ப்புகளை அளிக்கும் உந்துசக்தியாக சுற்றுலாத்துறை உள்ளது. இந்தியாவிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மாநிலத்தில் உள்ள பெரிய மற்றும் பன்முக சுற்றுலா உள்ளாற்றலை, நீடித்த நிலையான வகையில் கொண்டு சென்று உறுதிப்படுத்திடவும், அதன்மூலம் உள்ளூர் வேலை வாய்ப்பினை உருவாக்கி, அப்பகுதி மக்களின் வளத்தினை மேம்படுத்திட, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவிப்புத் திட்டம், ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், அரசு மற்றும் தனியார் பங்களிப்பின் வாயிலாக, விரிவான பகுதி மேம்பாட்டு அணுகுமுறையைக் கடைப்பிடித்து உலகத்தரத்திலான உட்கட்டமைப்புகளுடன் ஆறு சுற்றுலா வட்டங்களில் (Tourism Circuits), 295 சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்படும்.

மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள், மாநிலம் முழுவதிலும் வசிக்கும் மக்கள் அனைவருக்கும், உலகத் தரத்திற்கு இணையான மிகச்சிறந்த உயர்தர உட்கட்டமைப்பை வழங்க வேண்டுமென்று 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023'இல் குறிப்பிட்டிருந்தார். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு

அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளால், நல் ஆளுமைத் திறன் குறியீட்டில் பொதுக் கட்டமைப்பு வசதிகள் பிரிவில், நமது மாநிலம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. குடிநீர் வழங்கல், சுகாதாரம், ஊரகப் போக்குவரத்து இணைப்பு, அனைத்து வீடுகளுக்கும் மாசில்லா சமையல் எரிபொருள் வழங்குதல், அனைத்து இடங்களுக்கும் மின் இணைப்பு எளிதாகக் கிடைக்கச் செய்தல், தங்குதடையற்ற மின்சாரத்தை வழங்குதல் மற்றும் தனிநபர் மின் நுகர்வு அளவினை அதிகரித்தல் போன்றவை, நல் ஆளுமைத் திறன் குறியீட்டின் பொதுக் கட்டமைப்பு வசதிகள் பிரிவின் காரணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள், மின்பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றினார்கள். தமிழ்நாட்டில் மின் உற்பத்தித் திறனானது கடந்த 8 ஆண்டுகளில் 31,426 மெகாவாட் அளவிற்கு உயர்த்தப்பட்டு, ஏறக்குறைய இருமடங்காக அதிகரித்துள்ளது. தமிழ்நாடு மின்மிகை மாநிலமாகத் தொடர்வதில், இந்த அரசு அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. மேலும், 17,850 மெகாவாட் கூடுதல் மின்உற்பத்தித் திறனை நிறுவும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 13,319 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனைக் கொண்டு, உலக அளவில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. பரவலாக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த முறையில் 9,000 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தியை இலக்காகக் கொண்டு 'சூரிய மின்சக்தி கொள்கை–2019' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

அனைத்துப் பகுதிகளையும் அடையும் தரமான சாலைத் தொடரமைப்பு குறித்து தமிழ்நாடு என்றென்றும் பெருமை கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சாலை தொடரமைப்பு தொடர்ந்து தரம் உயர்த்தப்படுவதையும், சாலை இணைப்புகளைத் தொடர்ந்து மேம்படுத்துவதையும், சாலைப் பாதுகாப்பினை அதிகரிப்பதையும் இந்த அரசு உறுதி செய்து வருகிறது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 6,448 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை – கன்னியாகுமரி தொழில் வழித்தடத்தினால் பயனடையக்கூடிய பகுதியில் சாலைத் தொடரமைப்பை தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் 2,673.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில், எண்ணூர் துறைமுகத்திலிருந்து தச்சூர் வரையிலான சென்னை வெளிவட்டச் சுற்றுச் சாலை திட்டத்தின் முதற்கட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இச்சாலையின் மீதமுள்ள பகுதிகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன. அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் பயனாக, 2016ஆம் ஆண்டில் 71,431 ஆக இருந்த சாலை விபத்துகளின் எண்ணிக்கை, 2018ஆம் ஆண்டில் 63,923 ஆகவும், சாலை விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2016ஆம் ஆண்டில் 16,092 லிருந்து 2018ஆம் ஆண்டில் 11,378 ஆகவும் கணிசமாகக் குறைந்துள்ளது. சாலை விபத்துகளில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை, 2010ஆம் ஆண்டில் 10,000 வாகனங்களுக்கு சராசரியாக 12 ஆக இருந்தது. 2019ஆம் ஆண்டில் இது, மூன்றாகக் குறைந்துள்ளது.

மாநிலத்தின் மூலைமுடுக்குகளுக்கு எல்லாம் அளிக்கப்பட்டுள்ள தரமான பேருந்துப் போக்குவரத்து வசதி, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. நாளொன்றுக்கு 1.63 கோடி பயணிகள் மாநிலப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்கின்றனர். இந்த பொதுப் போக்குவரத்துப் பயணிப்பின் பங்கை மேலும் அதிகரிப்பதில் அரசு உறுதியாக உள்ளது. நம் மாநிலத்தில், பேருந்துப் போக்குவரத்துக் கட்டணங்கள் நாட்டிலேயே குறைவாக இருக்கின்ற போதிலும், போக்குவரத்து செயல்திறனை எவ்விதத்திலும் நாம் விட்டுக்கொடுப்பதில்லை. இதற்குச் சான்றாக, 2016–2017ஆம் ஆண்டில், மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பின் செயல்பாட்டுத் திறன் அளவீடுகளுக்கான 11 விருதுகளையும், 2017–2018ஆம் ஆண்டில் 9 விருதுகளையும் தமிழ்நாட்டின் 8 மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் வென்றுள்ளன. இந்திய அரசின் FAME-II திட்டம் மற்றும் ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன், மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் மின்சார வாகனங்களை பெருமளவில் இயக்கவுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் வேகமாக வளர்ந்து, சென்னை மாநகருக்குப் பெருமை சேர்க்கின்றது. 45 கிலோமீட்டர் நீளத்திற்கான சென்னை மெட்ரோ இரயிலின் முதற்கட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையிலான முதற்கட்டத்தின் நீட்டிப்புப் பணிகள் 2020ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவடையும். மேலும், 69,180 கோடி ரூபாய் செலவில் 118.9 கிலோமீட்டர் நீளத்திற்கு மூன்று வழித்தடங்களை அமைக்கும்

இரண்டாம் கட்ட திட்டப் பணிகளைச் செயல்படுத்த அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. இரண்டாம் கட்டப் பணியில், 52.01 கிலோமீட்டர் நீளத்திற்கு நிதியுதவி அளித்திட ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்து, முதல் தவணைக்கான கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இரண்டாம் கட்டத்தின் மீதமுள்ள வழித்தடங்களுக்காக, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய வளர்ச்சி வங்கி ஆகிய பன்னாட்டு நிதியுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டத்தில், 50 சதவீத பங்குமூலதனத் தொகையை மத்திய அரசு வழங்கியதைப் போலவே, இரண்டாம் கட்ட திட்டத்திலும் 50 சதவீதம் பங்களிப்பிற்கான ஒப்புதலை விரைவில் வழங்குமாறு மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன். சாத்தியக்கூறு ஆய்வின் அடிப்படையில், சென்னை விமான நிலையத்திலிருந்து, புதிய புறநகர் பேருந்து நிலையம் அமையவிருக்கும் கிளாம்பாக்கம் வரையிலான 15.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு, மெட்ரோ இரயில் வழித்தடத்தை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது. தாம்பரம்–வேளச்சேரி வழித்தடத்தில் ஏற்படும் அதிகமான போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு, 15.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு இரயில் போக்குவரத்து முறை ஒன்றினை அரசு அமைக்கும். இதற்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தயாரிக்கும்.

எதிர்காலத்தில் அனைத்துவகை போக்குவரத்து வழிமுறைகளையும் ஒருங்கிணைப்பது அவசியமாகும். 'சென்னைப் பெருநகர ஒருங்கிணைக்கப்பட்ட பன்முகப் போக்குவரத்து ஆணையச் சட்டம்' (CUMTA) இயற்றப்பட்டு, அதற்குண்டான விதிகளும் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. 'சென்னை மாநகரக் கூட்டாண்மை' என்ற தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டத்தை உலக வங்கியின் ஒத்துழைப்புடன் செயல்படுத்த தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. அதிகாரம் பெற்ற சென்னைப் பெருநகர ஒருங்கிணைக்கப்பட்ட பன்முகப் போக்குவரத்து ஆணையத்தின் மூலமாக, சென்னை நகரின் பல்வேறு போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைத்து, மக்களுக்கு தடையற்ற போக்குவரத்தினை வழங்குவதை ஒரு முக்கிய இலக்காக இத்திட்டம் கொண்டுள்ளது.

இந்தியாவிலேயே அதிக நகரமயமாக்கப்பட்ட பெரிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. எனவே, தரமான நகர்ப்புர உட்கட்டமைப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் சிறப்புக் கவனம் தேவைப்படுகிறது. சீர்மிகு நகரங்கள் திட்டம் (SMART Cities), அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT) போன்ற மத்திய அரசின் திட்டங்களுடன், பதினான்காவது நிதி ஆணையத்தின் வாயிலாகப் பெறப்பட்ட மானியங்கள், மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி பெறப்படும் நிதிப் பகிர்ந்தளிப்பு ஆகியவை தவிர, கூடுதலாக ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் மற்றும் சென்னைப் பெருநகர மேம்பாட்டு இயக்கத்தின் வாயிலாக, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை மாநில அரசு பெருக்குகிறது. உலக வங்கி நிதி உதவி அளிக்கின்ற தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி அளிக்கின்ற தமிழ்நாடு நகர்ப்புர முன்னோடி முதலீட்டுத் திட்டம் போன்ற பன்னாட்டு நிதி உதவியின் வாயிலாக, நகர்ப்புர உட்கட்டமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கூடுதல் நிதி ஆதாரங்கள் உறுதி செய்யப்படுகின்றன.

அடிப்படைத் தேவையான வீட்டுவசதியை அனைவருக்கும் அளிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. ஊரகப் பகுதிகளில், முதலமைச்சரின் சூரிய ஒளி எரிசக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், 2011–2012ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 3,80,000 வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்திரா வீட்டு வசதித் திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 2011–2012ஆம் ஆண்டு முதல், இதுவரை, 9,69,189 வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புரப் பகுதிகளில் தரமான வீடுகளின் பற்றாக்குறையைப் போக்க, தமிழ்நாடு அரசு முறையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பிரதம மந்திரியின் நகர்ப்புர வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 31,252.95 கோடி ரூபாய் மொத்தத் திட்ட மதிப்பீட்டில், 6.94 இலட்சம் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட பொதுக் கட்டட மற்றும் வளர்ச்சி விதிகள், இயலக்கூடிய விலையில் வீடுகளை வாங்குவதற்கு உத்வேகத்தை அளித்துள்ளன.

பல முக்கிய சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக, குழந்தைகள் இறப்பு விகிதம், தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் சராசரி ஆயுட்காலம் ஆகிய சுகாதாரக் குறியீட்டு இலக்குகளை எட்டுவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே வெற்றிகரமாகச்

செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன் ஒத்த தேசிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, பிரதம மந்திரி ஜன ஆரோக்கியா யோஜனா திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடனும், பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்துடனும் இணைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், இதுவரையில் **40.16** இலட்சம் நபர்களுக்கு **6,487.82** கோடி ரூபாய் செலவிலான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு, உயர் அறுவை சிகிச்சைகளுக்காக **8,513** நபர்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து நிதியுதவியும் அளிக்கப்பட்டுள்ளது. டெங்கு, மலேரியா மற்றும் சிக்குன்குனியா போன்ற கொசுக்களால் பரவும் நோய்களைத் தடுக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி, பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய பகுதிகளில் உள்ள அனைத்து ஏழைக் குடும்பங்களுக்கும் விலையில்லா கொசுவலைகள் விநியோகிக்கப்படும்.

சுகாதாரத் துறையில் மனிதவள ஆதாரங்களை மேம்படுத்துவது அரசின் முக்கிய இலக்காக உள்ளது. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைப்பது, மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குப் பார்வையாகும். அவர் காட்டிய வழியில், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையில், இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் **9** புதிய மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கான பணிகள் **3,267.25** கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைக்க விரைவாக இடங்களைத் தேர்வு செய்ததாலும், மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்ததாலும் இத்தனை மருத்துவக் கல்லூரிகளைப் பெறுவது சாத்தியமானது.

உலகத்தரம் வாய்ந்த மனிதவளத்துடன் கூடிய அறிவார்ந்த எழுச்சிமிகு சமுதாயத்தை உருவாக்குவதே தமிழ்நாட்டின் நோக்கமாகும். அரசின் தொடர் நடவடிக்கைகளின் பயனாக, மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை விகிதாச்சாரம் **49.3** சதவீதம் என்ற அளவில், மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. மாணவர்கள் உயர்கல்விக்குச் செல்லும் வசதிகளை எளிதாக்கி, உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக புதிய கல்லூரிகளைத் தொடங்குவது, புதிய படிப்புகளைத் தொடங்கியது, கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட முதலீடுகளைச் செய்வது, புதிய ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிப்பது, காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது போன்ற நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தை ஒப்புயர்வு உயர்கல்வி நிறுவனமாக (Institution of Eminence) இந்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகம், மாநிலச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மாநில பொதுப் பல்கலைக்கழகமாக இருந்து வருவதன் காரணத்தால், ஒப்புயர்வு உயர்கல்வி நிறுவனம் என்ற தகுதி நிலையை அடைந்த பின்னரும்கூட, தொடர்ந்து மாநிலச் சட்டத்தின் கீழ் இயங்கும் என்றும், மாநில இட ஒதுக்கீட்டுக் கொள்கை தொடர்ந்து அதற்குப் பொருந்தும் என்றும் இந்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது. இது குறித்து ஆய்வு செய்வதற்காக, மாண்புமிகு அமைச்சர்கள் ஐவரைக் கொண்ட ஒரு குழுவை, அரசு அமைத்துள்ளது. அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய முடிவு எடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசு, தொடர்ந்து எடுத்து வரும் நடவடிக்கைகளின் காரணமாக, மாணவர்களுக்கு தேவைப்படும் தரமான உட்கட்டமைப்பு, சத்துள்ள மதிய உணவு, போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள், பாடப்புத்தகங்கள், தரமான கற்பித்தலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக, நூறு விழுக்காடு சேர்க்கை, மாணவர்களைத் தக்க வைத்தல் போன்றவை உறுதி செய்யப்பட்டு வருகின்றன. கல்வியின் தரத்தை தொடர்ந்து பாதுகாக்கும் வகையில், நவீன கருத்துகளை உள்ளடக்கிய பாடத்திட்டத்தை தொடர்ந்து திருத்தியமைத்துப் புதுப்பிக்கும் பணியை அரசு செய்து வருகிறது. விரைவுத் தகவல் குறியீடுகளைக் கொண்ட தொழில்நுட்ப பயன்பாடு (QR), ஒலி–ஒளி பாடத்திட்ட விளக்கப்படங்கள், தமிழ்நாடு ஆசிரியர்கள் இணையதளம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக **24** மணி நேரமும் ஒளிபரப்பப்படும் ‘கல்வி’ தொலைக்காட்சி வாயிலாக, செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எல்.கே.ஜி. முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான வகுப்புகளுடன் மாதிரி தொகுப்பு பள்ளிகளை செயல்படுத்தும் திட்டமானது, தற்போது மாநிலத்திலுள்ள **120** அரசுப்

பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

பல்வேறு தொழிற்சாலைகளுக்கு திறன் மேம்பட்ட பணியாளர்கள் கிடைப்பதற்கு ஏதுவாக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், திறன் இடைவெளிகளை அறியும் ஆய்வினை செய்து, அனைத்து மாவட்டங்களுக்கும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி உள்ளது. இந்த அணுகுமுறை, தொழில்துறை வேலைவாய்ப்புக்கு உகந்த திறன் மேம்பாட்டினை மையப்படுத்தி, தொழிற்சாலைகளுக்கு திறன்மிக்க மனிதவள ஆற்றல் கிடைப்பதை உறுதிசெய்யும். தானியங்கி மற்றும் தானியங்கி கூறுகளைக்கொண்ட இயந்திரக் கருவிகள்; சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு; பொருட்கள் நகர்வு மேலாண்மை ஆகிய மூன்று துறைகளில், உச்ச திறன் மேம்பாட்டு மையங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதைப் போன்று, கட்டுமானப் பிரிவிலும், வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுப் (BFSI) பிரிவுகளிலும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட உள்ளன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்ககத்தின் கீழ், ஒரு சிறப்பு முயற்சியை அரசு தொடங்கி, கல்லூரி இடைநிற்றல் மாணவர்களில் ஒரு இலட்சம் நபர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கப்படும். இதனால் அவர்கள், தங்கள் உயர்கல்விப் படிப்பினை நிறைவு செய்யலாம் அல்லது உரிய வேலைவாய்ப்பினைக் கண்டறியலாம்.

2019ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல், ‘ஒரு முறை மட்டுமே பயன்படுத்தி எறியக்கூடிய நெகிழிகளைத்’ தடை செய்ததற்காக தமிழ்நாடு அரசு உலகளாவிய பாராட்டினைப் பெற்றுள்ளது. நெகிழிகள் தடை செய்யப்பட்டதற்கு மாநிலத்திலுள்ள மக்கள் தாமாகவே மனமுவந்து ஆதரவு அளித்ததுடன் நெகிழிகளின் பயன்பாட்டினையும் பெருமளவு குறைத்துள்ளனர். நெகிழிகளை தடை செய்வதிலும், அதனை தீவிரமாகச் செயல்படுத்துவதிலும் அதற்கான மாற்றுப் பொருட்கள் பயன்பாட்டினை ஊக்குவிப்பதிலும் அரசு முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. பசுமைச் சூழல் நிதி மற்றும் தேசிய பருவநிலை மாற்றத் தழுவல் நிதியின் கீழ், 4,682 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு திட்டங்களுக்கான கருத்துருக்களை மத்திய அரசிடம் இந்த அரசு அனுப்பியுள்ளது. இந்தக் கருத்துருக்களுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசினை நான் கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டை மேலும் பரந்த தளத்திற்கு எடுத்துச் செல்வதும், விளையாட்டுக் கலாச்சாரத்தை மேலும் வளர்ப்பதுமே இந்த அரசின் குறிக்கோளாகும். அம்மா இளைஞர் விளையாட்டு திட்டத்தின் கீழ், அனைத்து கிராமங்கள் மற்றும் பேரூராட்சிகளில் இளைஞர் மன்றங்கள் அமைக்கப்பட்டு, தேவையான விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய விளையாட்டு மைதானங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படுவதன் வாயிலாக, விளையாட்டு வீரர்களை அடையாளம் காண்பது மட்டுமல்லாமல், இளைஞர்களின் ஆற்றலை சரியான வழியில் நெறிப்படுத்த முடியும். பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுகளில் பதக்கம் வென்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் உயரிய ஊக்கத்தொகை வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டமும், வேலைவாய்ப்பில் மூன்று சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் கொள்கையும், மாநிலத்திலுள்ள விளையாட்டு வீரர்களை பெரிதும் ஊக்குவித்து வருகின்றது.

கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் வாயிலாக, பெண்களின் முன்னேற்றத்தை மேம்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சென்னை மாவட்டம் நீங்கலாக, மாநிலத்தின் அனைத்து ஒன்றியங்களிலும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற வறுமை ஒழிப்புக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் போன்ற சமுதாயம் சார்ந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களில் சமூக–பொருளாதாரப் புரட்சிக்கு வித்திடும் வகையில் அமைந்துள்ளன. 2019–2020ஆம் ஆண்டில், மாநிலத்திலுள்ள சுய உதவிக் குழுக்களுக்கு 12,500 கோடி ரூபாய் அளவிற்கு கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திருமண உதவித் திட்டங்கள், தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ‘பெண் குழந்தையைக் காப்போம்; பெண் குழந்தைக்குக் கற்பிப்போம்’ ஆகிய திட்டங்கள் உட்பட பெண்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தியதன் விளைவாக, கடந்த மூன்று ஆண்டுகளில், குழந்தைப் பிறப்பில் பாலின விகிதம் 917 என்ற அளவிலிருந்து 943 ஆக அதிகரித்துள்ளது. பொது மற்றும் தனியார் இடங்களில் வன்முறைக்கு

ஆளாகும் சூழ்நிலைகளை சந்திக்க நேரிடும் பெண்களுக்கு 24 மணி நேரமும் உடனடியாக உதவி கிடைப்பதை தமிழ்நாடு உறுதி செய்துள்ளது. பெண்கள், எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல், பாதுகாப்பாக உணரச் செய்வதில், ‘காவலன்’ செயலி பெரும் வெற்றி பெற்றுள்ளது. குழந்தை நலனை குறிக்கோளாகக் கொண்ட திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தியதற்காக, 2018–2019ஆம் ஆண்டுக்கான ‘தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தின்’ கீழ் வழங்கப்பட்ட விருதுகளில், ‘ஒட்டுமொத்த சிறந்த செயல்பாடு’ மற்றும் ‘திறன் மேம்பாடு’ பிரிவுகளில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மூத்த குடிமக்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஒரு மக்கள் நல அரசின் முக்கியக் கடமையாகும். தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் மூத்த குடிமக்களின் விகிதாச்சாரம் உயர்ந்து வருகிறது. மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் ஒய்வூதியம் வழங்கிடும் ஐந்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 29.80 இலட்சம் ஆகும். நடப்பாண்டு முதல், தகுதி வாய்ந்த மேலும் 5 இலட்சம் நபர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார். சமூகப் பாதுகாப்பு / முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வறுமை நிலையைக் கணக்கிடுவதற்கான அளவுகோலை இந்த அரசு தளர்த்தியுள்ளது. அதன்படி, பயனாளிக்குச் சொந்தமான அசையாச் சொத்து மதிப்பின் வரம்பு 50,000 ரூபாயிலிருந்து 1,00,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அசையாச் சொத்தின் வரையறையில், இலவச வீடு வழங்கிடும் திட்டத்தில் அரசிடமிருந்து பெறப்பட்ட வீடு சேர்க்கப்பட மாட்டாது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட சமூகத்தில் பின்தங்கிய பிரிவுகளில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பையும், உரிமையையும் வழங்கி, அனைவரையும் அரவணைக்கும் ஒரு சமூகத்தை உருவாக்குவதையே தமிழ்நாடு அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த குடும்பங்களுக்கு, கல்விக்கான வாய்ப்புகள், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கு திட்டங்கள் கவனமாகத் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் பொருளாதார முன்னேற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சமூக நீதியை காப்பதில் உறுதி கொண்டுள்ள இந்த அரசு, ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கென மாநிலத்தில் நடைமுறையில் உள்ள 69 சதவீத இட ஒதுக்கீட்டை முழுமையாகப் பாதுகாக்கும் வேலைவாய்ப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான 4 சதவீத இட ஒதுக்கீடு உறுதி செய்யப்படுவதுடன், அனைத்து நிலைகளிலும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அவர்களுக்குத் தகுந்த பணியிடங்கள் அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன.

மாநில அரசின் முன்னுரிமைக் கொள்கைகளையும், அவற்றின் செயலாக்கத் திட்டங்களையும் இங்கு எடுத்துரைத்துள்ளேன். கருத்துக்களை அலசி ஆலோசிக்கும், மாநிலத்தின் மிக உயரிய மக்களாட்சி அமைப்பான இந்த மாமன்றம், என்னுடைய உரையில் அடங்கியுள்ள கருத்துகளை ஆராய்ந்து, ஆக்கப்பூர்வமாக விவாதிக்க உள்ளது. இந்த விவாதங்கள் மக்களின் நலனையும், மாநிலத்தின் ஒட்டுமொத்த சமூக–பொருளாதார மேம்பாட்டையும் மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன். இந்தக் குறிக்கோளுடன், நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் உயரிய பங்கினை இந்தப் பேரவைக்கு அளிப்பீர்கள் என உறுதியாக நம்புகிறேன். மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும், 2020ஆம் ஆண்டு மகிழ்ச்சிகரமாகவும், வளமானதாகவும் அமைய எனது வாழ்த்துகளையும், பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி ! வணக்கம் !

ஜெய்ஹிந்த்!

விவசாய குடும்பத்தில் பிறந்த நான், மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில், மக்கள் நலனைப் பற்றியே சிந்தித்து ஆட்சி நடத்தி வருகிறேன்!

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 06.01.2020 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய பதிலுரை–09.01.2020

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 06.01.2020 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலுரை ஆற்றுகிறேன்.

அறமும், தமிழும் வளர்த்த நற்றமிழ் நாயகி!

அறிவும், ஆளுமையும் மிக்க அன்னைத் தமிழரசி !

அகிலம் போற்றும் அன்பின் திருஉருவம் !

‘அம்மையே’ என்று வணங்கத் தோன்றும் ‘அம்மா’ என்னும் தெய்வம் !

சமூக நீதி காத்த சரித்திர வீராங்கனை!

காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வி!

தமிழர்களின் எண்ணங்களைப் பிரதிபலித்து “விஷன் 2023” தந்த தீர்க்கதரிசி !

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எங்கள் குலச்சாமி!

மக்கள் மனதில் என்றென்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் மறைந்தும் மறையாத மக்கள் தலைவி!

இசைபட வாழ்ந்த ஏழிசை ராகம்!

சுவைபட பேசிய அறுசுவை அமுதம்!

மக்களை அரவணைக்கும் ஐவகை நிலம்!

நல்லதைப் போதித்த நான்கு மறை!

நாட்டைக் காக்கும் முப்பெரும் சக்தி!

வாழ்க்கையை நெறிப்படுத்தும் இருவரிக் குறள்!

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து எங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் குடியிருக்கும் ஒப்பற்ற ஒரே உன்னதத் தலைவி!

எங்கள் அம்மா தெய்வதை போற்றி வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் திருமுகத்தால் இன்னமும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் இந்த மாமன்றம்; மாண்புமிகு அம்மாவின் உரை வீச்சால் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கும் இந்தப் பேரவை; எளியவர்களையும் வலியவர்களாக மாற்றி இப்பேரவையில் அமர வைத்த வல்லமை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களையும், இம்மாமன்றத்தையும் வணங்கி என் பதிலுரையை துவக்குகிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 06.01.2020 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரன் அவர்களால் வழிமொழியப்பட்ட இத்தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். பாராட்டியும், குறை கூறியும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

2011ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மீண்டும் அம்மாவின் ஆட்சி மலர்ந்தபோது, "துயரத்தை மறந்து விடுங்கள், இனி சிரித்துக் கொண்டே இருங்கள், உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையும், அதை நான் உறுதி செய்கிறேன்" என்றும், "எங்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை, அளித்துள்ள பொறுப்புகளை கட்டாயமாக நிறைவேற்றுவோம்" என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அவர்கள், தன் ஆட்சிக் காலத்தில் சொன்னதை மட்டுமல்ல, சொல்லாமல் விட்ட நல்ல பல மக்கள் நலத்திட்டங்களையும் செயல்படுத்தினார்கள்.

சங்க காலத்தில் நெடுஞ்செழியன் என்னும் மாமன்னர், பல மன்னர்களை போர்க்களத்தில் வென்றவர். போர் முனையில் மட்டுமின்றி, ஏர் முனையிலும் மன்னர் சிறந்து விளங்க வேண்டும் என்று எண்ணிய புலவர் ஒருவர்,

"நிலன் நெறி மருங்கின் நீர்நிலைப் பெருக" என்று மன்னருக்கு அறிவுரை கூறினார். அதாவது, பகைவரை வென்று, அவர்களை சிறையில் இடுவதை விட, மழையால் பெருகும் நீரை ஏரிகளிலும், குளங்களிலும் தேக்குவதே ஒரு நாட்டிற்கு நலன் பயக்கும். அவ்வாறு நீரை தேக்கி வைத்தவர்களின் பெயர்தான் புகழோடு உலகத்தில் நிலைக்கும் என்றார். அப்புலவரின் கூற்றுக்கு இணங்க, நீண்ட நாட்களாக தூர்வாரப்படாமலும், சீரமைக்கப்படாமலும் இருந்த பெரிய ஏரிகள், சிறு பாசன ஏரிகள், குளங்கள், ஊரணிகள் மற்றும் குட்டைகள் போன்ற 34,871 நீர்நிலைகளை 2017 முதல் இன்று வரை 2,182 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள், குடிமராமத்து திட்டத்தின் கீழ், விவசாய சங்கங்கள் மூலமாக அவர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் பராமரிப்பில் உள்ள 1,315 நீர்நிலைகள் 811.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர ஆறுகள், ஓடைகள், கால்வாய்கள் போன்றவற்றில் 1,141 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 59 பெரிய தடுப்பணைகள் பொதுப்பணித் துறையின் மூலமும், 40 ஆயிரம் சிறிய தடுப்பணைகள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமும் கட்டப்பட்டுள்ளன.

வேளாண் பெருமக்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கென அக்கறையுடன் செயல்படுத்தி உண்மையாக உழைக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசின் செயல்பாடுகளை இயற்கையே அங்கீகரிக்கும் வகையில், மாநிலம் முழுவதும் பருவ மழை பொழிந்து,

"உண்மையாக உழைக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசின் செயல்பாடுகளை இயற்கையே அங்கீகரிக்கும் வகையில், மாநிலம் முழுவதும் பருவ மழை பொழிந்து, தூர்வாரப்பட்ட பெரும்பாலான நீர்நிலைகள் நீர் நிறைந்து ததும்பி நிற்கின்றன."

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

தூர்வாரப்பட்ட பெரும்பாலான நீர்நிலைகள் நீர் நிறைந்து ததும்பி நிற்கின்றன.

காவேரி ஆற்றுப் பாசன பகுதிகளில், கடைமடை வரை தண்ணீர் செல்ல கடந்த காலங்களில் பல நாட்கள் ஆகும். ஆனால் தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்து திட்டமும், காவேரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளும் செம்மையாக மேற்கொள்ளப்பட்டதால், இந்த ஆண்டு 15 முதல் 20 நாட்களுக்குள் கடைமடை வரை தண்ணீர் தங்குதடையின்றி சென்றடைந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் பயிர் சாகுபடி பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

"கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி" என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலுக்கு ஏற்ப, நமது விவசாயிகளை பேணிப் பாதுகாத்து, அவர்களுக்குத் தேவையான அனைத்து பணிகளையும் சரியான நேரத்தில் செய்து கொடுத்த காரணத்தால் தான், தமிழ்நாடு முழுவதும் கடந்த ஆண்டு இதே நாளில் 85 இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் என இருந்த வேளாண் பயிர் சாகுபடி பரப்பு, இந்த ஆண்டில் இதுவரை 7 இலட்சம் ஏக்கர் கூடுதலாக, அதாவது 97 இலட்சத்து 31 ஆயிரம் ஏக்கரில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்தாண்டு, தமிழ்நாடு உணவு தானிய உற்பத்தியில் ஒரு புதிய மைல் கல்லை அடையும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தி பாதுகாக்கவும், வேளாண்மைக்கு நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், நன்னீர் தேவையை குறைக்கவும், நீர்நிலைகள் மாசுபடுவதை தடுக்கவும், கழிவு நீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்தவும், நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் என்ற ஒரு தீவிர மக்கள் இயக்கம் சென்ற ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு வலு சேர்க்கும் விதமாக, சென்னை மாநகரில் பெருகிவரும் தொழிற்சாலைகளுக்கு தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் வகையில், கோயம்பேடு, கொடுங்கையூர் பகுதிகளில் நாளொன்றுக்கு தலா 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் என்னால் துவக்கி வைக்கப்பட்டன. இவ்விரண்டு நிலையங்களின் உற்பத்தித் திறன் தலா 60 மில்லியன் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது. இதன் மூலம் இந்தியாவிலேயே 20 சதவீதம் கழிவுநீர் மறுசுழற்சி செய்யப்படும் ஒரே நகரமாக சென்னை திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சென்னை மாநகரில் உள்ள கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் உள்ளிட்ட நீரோடைகளில் கழிவு நீர் கலப்பதை முற்றிலும் தடுத்திட 2,371 கோடி ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. மேலும், சென்னை குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களால் மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் தலா 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அதே போன்று, 27.06.2019 அன்று நெம்மேலியில் 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட ஒரு புதிய திட்டத்தினை நான் துவக்கி வைத்துள்ளேன். பேரூரில், 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இத்திட்டங்களினால் வரும் காலத்தில் பருவமழை பொய்த்தாலும் சென்னை நகர மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்க முடியும் என்பதை திடமாக இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், கடந்த 3 ஆண்டுகளில், பொது மக்களின் குடிநீர்த் தேவைகளுக்காக புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் 57.81 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் சுமார் 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், தேனி, திண்டுக்கல், தென்காசி, விழுப்புரம், நீலகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 12.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 373 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 15 நகர்ப்புர தனி குடிநீர்த் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதே போன்று கிருஷ்ணகிரி, தேனி, விருதுநகர், அரியலூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 5.55 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 407 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 பாதாள சாக்கடைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு விவசாயம் என்போம். "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு" என்றார் திருவள்ளுவர். "சேற்றில் உழவன் கால் வைத்தால் தான் மக்கள் சோற்றில் கை வைக்க முடியும்" என்பதை ஒரு விவசாயி

என்ற முறையில் நான் நன்கு உணர்ந்தவன். கடந்த 8 ஆண்டுகளில் ஆறாவது முறையாக உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி தமிழ்நாடு சாதனை புரிந்துள்ளது. மேலும், கடந்த 8 ஆண்டுகளில், 5 முறை மத்திய அரசின் கிருஷி கர்மான் விருதினை பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

பிரதம மந்திரியின், பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வேளாண் பெருமக்களுக்காக 7 ஆயிரத்து 283 கோடி ரூபாய் பயிர் காப்பீட்டு இழப்பீட்டு நிதியை பெற்றுத் தந்துள்ளது. இது தேசிய அளவில் ஒரு சாதனையாகும்.

2018ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் அமெரிக்கன் படைப்புழுவின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களை பாதுகாக்க அரசு உடனடி நடவடிக்கை எடுத்ததுடன், பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு 186 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிவாரணமும் வழங்கியது மாண்புமிகு அம்மாவுடைய அரசு. இவ்வாண்டு அமெரிக்கன் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசே, 47 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் பூச்சிக்கொல்லி மருந்தினை தெளிக்க நடவடிக்கை எடுத்து, மக்காச்சோளம் பயிரிட்ட வேளாண் பெருமக்கள் இப்பயிர் பாதுகாப்பு நடவடிக்கையை பெரிதும் வரவேற்பை பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக நடப்பு நிதியாண்டில், 31.12.2019 வரை சுமார் 9 இலட்சம் குறு, சிறு விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. பருவ மழை சிறப்பாக இருந்ததாலும், சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளதாலும், இந்த ஆண்டு நெல் உற்பத்தி அதிகரிக்கும் என்பதால், வேளாண் பெருமக்களுக்கு உரிய விலை கிடைக்க, தேவைப்படும் இடங்களில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும்.

பல்வேறு தரப்பு மக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளை பரிசீலித்து, சர்க்கரை குடும்ப அட்டைகளை, அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றுவதற்கு நான் உத்தரவிட்டேன். இதன் மூலம், மக்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப, அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு போதிய மழையும், விவசாயத்திற்கு தேவையான தண்ணீரும் உள்ள காரணத்தாலும், அதிக பரப்பிலான பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருவதாலும், வேளாண் பெருமக்கள் இடுபொருட்கள் மற்றும் பிற பணிகளுக்காக கணிசமான பணத்தை செலவழித்திருப்பதாலும், மக்கள் அனைவரும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாட 1,000 ரூபாயுடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்க நான் உத்தரவிட்டு, அதன்படி அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இன்றையலிருந்து வழங்கப்பட்டு வருகிறது என்று இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தில் உதித்த விலையில்லா கறவை மாடுகள், விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் ஆகியவற்றினால் சமீபத்தில் வெளியான கால்நடை மற்றும் பறவை இனங்களுக்கான கணக்கெடுப்பில், தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை 7.6 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளது. மாநில பொருளாதார வளர்ச்சியில் கூட கால்நடைத் துறை வளர்ச்சியின் பங்கு கூடியுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக, கிராமப்புற பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளது.

வேளாண் பெருமக்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் சென்றடையும் நோக்குடன், தலைவாசல் கூட்டு ரோட்டுக்கு அருகில், நவீன கால்நடைப் பூங்கா ஒன்று சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது நான் அறிவித்தேன். அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்க நாட்டில் உள்ள உலகப் புகழ் பெற்ற பஃபலோ கால்நடைப் பண்ணையை பார்வையிட்டு அங்கு பயன்படுத்தப்படும் நவீன யுக்திகளை தமிழ்நாட்டில் உள்ள வேளாண் பெருமக்களும் பயன் அடையும் வகையில், தலைவாசலில் புதியதாக உருவாக்கப்பட உள்ள கால்நடைப் பூங்காவில் பயன்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். இவ்வளாகத்தில் தமிழ்நாட்டின் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல திட்டங்களுக்கு முன்னோடியாகத் திகழும் **நமது மாநிலத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவையைப் போலவே, கால்நடைகளின் அவசர சிகிச்சைக்கென 'அம்மா ஆம்புலன்ஸ்' சேவையை துவக்கி வைத்து, மாண்புமிகு அம்மாவின் அரசு விவசாயிகள் பயன்பெற செவ்வனே செயல்படுத்தி வருகிறது.**

தமிழ்நாட்டில் 200 கோடி ரூபாய் செலவில் திருவற்றியூர் குப்பம், 120 கோடி ரூபாய் செலவில் தரங்கம்பாடி மற்றும் 100 கோடி ரூபாய் செலவில் கடலூர் முதுநகர் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க மத்திய அரசின் மீன்வளம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், மேற்கண்ட மீன்பிடி துறைமுகங்களுக்காக தமிழ்நாடு அரசு மத்திய அரசுடன் 420 கோடி ரூபாய்க்கு புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்துள்ளது. மத்திய அரசின் இத்திட்டத்தின் கீழ், இதுவரை அதிக அளவு நிதி உதவி பெற்ற மாநிலம் தமிழ்நாடு ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கடலில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் மீனவர்களின் பாதுகாப்பினை தொடர்ந்து உறுதிபடுத்திட தமிழ்நாடு அரசு முன் உதாரணமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆழ்கடல் மற்றும் அண்மைக்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு 25,000 VHF கருவிகள், 160 செயற்கைக்கோள் கருவிகள், இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் மூலம் 507 டிரான்ஸ்பான்டர் கருவிகள் மற்றும் 200 நாவிக் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அனைத்து மீனவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பல்வேறு முன்னேற்றங்களையும், தொழில் நுட்பங்களையும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து கொண்டு தமிழ்நாட்டில் செயல்படுத்திடவும், வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்களிடமிருந்து முதலீடுகளைப் பெற்று தமிழ்நாட்டை மேலும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லவும், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு 26.08.2019 முதல் 10.09.2019 வரை நான் அரசுமுறை பயணம் மேற்கொண்டேன்.

இங்கிலாந்திலுள்ள சர்வதேச அளவில் புகழ்பெற்ற கிங்ஸ் மருத்துவமனையின் கிளையினை தமிழ்நாட்டில் துவக்கிட அந்நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதன் அடிப்படையில், அந்நிறுவனத்துடன் பல்வேறு நிலையிலான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் தமிழ்நாட்டில் கிங்ஸ் கிளை மருத்துவமனை அமைக்கப்படும்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் அதிகரிக்கவும், உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளை பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாடுவாழ் தமிழ்மக்களையும், பிற முதலீட்டாளர்களையும் வரவேற்கும் வகையில் “யாதும் ஊரே” என்ற முன்னோடித் திட்டத்தை கடந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் நான் அறிவித்து, இத்திட்டத்தை அமெரிக்காவில் நான் துவக்கி வைத்தேன்.

இந்தப் பயணத்தில், இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளிலும், துபாயிலும் உள்ள தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து, அதன் மூலம் 8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீடுகளை ஈர்த்து 41 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதனால் 35 ஆயிரத்து 520க்கு மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன. மேற்படி ஒப்பந்தங்களில் 5 நிறுவனங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

மேலும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், குறிப்பாக தமிழ் இளைஞர்கள், தமிழ்நாட்டில் பல்வேறு முதலீடுகளைச் செய்ய அதிக ஆர்வம் காட்டி வருவதும் இந்த அரசுமுறைப் பயணத்தின்போது நான் அறிந்தேன்.

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மூலம் ஒற்றைச் சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து விரைவுபடுத்திட எனது தலைமையில் ஒரு தனிக் குழு, முதலமைச்சர் அலுவலகத்தில் முதலீடு செய்வதை எளிதாக்குதல் பிரிவு, பாதுகாப்பு மற்றும் வானூர்தி தொழில் பூங்கா, மின்சார வாகனப் பூங்கா, Start-Up எனப் புத்தொழில்களை ஊக்குவிக்க தனிக் கொள்கை, தகவல் தொழில்நுட்பக் கொள்கை, வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை என தொழில் துறை மேம்பட பல்வேறு கொள்கைகளை வகுத்து, திட்டங்களை செயல்படுத்தி மாண்புமிகு அம்மாவின் அரசு வெற்றி கண்டு வருகிறது.

> **“புத்தொழில்களை ஊக்குவிக்க தனிக் கொள்கை, தகவல் தொழில்நுட்பக் கொள்கை, வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை என தொழில் துறை மேம்பட பல்வேறு கொள்கைகளை வகுத்து, திட்டங்களை செயல்படுத்தி மாண்புமிகு அம்மாவின் அரசு வெற்றி கண்டு வருகிறது.”**
>
> — மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

2015ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்ற ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் 10 இலட்சம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் 3 இலட்சத்து 501 கோடி ரூபாய் அளவிற்கான தொழில் முதலீடுகள், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஈர்க்கப்பட்டன. இவற்றில் 272 நிறுவனங்கள் பணிகளை துவக்கி, பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. இது, கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் ஏறக்குறைய 90 சதவீதமாகும். இது மாண்புமிகு அம்மாவின் அரசு மீது தொழில் முதலீட்டாளர்கள் கொண்ட திடமான நம்பிக்கையை காட்டுவதாக உள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை சார்பில் கையொப்பம் இடப்பட்ட 3,592 தொழில் திட்டங்கள், தங்கள் பணிகளைத் துவக்கி பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

வெற்றிகரமாக நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பிறகு, இதுவரை 19 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 63 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 83 ஆயிரம் வேலை வாய்ப்புகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

தொழில் சிக்கல்கள் காரணமாக மூடப்பட்ட நோக்கியா நிறுவன தொழிற்சாலையினை வாங்கி, மின்னணு சாதன உற்பத்தியினை மேற்கொள்ள சால்காம் நிறுவனம் உடன்பாடு செய்துள்ளது.

இது தவிர, உலக முதலீட்டாளர் மாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி நோக்கியா சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் மின்னணு சாதன உற்பத்திக்கான பணிகளை துவக்கியுள்ளது. இதன் மூலம் 20,000 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இவ்வாறு, முந்தைய காலங்களில் பல்வேறு காரணங்களால் செயல்படாமல் நின்ற தொழில் நிறுவனங்கள் கூட, தற்போது இந்த மக்கள் நல அரசின் தொடர் முயற்சிகளால் புத்துயிர் பெறும் சிறப்பான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதார ஆராய்ச்சிக் கழகம் (NCAER) வெளியிட்டுள்ள 2018ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், முதலீட்டை ஈர்க்கும் ஆற்றல் மிக்க மாநிலங்கள் பட்டியலில், தமிழ்நாடு 2ஆம் இடத்தை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் அன்னிய நேரடி முதலீடு கடந்த ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 33 ஆயிரம் கோடி ரூபாய் என இருந்தது. கடந்த 3 ஆண்டுகளில் அது ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது சுமார் 47 ஆயிரம் கோடி ரூபாய் அன்னிய நேரடி முதலீட்டினை மாண்புமிகு அம்மாவின் அரசு கூடுதலாக ஈர்த்துள்ளது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

“கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்,
கவலை உனக்கிலை ஒத்துக்கொள்”

என்ற நாமக்கல் கவிஞர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, திறன்மிகு மனித வளத்தை உருவாக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு அம்மாவின் அரசு திறன் மேம்பாட்டிற்கான குறைந்த மற்றும் நீண்ட கால பயிற்சிகளை அளிப்பதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் 28 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்துள்ளதும், இயங்கி வரும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 53 புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளதும் இதற்குச் சான்றாகும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து, இதுவரை சுமார் 7 இலட்சம் இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சிகளை வழங்கியுள்ளது. இந்தியாவிலுள்ள தலைசிறந்த 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 5 தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் செயல்படுவது குறிப்பிடத்தக்கது. முதன்முறையாக சுகாதாரத் துறை, ஆட்டோமொபைல் மற்றும் சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்துக்காக மூன்று உயர்திறன் பயிற்சி மையங்கள் அமைக்க சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இது பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாகச் செயல்படும்.

இத்தருணத்தில் மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான திறன் போட்டியில் தமிழ்நாடு முதல் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டது.

“ஒரு தாய் மக்கள் நாம் என்போம்,
ஒன்றே எங்கள் குலம் என்போம்”

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்பவும், அனைத்து சமுதாயத்தினரின் நலனையும் பேண வேண்டும் என்ற

அடிப்படையிலும், தமிழ்நாட்டில் வன்னியர் சமுதாயத்தினர் முன்னேற்றத்திற்காக "வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் சட்டம் 2018" என்கிற புதிய சட்டத்தினை மாண்புமிகு அம்மாவின் அரசு இயற்றியது. அச்சட்டத்தை செவ்வனே செயல்படுத்திட ஒரு வாரியம் அமைத்து, அவ்வாரியம் திறம்பட செயலாற்ற போதுமான அளவு நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது.

பிறமலைக் கள்ளர் உள்ளிட்ட பல்வேறு சீர்மரபினருக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் மத்திய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவின் கீழும், அதே நேரத்தில் **தமிழ்நாடு அரசின் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இட ஒதுக்கீட்டின் கீழும் பயன்களைப் பெறும் வகையில் உரிய அரசாணை வெளியிடப்பட்டு, அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழும் ஒவ்வொரு குடியிருப்பு பகுதிகளிலும் இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், பாதை வசதிகள், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த இரண்டரை ஆண்டுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

சிறுபான்மை மக்களின் பாதுகாவலர்களாக விளங்கிய மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் வகுத்துத் தந்த பாதையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த அரசு, சிறுபான்மை மக்களை பாதுகாக்கும் அரணாக விளங்கி வருகிறது. இந்த பேரியக்கத்தின் தலைவர்கள் வகுத்துத் தந்த பாதையில் ஆட்சி செய்யும் இந்த அரசு, சிறுபான்மை மக்களை பாதுகாப்பதில் எக்காலத்திலும் உறுதியாக இருக்கும்.

ஹஜ் புனிதப் பயணத்திற்கான மானியத்தை மத்திய அரசு நிறுத்தினாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு ஆண்டுதோறும் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதனை தொடர்ந்து வழங்கி வருகிறது. ஹஜ் குழுவிற்கான நிருவாக மானியத்தை 30 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் அரசு மானியம் ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாயிலிருந்து 2.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 3 ஆயிரத்திற்கும் அதிகமான பள்ளிவாசல்களுக்கு நோன்புக் கஞ்சி தயாரிக்க 5,145 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. நாகூர் தர்கா சந்தனக் கூடு திருவிழாவிற்கு தேவைப்படும் சந்தனக் கட்டைகளை அரசே ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. மாவட்ட காஜிக்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. உலமாக்களின் மாதாந்திர ஓய்வூதியம் 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் வஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 3 கோடி ரூபாய் தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் சிறுபான்மையின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக தமிழ்நாடு சிறுபான்மையின பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக 215.22 கோடி ரூபாய் அளவிற்கு குறைந்த வட்டியில் கல்விக் கடன், தனி நபர் மற்றும் சிறுகடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய நெகிழியை தடை செய்து, அதனை நடைமுறைப்படுத்தியும் வருகிறது மாண்புமிகு அம்மாவின் அரசு. வருங்கால சந்ததியினர் நெகிழியினால் பாதிப்பு அடையாமல் இருக்க வேண்டுமெனில் இதைத் தொடர்ந்து முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்றும், இதற்கு மக்கள் தங்கள் முழுமையான ஒத்துழைப்பினை நல்க வேண்டும் என்றும் அனைவரையும் இந்த நேரத்தில் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவினை ஏராளமான மக்கள் பார்வையிட்டு, பயன் பெற்று வருகின்றனர். இப்பூங்காவை நானே மூன்று முறை நேரில் சென்று பார்வையிட்டுள்ளேன். இப்பூங்காவில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவைப்படும் நிதி ஒதுக்கீடு செய்து சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும்.

"பேரியக்கத்தின் தலைவர்கள் வகுத்துத் தந்த பாதையில் ஆட்சி செய்யும் இந்த அரசு, சிறுபான்மை மக்களை பாதுகாப்பதில் எக்காலத்திலும் உறுதியாக இருக்கும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

தமிழ்நாடு அரசு நீடித்த நிலையான வளர்ச்சியினை குறிக்கோளாகக் கொண்டு, சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத, எலக்ட்ரிக் பேருந்துகள், எலக்ட்ரிக் கார்கள் மற்றும் ஆட்டோக்களை உற்பத்தி செய்வதற்கும், அதற்கான முதலீட்டிற்கும், அதை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் போதிய ஊக்கமளித்து வருகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன் முறையாக பொதுப் போக்குவரத்துக்கு மின் பேருந்துகளை கடந்த ஆகஸ்ட் மாதம் 28ஆம் தேதி நான் துவக்கி வைத்துள்ளேன். அதே போல, 16.09.2019 அன்று மின் வாகனக் கொள்கை 2019ஐ வெளியிட்டுள்ளேன்.

கடந்த நவம்பர் மாதம் 29ஆம் நாளன்று சுற்றுச்சூழலுக்கு உகந்த, மின் ஆட்டோக்களையும் நான் துவக்கி வைத்தேன். இது, அரசுமுறை பயணமாக நான் துபாய் சென்றிருந்த போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆனதாகும் என்பதை பெருமையுடன் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு கேரள மாநிலங்களுக்கு இடையே, முல்லைப் பெரியாறு, ஆழியாறு – பரம்பிகுளம், பாண்டியாறு – புன்னம்புழா, செண்பகவல்லி அணை, நெய்யாறு பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகள் இருந்து வருகின்றன. “எங்களுடைய மக்களுக்கு தண்ணீர் வேண்டும், விவசாயத்திற்கு தண்ணீர் வேண்டும்”, என்று மாண்புமிகு கேரள முதலமைச்சருக்கு கடிதம் எழுதினேன். “நீங்கள் நேரில் வாருங்கள் இது குறித்து பேசுலாம்”, என்று அழைப்பு விடுத்தார் மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்கள். அந்த அழைப்பினை ஏற்று, நானே நேரடியாக சென்று கேரள முதலமைச்சரை சந்தித்தேன். நான் கேரள முதலமைச்சரை சந்திக்க சென்ற போது, மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களும் என்னோடு வந்தனர். இதைத் தொடர்ந்து செயலாளர்கள் அளவில் ஒரு கூட்டமும் நடத்தப்பட்டது. வருங்காலத்தில் இம்மாதிரி சந்திப்புகள் பல்வேறு நிலைகளில் நடத்தப்பட உள்ளன. இதன் மூலம் இரு மாநிலங்களுக்கு இடையே நிலவும் தண்ணீர் பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல, கடந்த கோடை காலத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின் போது, எனது உத்தரவின் பேரில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆந்திரப் பிரதேச முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து, தெலுங்கு கங்கை திட்டத்தில், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நீரினை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டனர். அதன் அடிப்படையில், பெறப்பட்ட நீரினைக் கொண்டு சென்னை பெருநகர மக்களின் குடிநீர் தேவை நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இத்தருணத்தில் மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரத்தை மேம்படுத்திட கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்திற்கு ஆந்திரா மற்றும் தெலுங்கானா முதல்வர்களின் கூட்டத்தினை விரைவில் நடத்தி, மத்திய அரசு தயாரித்த கோதாவரி–காவேரி இணைப்பு திட்டத்திற்கான வரைவு திட்ட அறிக்கையின் மீது அவர்களின் ஒப்புதலை விரைவில் பெற வேண்டும் என நான் கடிதங்கள் மூலமாகவும், மாண்புமிகு பாரதப் பிரதமரை நேரில் சந்தித்தும் வலியுறுத்தியுள்ளேன்.

இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டிலுள்ள வறட்சியான பகுதிகளுக்கு நீர்வள ஆதாரத்தினை ஏற்படுத்தி, அங்குள்ள வேளாண் பெருமக்களின் துயர் துடைக்க, காவேரி–குண்டாறு திட்ட முதற்கட்ட பணிகளை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் உதவியை எதிர்நோக்கி மாநில அரசு நிதியிலேயே வரும் நிதியாண்டில் இத்திட்டம் தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி நதியில் ஏற்படும் மாசுகளை நீக்கி, காவேரி நதியை தூய்மையாக்க “நடந்தாய் வாழி காவேரி” திட்டத்தினை மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஏற்கெனவே கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கும் மற்றும் நிலத்தடி நீர் குறைவாக உள்ள பகுதிகளுக்கு பாசன வசதி அளிப்பதற்காகவும், அத்திக்கடவு–அவிநாசி கால்வாய் திட்டம் 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 57 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் தாமிரபரணி–கருமேனி ஆறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தின் நில எடுப்பு பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளது என்பதையும், விரைவில் இத்திட்டம் நிறைவு பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

“எதிர்காலத்தில், தொழில்நுட்பம் மற்றும் மின் ஆளுமை மூலமாக மக்களுக்கு சிறந்த சேவை புரியும் அரசு தான் ஒரு நல்ல அரசாகத் திகழ முடியும். ஆளுமையின் ஒவ்வொரு அம்சத்திலும், அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அந்த வகையில், தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறையும், முகமையும் மேற்கொண்ட பல்வேறு முன் முயற்சிகள் நல்ல பலனை தந்துள்ளன. பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கு சான்றாக, நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின் படி, இந்தியாவில் அதிக புதுமைகளை படைக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.”

காவேரி நதிநீர் மற்றும் முல்லைப் பெரியார் அணை பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டது மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் தான். தற்போது தென்பெண்ணையாற்றின் பாசன விவசாய பெருமக்களின் உரிமையை நிலைநாட்டவும் மாண்புமிகு அம்மாவின் அரசு 03.07.2019 அன்று ஒரு இடைக்கால மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண நடுவர் மன்றத்தினை அமைக்க மத்திய அரசை வலியுறுத்தியும், உச்ச நீதிமன்றத்தில் தொடர் நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

காவேரி மற்றும் முல்லை பெரியார் பிரச்சினைக்கு ஓர் தீர்வு கண்டது போல் இந்த பிரச்சினைக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு தீர்வு காணும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள 12,524 ஊராட்சிகள், 528 பேரூராட்சிகளில் “அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்” என்ற அற்புதமான திட்டம் விரைவில் துவக்கப்பட உள்ளது. இதற்காக இந்த ஆண்டு 76 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அம்மா இளைஞர் விளையாட்டுக் குழுக்கள் அமைத்தல், அக்குழு உறுப்பினர்களுக்கு வாலிபால், கபடி, கிரிக்கெட், பூப்பந்து அல்லது இதர விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல், திறந்த வெளி உடற்பயிற்சி மையங்கள் அமைத்தல், போட்டிகள் நடத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற செய்தியை அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில், தொழில்நுட்பம் மற்றும் மின் ஆளுமை மூலமாக மக்களுக்கு சிறந்த சேவை புரியும் அரசு தான் ஒரு நல்ல அரசாகத் திகழ முடியும். ஆளுமையின் ஒவ்வொரு அம்சத்திலும், அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அந்த வகையில், தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறையும், முகமையும் மேற்கொண்ட பல்வேறு முன் முயற்சிகள் நல்ல பலனை தந்துள்ளன. பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கு சான்றாக, நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின் படி, இந்தியாவில் அதிக புதுமைகளை படைக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

2018–2019ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதி ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 899 கோடி ரூபாயாகும். இதனால் 6 இலட்சத்து 60 ஆயிரம் வேலைவாய்ப்புகள்

“ஆளுமையின் ஒவ்வொரு அம்சத்திலும், அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மென்பொருள் ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பில் தமிழ்நாடு, இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.

அனைவருக்கும் வளர்ச்சி என்ற எண்ணத்தை ஈடேற்றிட இல்லந்தோறும் இணையம் என்ற கொள்கையை செயல்படுத்தும் வண்ணம், அரசின் அனைத்து சேவைகளையும் கிராம மக்களும் அடையும் வகையில், அனைத்து கிராம ஊராட்சிகளும், பாரத்நெட் திட்டத்தை 1,815 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளும், கண்ணாடி இழை கட்டமைப்பு மூலம் இணைக்கப்படும். இதன் மூலம் அனைத்து கிராமங்களுக்கும் 1 Gbps அளவிற்கு குறையாமல் இணையதள வசதி வழங்கப்படும். இத்துடன் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் "தமிழ்நெட்" திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து நகரப் பகுதிகளுக்கும் அதிவேக இணையதள வசதி விரிவுபடுத்தப்பட உள்ளது. இந்த திட்டங்கள் ஓராண்டுக்குள் நிறைவேற்றப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 12ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் 28 ஆயிரத்து 957 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்துள்ள அரசு அம்மாவுடைய அரசு.

கல்வித் துறை சிறக்க வேண்டும் என்பதற்காக கடந்த 8 ஆண்டுகளில் 43,587 புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் துரிதமாக நிரப்பப்பட்டு வருகின்றன. புதிதாக 248 ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 117 துவக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,079 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்திய அரசு அம்மாவுடைய அரசு.

இந்த சாதனைகளுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில், **முக்கிய பாடங்களை எளிதாக புரியும் வகையில் ஒளிபரப்பவும், பள்ளிக் கல்வித் துறையின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லவும், பொதுத் தேர்வுகள், கல்வி உதவித் தொகை தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் தொடர்பாக மாணாக்கர்களிடைய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் "கல்வி தொலைக்காட்சி" என்ற பெயரில் ஒரு புதிய தொலைக்காட்சி என்னால் சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டது. இந்த தொலைக்காட்சியில் 24 மணி நேரமும் மாணாக்கர்களுக்கு பயன்படக்கூடிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு மிகுந்த வரவேற்பை பொதுமக்களிடத்திலும் மாணாக்கர்களிடத்திலும் பெற்றுள்ளது என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.**

"கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி, பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்" என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கியுள்ளதுடன், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் துவக்கியது. இதன் காரணமாக, உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் 49 என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை பெருமையுடன் அவைக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர் 7 ஆக இருந்த சட்டக் கல்லூரிகளின் எண்ணிக்கை தற்போது 14 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர திருச்சிராப்பள்ளியில் ஒரு தேசிய சட்டப் பள்ளியும் மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு அம்மாவின் அரசு உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையினை ஏற்று 227 புதிய நீதிமன்றங்கள் திறப்பதற்கான அரசாணையை வெளியிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தவிர, பெண்கள் வன்கொடுமை, குழந்தைகள் பாலியல் தொல்லை போன்ற வழக்குகளில் விரைந்து நீதி கிடைக்க ஏதுவாக 16 போக்சோ (POCSO) நீதிமன்றங்கள் அமைக்க உத்தரவிடப்பட்டு, தற்போது 3 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 13 போக்சோ நீதிமன்றங்களும் விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர்களின் தொன்மையை உலகத்திற்கு பறைசாற்றும் கீழடியில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை, மக்கள் பார்வையிடும் பொருட்டு, மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் தொல் பொருட்கள்

கண்காட்சி அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், அதனை நிரந்தரமாக காட்சிப்படுத்த, சிவகங்கை மாவட்டம் கொந்தகை கிராமத்தில் உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அருங்காட்சியம் 12 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏற்கெனவே மாண்புமிகு அம்மாவின் அரசு ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் நிதி வழங்கியது போல, தற்போது அமெரிக்காவில் உள்ள ஹுஸ்டன் பல்கலைக் கழகத்திலும் தமிழ் இருக்கை அமைக்க ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"காலத்தை வென்றவர், காவியமானவர்,
வேதனை தீர்த்தவர் – நம் விழிகளில் நிறைந்தவர்"

பாரத ரத்னா புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா மாநிலம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, புரட்சித்தலைவரின் நினைவைப் போற்றிடும் வகையில், கடந்த 27.2.2019 அன்று காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது நூற்றாண்டு வளைவு என்னால் திறந்து வைக்கப்பட்டு, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு புகழ் சேர்க்கப்பட்டுள்ளது.

"பிறந்த நாடே சிறந்த கோவில்
பேசும் மொழியே தெய்வம் – இதை
மறந்திடாமல் வாழ்ந்து வந்தால்
கோபுரமாகும் கொள்கை"

என்று புரட்சித்தலைவர் பாடிய பாடலுக்கு ஏற்ப, தமிழுக்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் சேவை செய்த தியாகிகளை நினைவு கூருவதிலும், அவர்களுக்கு சிறப்பு செய்வதிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஒரு முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், தமிழ்நாட்டில் 7 மணி மண்டபங்கள் திறந்து வைக்கப்பட்டு மறைந்த தலைவர்களுக்கு பெருமை சேர்த்துள்ளோம். அது மட்டுமன்றி, இதே சட்டமன்றப் பேரவையில், விடுதலைப் போராட்ட வீரரும், சமூக நீதிப் பாதுகாவலருமான திரு.ராமசாமி படையாச்சியார் அவர்களின் திருவுருவப் படமும் இங்கே திறக்கப்பட்டு அவருக்கு பெருமை சேர்த்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

கடந்த 9 ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு 75 ஆயிரத்து 268 கோடியே 72 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 17இல் இருந்து 16ஆகவும், பேறு காலத்தில் தாய்மார்கள் இறப்பு விகிதத்தைப் பொறுத்தவரையில், 2030இல் அடைய வேண்டிய நீடித்த நிலையான இலக்குகள், நாம் எடுத்த பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளால் இப்போதே அடைந்துவிட்டோம் என்பது ஒரு சரித்திர சாதனையாகும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த ஆண்டு ஒரு வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 9 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒரே ஆண்டில் 9 மருத்துவக் கல்லூரிகளை பெற்ற ஒரே அரசு மாண்புமிகு அம்மாவின் அரசுதான். இப்படி 9 மருத்துவக் கல்லூரிகள் துவங்குவதன் மூலம் கூடுதலாக 900 பேர் மருத்துவர்களாக படிக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு அம்மாவின் அரசு தான் உருவாக்கித் தந்துள்ளது.

மேலும் அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதலை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் இதுவரை 32,660 பணியிடங்களை நிரப்பியுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாக செயல்பட்டதற்காக மத்திய அரசின் தேசிய விருதுகளை தமிழ்நாடு அரசு கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து பெற்று சாதனை படைத்த அரசு அம்மாவின் அரசு.

மருத்துவர்கள் தங்கள் கோரிக்கைகளை பல்வேறு காலகட்டங்களில் வலியுறுத்தி வந்தனர். அவர்களது கோரிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு கவனத்துடனும் கனிவுடனும் பரிசீலனை செய்யும் என்பதை இப்பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தமிழ்நாட்டில், ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு தொழில் அல்லது வணிக

நிறுவனமும் நிலையான தரமுள்ள தடையற்ற மின்சாரத்தை பெற வேண்டும் என்பது என்னுடைய நோக்கமாகும்'' என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத முயற்சியின் பயனாக பல்வேறு திட்டங்கள் மூலமும், புதிய மின் நிலையங்களை இயக்கியதன் மூலமும், நடுத்தர மற்றும் நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் மின் கொள்முதல் செய்வதன் மூலமும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமும், கூடுதல் மின்சாரம் மின்கட்டமைப்பில் இணைக்கப்பட்டு அனைவருக்கும் தடையில்லா மின்சாரம் என்ற நிலையை தமிழ்நாடு ஏற்கெனவே எட்டியுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் சுமார் 2,600 மெகா வாட் மின்சாரம் கூடுதலாக மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சூரிய எரிசக்தி அதிகம் கிடைக்கக்கூடிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். சூரிய எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்க ''சூரிய எரிசக்தி கொள்கை 2019'' வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கையின் படி சுமார் 9,000 மெகாவாட் திறனுள்ள சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் நிறுவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொடர்ந்து மின் மிகை மாநிலமாகவும், தரமான தடையில்லா மின்சாரத்தை வழங்குவதன் காரணத்தினாலும், புதிய தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகின்றனர். அதுமட்டுமல்லாமல், சென்ற ஆண்டு கோடை காலத்தில் ஏற்பட்ட உச்சக்கட்ட மின் தேவைகள் எந்தவிதமான மின் தடையும் இன்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

''சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்துவதும், மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதும் ஒரு அரசின் தலையாய கடமையாகும். மக்களின் முக்கிய பிரச்சினைகளையும், அவர்களின் உணர்வுகளையும், நியாயமான எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ளும் தன்மையே நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைக்க செய்கிறது'' என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அவர்களின் ''அமைதி, வளம், வளர்ச்சி'' என்ற கோட்பாட்டின்படி மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது.

சமீபத்தில் மாமல்லபுரத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கும், மாண்புமிகு சீன அதிபர் திரு. ஷி ஜின்பிங் அவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரு பெரும் உலகத் தலைவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வுக்கு சிறப்பான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்த காவல் துறையினரை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், சீன நாட்டு அதிகாரிகளும், அதிபர் அவர்களும் வெகுவாக பாராட்டினார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நான் சட்டமன்றத்தில் அறிவித்தபடி, காவல் துறையின் பணிகளை மேலும் சிறப்பாக்கும் வகையிலும், நமது காவல் துறை இந்திய அளவில் முதன்மை இடத்தை தொடர்ந்து தக்க வைப்பதற்காகவும், மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து, பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்க ''நான்காவது போலீஸ் கமிஷன்'' அமைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது இடங்களில் குற்றங்கள் நடப்பதை தடுப்பதற்கும், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும்போது அவர்களின் நடவடிக்கைகளை அறிந்து கைது செய்வதற்கு ஏதுவாகவும், காவல் நிலையங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இணையதள முறைமையுடன் கூடிய உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் தமிழ்நாடு முழுவதும் முழுவீச்சில் பொருத்தப்பட்டு வருகின்றன. சென்னையில் மட்டும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் கேமராக்களும், சென்னை உட்பட மாநிலம் முழுவதும் சுமார் 4 இலட்சத்து 40 ஆயிரம் CCTV கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் குற்றங்கள் நடைபெறுவது பெருமளவில் குறைக்கப்பட்டதுடன், குற்றவாளிகளை மிக விரைவில் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும் இத்திட்டம் பேருதவியாக அமைந்துள்ளது.

மகளிர் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காக ''அம்மா ரோந்து வாகனம்'' மற்றும் எளிதில் புகார் அளிக்க வாட்சப் எண் மற்றும் ''காவலன்'' செயலி ஆகியவை சென்னை பெருநகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

''பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் தேசிய அளவில் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் மிகக்குறைவாகவே உள்ளதாக சமீபத்தில் வெளியான தேசிய குற்றப் பகுப்பாய்வு அறிக்கை கூறுகிறது.''

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

“காவலன்” செயலியைப் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு, தற்போது இலட்சக்கணக்கான மகளிர் இச்செயலியை பதிவிறக்கம் செய்து பெரும் வரவேற்பை நல்கி உள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் தேசிய அளவில் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் மிகக்குறைவாகவே உள்ளதாக சமீபத்தில் வெளியான தேசிய குற்றப் பகுப்பாய்வு அறிக்கை கூறுகிறது.

தமிழ்நாட்டில் தேனியில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம், அகில இந்திய அளவில் சிறந்த காவல் நிலையங்களில் 4ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

2018–2019ஆம் ஆண்டில், சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை தொடர்ந்து 2ஆவது முறையாக தேர்வு செய்து பிரபல ஆங்கிலப் பத்திரிகையான “இந்தியா டுடே” விருது வழங்கியுள்ளது. தமிழ்நாடு காவல் துறையினரின் சிறப்பான செயல்பாடுகளினால், மாநிலத்தில் சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி தீவிரவாத இயக்கங்கள் மற்றும் நக்ஸல் அமைப்புகளின் சட்ட விரோதமான செயல்கள் பெருமளவு தடுக்கப்பட்டு அமைதியான மாநிலமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபரின் மாமல்லபுரம் சந்திப்பிற்குப் பிறகு, உலகமே மாமல்லபுரத்தை நோக்கி வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், மாமல்லபுரத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஏற்கெனவே உள்ள வசதிகளை நவீனப்படுத்தவும் தனியே கருத்துரு ஒன்று தயாரித்து மத்திய அரசின் நிதி உதவியுடன் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக, பெண்களின் நல்வாழ்வுக்காக அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2011ஆம் ஆண்டு முதல் 2017–2018ஆம் ஆண்டு வரை 61,675 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு உள்ளது என்ற செய்தியை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். 2018–2019ஆம் ஆண்டில் 2,95,612 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 11 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மிகுதியாக 11 ஆயிரத்து 449 கோடி ரூபாய் வழங்கிய அரசு அம்மாவின் அரசு என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். 2019–2020ஆம் நிதியாண்டில் இதுவரை, 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 9 ஆயிரத்து 45 கோடியே 88 இலட்சம் கடனுதவிகள் 2,16,965 குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக 5 வகையான திருமண நிதியுதவித் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 726.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இது வரை 1,04,795 பயனாளிகளுக்கு 838.36 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது. 415.21 கோடி ரூபாய் நிதி உதவியும் திருமண திட்டத்தின் கீழ், வழங்கப்பட்டுள்ளது. மேலும், குழந்தை பிறப்பில் பாலின விகிதத்தை உயர்த்தியதற்காக தமிழ்நாட்டிற்கு “நாரி சக்தி புரஸ்கார்” விருது மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. முதியோர் நலனை பாதுகாப்பதற்கென சிறந்த முறையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டதற்காக “வயோசே ரேஷ்ட்ரா சம்மான்” விருதும் மாண்புமிகு குடியரசு தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச் சத்து நிலையினை முன்னேற்றுவதற்கு பிரதமரின் ஊட்டச் சத்து ஒருங்கிணைப்புத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்கான தேசிய விருதினை இவ்வாண்டு தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் உயர பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. அவர்களுக்கு வேலைவாய்ப்பில் 4 சதவீத இட ஒதுக்கீடு அளித்து, அவர்களுக்கு உகந்த பணியிடங்களை கண்டறிந்து இது வரை 1,483 நபர்களை பணியமர்த்தி உள்ளது. மூன்றாம் பாலினத்தவரும் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழும் வண்ணம், அவர்களுக்கும் அரசு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட அமைச்சர்களும் கிராமங்களுக்கே சென்று, மனுக்களைப் பெற்றுத் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக 9,77,265 மனுக்கள் வரப்பெற்றன.

அவற்றில், தகுதியான 5,18,946 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. 6,152 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக் கொள்ளப்படாத மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கிறேன். தீர்வு காணப்பட்ட மனுக்களில் சமூக பாதுகாப்பு திட்டத்தில் முதியோர் ஓய்வூதிய மனுக்கள் மட்டும் 1,54,888 மனுக்கள் ஆகும்.

பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமத்திற்கு செல்கின்ற போது வயது முதிர்ந்தவர்கள், உழைக்கும் திறனற்று இருக்கின்ற அந்த முதியவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக 1,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தீர்கள். அந்த கோரிக்கையின் அடிப்படையிலே 5 இலட்சம் முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பை கொடுத்து எல்லா அமைச்சர்களும், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நேரடியாக சென்று அந்த முதியவர்களால் கொடுக்கப்படுகின்ற மனுக்களை ஆய்வு செய்து, தகுதியான மனுக்களுக்கு இன்றையதினம் முதியோர் உதவித் தொகை வழங்குகின்ற அரசு அம்மாவுடைய அரசு. மேலும், விடுபட்டிருந்தால் இதுவரை 1,54,888 பேருக்கு தான் கொடுத்திருக்கிறார்கள், எஞ்சியவர்கள் இன்னும் கிட்டத்தட்ட 3 இலட்சம் பேர்களுக்கு முதியோர் ஓய்வூதியத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட குறைப்பாட்டை நீக்க வேண்டும் என்பதற்காகத் தான் தமிழகத்திலே 5 இலட்சம் முதியவர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே மாவட்டந்தோறும் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று அந்த மனுக்களை பெற்று அதற்கு பரிகாரம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் முதியோர் உதவித் தொகை பெற, தகுதி வாய்ந்த நபர்களை கொடுத்தால் நிச்சயமாக அவருக்கு வழங்கப்படும். ஆகவே, இப்படி நீங்கள் சொன்ன காரணத்தினாலே தான், இதையெல்லாம் ஆய்வு செய்து கூடுதலாக 5 இலட்சம் முதியவர்களுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற உத்தரவை நான் வழங்கி இருக்கின்றேன். அந்த அடிப்படையில் தான், 1,54,888 பேர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த மனுக்கள் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, கிட்டத்தட்ட 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்களை வாங்கினேன், அந்த மனுக்களை ஆய்வு செய்து, தகுதியான மனுக்களின் அடிப்படையிலே தான் 1,54,888 நபர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். மீதி இன்னும் இருக்கிறது. கிட்டத்தட்ட 3 இலட்சம் பேர்களுக்கு கொடுக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் அதை நீங்கள் குறையாக நினைக்க வேண்டாம், நீங்கள் எப்படி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றீர்களோ, அதே நோக்கத்துடன் தான் நான் இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கின்றேன்.

இதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுவிட்டது. 5 இலட்சம் முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. அதற்கு நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. ஒன்றரை இலட்சம் பேருக்கு தான் வந்திருக்கிறது, மீதம் மூன்றரை இலட்சம் பேருக்கு கொடுக்கலாம். அதுமட்டுமல்ல, முதியோர் ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு 50,000 ரூபாய் வரை தான் சொத்து இருக்க வேண்டும். அதையும் 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தி நாங்கள் அறிவித்திருக்கின்றோம்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அந்த முதியோரே நேரடியாக கொண்டு போய் கொடுத்தால் கூட அதை நிறைவேற்ற வேண்டும் என்று நாங்கள் உத்தரவு வழங்கி இருக்கின்றோம். இது முதியோர் உதவி பிரச்சினை. இதில் அரசியலே கிடையாது. உழைக்கும் திறனற்ற முதியவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே இந்த திட்டத்தை நாங்கள் துவக்கி இருக்கின்றோம். பாகுபாடே கிடையாது. இதில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று கிடையாது. முதியோர் என்பவர்கள் பொதுவானவர்கள், உழைக்கும் திறனற்றவர்களான அவர்கள் ஒவ்வொருவருக்கும் செய்யும் சேவை நோக்கத்தோடு தான் இந்த திட்டத்தை அறிவித்திருக்கின்றோம். நீங்கள் சொன்னதை எல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, நீங்கள் அடுத்த கூட்டத்திற்கு வருகின்ற போது, ஏற்கெனவே நீங்கள் புகழ்ந்து பேச மாட்டீர்கள் என்று நேற்றே சொல்லிவிட்டீர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொல்லி விட்டார்கள், நாங்கள் எப்பொழுதுமே எதிர்த்து தான் பேசுவோம் என்று, இருந்தாலும் இந்த திட்டத்தையாவது புகழ்ந்து பேச வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் விரைந்து கிடைக்க வகை செய்யும் நோக்குடன், மாண்புமிகு அம்மாவின் அரசு வரலாற்றுச் சாதனையாக 5 புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது. அதற்கான புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமனம் செய்து முழு வீச்சில் மாவட்டங்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இப்புதிய மாவட்டங்களுக்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை வெற்றிகரமாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தியதால், மத்திய அரசிடமிருந்து குறைந்த அளவில் இழப்பீட்டுத் தொகை பெறும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது.

தமிழ்நாடு வணிக மற்றும் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை ஜி.எஸ்.டி. மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று, பல வகையான சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு வரி விலக்கும், வரி குறைப்பும் செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் பல்வேறு பொருட்களுக்கான விலை, தொடர்ந்து மக்கள் பயன்பெறும் வகையில் குறைப்பு செய்யப்பட்டது. மேலும் சில சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு விரி விலக்கு பெறவும், வரி குறைப்பு செய்யவும் கோரிக்கைகள் வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடு எளிமையான முறையில் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு, சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, இட மாறுதல்கள் போன்ற விவரங்கள் நிகழ்நேர அடிப்படையில் உடனுக்குடன் பதியவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி, பணியாளர் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மத்திய அரசு அவ்வப்போது அறிவிக்கும் அகவிலைப் படி உயர்வினை மாநில அரசு ஊழியர்களுக்கும் உடனுக்குடன் வழங்கி வருகின்ற அரசு அம்மாவின் அரசு.

குடிசையில்லா தமிழ்நாட்டினை உருவாக்க, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், பல்வேறு வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சமுதாய நலப் பணிகளை செயல்படுத்தி வருகின்றது. கடந்த 8 ஆண்டுகளில், 1.92 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகள் 8,222.91 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சென்னை தியாகராய நகர், பாண்டி பஜார் பகுதியில் சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ், சுமார் 40 கோடி ரூபாய் செலவில் நடைபாதை வளாகம், வை–ஃபை வசதி, சிசிடிவி கேமராக்கள், ஸ்மார்ட் பைக்குகள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் போன்ற நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கென திறக்கப்பட்டுள்ளது. இதற்கு முதியவர்கள், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

மத்திய அரசின் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், நாட்டிலேயே அதிகபட்சமாக 11 நகரங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஒப்புதல் பெறப்பட்டு, 11,000 கோடி ரூபாயில் 413 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 72 பணிகள் முடிவடைந்தும், 206 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

2019–2020ஆம் நிதியாண்டில், நெடுஞ்சாலைத் துறை மூலம் 9,211 கி.மீ. நீளத்திற்கு சாலைகள், 2,582 எண்ணிக்கையில் சாலை பாதுகாப்புப் பணிகள், மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மற்றும் தாங்கு சுவர் அமைக்கும் 6,664 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் 5,451 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 65 ஆற்றுப் பாலங்களும், ஒரு சாலை மேம்பாலமும், 4 இரயில்வே மேம்பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 10,563 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 328 ஆற்றுப் பாலங்களும், 19 சாலை மேம்பாலங்களும், 42 இரயில்வே மேம்பாலங்களும், 2 நடை மேம்பாலங்களும் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

2017–2018 முதல் 2019–2020 முடிய 3 ஆண்டுகளில் சட்டமன்ற விதி எண் 110–இன் கீழ் மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட மொத்தம் 453 அறிவிப்புகளில், 419 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 118 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன, 301 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன. 25 அறிவிப்புகளுக்கு, திட்டப் பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 8 அறிவிப்புகள் மத்திய

அரசின் பரிசீலனையிலும், ஒரு அறிவிப்பு சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையிலும் உள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை 34 ஆயிரத்து 893 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47 ஆயிரத்து 829 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை அவைக்கு இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், 24 ஆயிரத்து 90 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 909 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று, நாலடியாரில் இருந்து ஒரு பாடலை குறிப்பிட்டுப் பேசினார். இத்தருணத்தில், நன்னூலில் இருந்து கீழ்க்கண்ட பாடலை நான் குறிப்பிட விரும்புகிறேன்:–

"மன்னுடைய மன்றத்து ஒலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையிலும்
மன்னிய அவையிடை வெல்லுற பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தல்நம் தகும் புலவோற்கே"

அதாவது, தன்னுடைய புலமைத் திறனை அறியாதவரிடத்தும், அவையில் வாதிட்டு வெற்றி பெற வேண்டிய சூழ்நிலையிலும், எதிரி தன்னைப் பழித்துரைக்கும் போதும், தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது தவறாகாது. இருந்தாலும், நாங்கள் எங்களைப் பற்றி தற்பெருமையாக ஆளுநர் உரையில் எதையும் குறிப்பிடவில்லை. மாறாக, இந்த அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும், சாதனைகளையும், நிகழ்த்தப்பட்ட சாதனைகளுக்காக பெற்ற விருதுகளையும் தான் குறிப்பிட்டுள்ளோம். இது தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் கிடைத்த பெருமையாகும்.

எல்லா ஆட்சிக் காலத்திலும், ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில், ஆளுநர் உரையில் அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றி கோடிட்டுக் காட்டப்படுகின்றது. இதைத் தான் நீங்களும் செய்தீர்கள்; நாங்களும் செய்கின்றோம்.

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை. துன்பமும், துயரமும் வரும் பொழுதெல்லாம், அதனை எதிர்கொண்டு வெற்றி கண்டது, சுடர் முகம் ஏந்தும் உங்களைப் போன்ற உடன் பிறப்புகளைப் பெற்றதால் தான்" என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக தொடர்ந்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரது ஆசியுடன் ஆட்சியை நடத்தி வரும் நாங்கள் மிகவும் சாதாரணமானவர்கள் தான். ஒரு முதலமைச்சரின் வாரிசாகவோ, அரசியல் பின்புலம் உள்ள குடும்ப வாரிசாகவோ நான் இந்த இருக்கையில் அமரவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவரும் அப்படித் தான். விவசாய குடும்பத்தில் பிறந்த நான், மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில், அவரது தொண்டர்களை ஒருங்கிணைத்து பல்வேறு வகையிலும் மக்கள் நலனைப் பற்றியே சிந்தித்து ஆட்சி நடத்தி வருகிறேன். அதன் மூலம் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இதன் பலனாக இன்று மத்திய அரசும், பல்வேறு தனியார் ஆய்வு நிறுவனங்களும், முன்னணி பத்திரிகை நிறுவனங்களும் தகுந்த ஆய்வுகளுக்குப் பின்னர் இந்தியாவிலேயே தமிழ்நாடு, பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு, முன்னணியில் இருப்பதாக அறிவித்துக் கொண்டே உள்ளன.

2018–2019ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.17 சதவீதமாக உள்ளது. இது 2018–2019ஆம் ஆண்டின் தேசிய வளர்ச்சி விகிதமான 6.81 சதவீதத்தைவிட அதிகமாக உள்ளது என்று ஒரு ஆங்கில நாளிதழ் தமிழ்நாட்டை பாராட்டியுள்ளது.

அதேபோல, மாண்புமிகு அம்மாவின் அரசு எத்தனையோ விருதுகள் வாங்கியிருந்தாலும், அதன் நல்லாட்சிக்கு ஒரு அத்தாட்சியாக வேளாண்மை, தொழில், மனிதவள மேம்பாடு, பொது சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், சமூகநல திட்டங்கள் உள்ளிட்ட

"அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும், சாதனைகளையும், நிகழ்த்தப்பட்ட சாதனைகளுக்காக பெற்ற விருதுகளையும் தான் குறிப்பிட்டுள்ளோம். இது தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் கிடைத்த பெருமையாகும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

"மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை 34 ஆயிரத்து 893 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47 ஆயிரத்து 829 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை அவைக்கு இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், 24 ஆயிரத்து 90 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 909 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்."

பத்து துறைகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஐம்பது குறியீடுகளின் அடிப்படையில், 2019க்கான மத்திய அரசின் நல் ஆளுமை குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை அனைத்தும் மாண்புமிகு அம்மாவின் ஆசியினாலும், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், கழகத்தின் உண்மைத் தொண்டர்களாலும், எங்களது நிருவாகத் திறமையினாலும் மற்றும் மக்களின் ஒத்துழைப்பினாலும், கிடைக்கப் பெற்றது என்பதையும் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி மாலைகள். இந்த வெற்றி மாலைகளைக் கண்டு பொறுக்க முடியாமல், சில எதிர்க் கட்சியினர் இந்த ஆட்சியின் காலத்தை இன்று, நாளை, 10 நாள், 100 நாள் என்று குறைத்து மதிப்பிட்டார்கள். அவர்களின் எண்ணத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இன்று விருதுகள் ஒன்று பத்தாகி, பத்து நூறாகி பெருகிக் கொண்டு, தமிழ்நாட்டில் விருது மழையாய் பொழிந்து கொண்டிருக்கிறது.

சிலர், இயற்கைப் பேரிடர் என்றாலும், குடிநீர் பற்றாக்குறை என்றாலும், உள்ளாட்சித் தேர்தல்கள் என்றாலும், எல்லாப் பிரச்சினைகளிலும், மக்களை திசை திருப்பி போராட்டங்கள் நடத்துவதிலும், நீதிமன்றங்களில் வழக்குகளைப் போட்டு, அரசின் வேகத்திற்கு ஒரு வேகத்தடையாக இருக்கிறார்களே தவிர, வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கப்பூர்வமான எந்த ஒரு நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு அளிப்பதில்லை.

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த வழியிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை நாங்கள் வைத்திருக்கின்றோம். அதேபோல அண்ணா அவர்களின் பெயரிலே, நம்முடைய இயக்கம் இன்றைக்கு இங்கே நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, நம்முடைய இயக்கம் மக்களுக்கு சேவை செய்வதிலே முதலிடத்தை பிடித்துக்கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நம்முடைய இயக்கம் நனவாக்கி கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எனவே, சோதனைகளை எல்லாம் தாண்டி சுடச் சுட ஒளிவிடும் தங்கத்தைப் போல ஒளிமயமான எதிர் காலத்தை நோக்கி பீடு நடை போடுவோம்" என்றார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் கூற்றுப்படி, இந்த அரசு வெற்றி மேல் வெற்றி பெற்று, வெற்றி வாகை சூடி வருகிறது.

அண்மையில் நடைபெற்ற விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரியில் சட்டமன்ற இடைத் தேர்தலில் நமது கழகம் மிகப் பெரிய வெற்றி பெற்று, மக்கள் நம் பக்கம் உள்ளதை தெளிவாக்குகின்றது. ஊரக உள்ளாட்சித் தேர்தல்களில் தமிழ்நாடு மக்கள் நமக்கு அளித்த ஆதரவு இதனை உறுதிபடுத்தியுள்ளது. விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரி இடைத்தேர்தலில் வாக்களித்து வெற்றி பெறவைத்த வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் 27 மாவட்டங்களில் நடந்து முடிந்த ஊரக உள்ளாட்சி தேர்தல்களில் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனம் நிறைந்த

நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இதே போன்று, வரவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலிலும், 2021இல் நடைபெறும் சட்டமன்ற பொதுத் தேர்தலிலும் மக்களின் பேராதரவை தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பெற்று மூன்றாவது முறையாக கழகம் வெற்றி பெற்று, "வீட்டுச் சுவற்றின் இடுக்கிலே முளைத்திருக்கும் செடிகளை மக்கள் ஆதரவுடன் கிள்ளி எறிவோம்" என்று பேறறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல, கழகத்திற்கும், கழக ஆட்சிக்கும் இடையூறு செய்பவர்களை மக்கள் ஆதரவுடன் கிள்ளி எறிவோம்.

கடந்த இரண்டு நாட்களாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் NRC–ஐ பற்றி, நீண்ட விவாதம் செய்தனர். அதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினர் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதை தெளிவாகவும், விளக்கமாகவும் அறுதியிட்டும், உறுதியிட்டும் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள்.

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு மாண்புமிகு அம்மாவின் அரசும், தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கு மேலாக, சிறுபான்மையின மக்களுக்கு அரணாக இருந்து பாதுகாத்து வருகின்றது. இருபெரும் தலைவர்களின் வழியிலேயே, மாண்புமிகு அம்மாவின் அரசும் சிறுபான்மையின மக்களை தொடர்ந்து பாதுகாக்கும் அரணாக விளங்கும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அரசியல் உள்நோக்கத்துடன், உண்மைக்குப் புறம்பாக பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், சிறுபான்மையின மக்கள் எள்ளளவும் ஐயப்படவோ, அச்சப்படவோ தேவையில்லை என்பதையும் திடமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

"நல்லவர் இலட்சியம் வெல்வது நிச்சயம்
என்றும் அது தான் சத்தியம்" என்று கூறி,

மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு உரிய பதிலை நான் அளித்திருக்கிறேன் என நம்புகிறேன். அவர்களது கோரிக்கை ஏதேனும் விடுபட்டிருப்பின், அதையும் அரசு கவனத்தில் கொண்டு, விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த இனிய நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இத்தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

❖ ❖ ❖

சிதறிய முத்துகள்

எந்தக் காரியத்தையும் செம்மையாகச் செயல்படுத்த வேண்டும் என்றால் வாழ்க்கையை எண்ணிப்பார்த்துச் செயல்பட வேண்டும்.

– புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்

உண்மையான மக்கள் அரசு, சமூக நீதியை நிலை நாட்ட உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

– புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

எங்களை, நாங்கள் தலைவர்களாக ஒரு காலமும் நினைத்துக் கொண்டதில்லை. தொண்டர்களாகவே நினைத்துத்தான் அல்லும் பகலும் மக்கள் பணியாற்றி வருகிறோம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்

சுற்றுலா பயணிகளின் வருகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது!!

46ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2019–2020யை தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – 22.12.2019.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இன்று சென்னை தீவுத் திடலில் 46ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை தொடங்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. வெல்லமண்டி நடராஜன் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பெஞ்சமின் அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய அரசு தலைமைச் செயலாளர் மரியாதைக்குரிய திரு. க.சண்முகம் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் திரு.சத்யா அவர்களே!

மரியாதைக்குரிய சட்டப் பேரவை உறுப்பினர், முன்னாள் டி.ஜி.பி. திரு.நடராஜ் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.வெங்கடேஷ் பாபு அவர்களே! முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், வாரியத் தலைவர் திரு.பாலகங்கா அவர்களே! மரியாதைக்குரிய திரு.ராஜேஷ் அவர்களே!

திட்ட விளக்கவுரை ஆற்றிய சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அசோக் டோங்ரே அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு சங்க நிர்வாகிகளே! முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகளே!

வருகை தந்திருக்கின்ற சென்னை மாநகர காவல் துறை ஆணையர் அவர்களே! காவல் துறை உயர் அதிகாரிகளே! சுற்றுலாத் துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்களே! அரசு உயர் அதிகாரிகளே!

நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி அமுதவல்லி அவர்களே!

கலைக் குழுவினர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! சுற்றுலாப் பயணிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

“ஒரு மலையில் பெருக்கெடுத்து ஓடும் ஆறு, பயனில்லாத இடங்கள் வழியாகப் பாய்ந்து கடலில் கலப்பதால் யாருக்கும் எவ்விதப் பயனும் இல்லை. அந்நீர் அணைகளில் தேக்கப்பட்டு, வாய்க்கால் வழியாக வயல்களுக்கு பாய்ந்தால் பயிர் செழிக்கும். உயிர்கள் வாழ வழிவகை ஏற்படும்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

பயிர்கள் செழிக்க, அணைகளில் நீர் தேக்கி வைப்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோல, அரசு செயல்படுத்தும் திட்டங்கள் மற்றும் மக்கள் நலப்பணிகள் பற்றிய விவரங்கள், அரசின் சாதனைகள் ஆகியவற்றை மக்களிடையே கொண்டு செல்லும் ஒரு கருவியாக செயல்படுவது பொருட்காட்சிகள் தான்.

பொங்கல் திருநாள் என்றாலே அதனுடன் சேர்ந்து நினைவுக்கு வருவது சென்னை தீவுத் திடலில் நடக்கும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி தான். இந்த ஆண்டு பொருட்காட்சி, கிறிஸ்துமஸ்க்கு முன்னரே தொடங்கி வைக்கப்பட்டிருப்பது கூடுதல் விசேஷமாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம், 1974ஆம் ஆண்டு முதல் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தி

“பயிர்கள் செழிக்க, அணைகளில் நீர் தேக்கி வைப்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோல, அரசு செயல்படுத்தும் திட்டங்கள் மற்றும் மக்கள் நலப் பணிகள் பற்றிய விவரங்கள், அரசின் சாதனைகள் ஆகியவற்றை மக்களிடையே கொண்டு செல்லும் ஒரு கருவியாக செயல்படுவது பொருட்காட்சிகள் தான்.”

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

வருகிறது. அதன் தொடர்ச்சியாக, 46ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி இன்று இனிதே துவங்குகிறது. இந்த ஆண்டு பொருட்காட்சியின் கருப்பொருள் “Tourism and jobs, a better future for all!” என்பதாகும். இப்பொருட்காட்சியில் மாநிலத்தின் 28 அரசுத் துறைகள், 14 மாநில பொதுத் துறை நிறுவனங்கள், ஒரு மத்திய அரசு நிறுவனம், 4 பிற மாநில அரசு நிறுவனங்கள், தமிழ்நாடு சட்ட உதவி மையம் மற்றும் 110 தனியார் அரங்குகள் இடம் பெற்றுள்ளன.

இப்பொருட்காட்சியில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்து கொண்டிருக்கும் ஆக்கபூர்வமான பணிகளையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களையும் மக்கள் எளிதில் புரிந்து கொண்டு பயன்பெறும் வகையில், அரசுத் துறை அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், குழந்தைகளுக்காகவும், பெரியவர்களுக்காகவும் பொழுதுபோக்கு அம்சங்களும் இந்தப் பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இப்பொருட்காட்சியில் பனி உலகம், கடல்வாழ் மீன் அருங்காட்சியகம், லேசர் ஷோ (Laser show) கண்காட்சி ஆகிய சிறப்பு அம்சங்களும் இடம் பெற்றுள்ளன.

Tour என்ற ஆங்கில சொல்லானது, TORNOS என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பிறந்தது ஆகும். டோர்னஸ் என்ற லத்தீன் வார்த்தை சக்கரத்தை, அதாவது சுற்றி வருவதை குறிக்கிறது. இவ்வாறு லத்தீன் மொழியில் பிறந்த Tour என்ற சொல் ஆங்கில மொழியில் இணைந்தது. எனவே, பல இடங்களுக்குச் சென்று பார்த்து விட்டு மீண்டும் தனது இருப்பிடம் வந்து சேர்வதைத் தான் இந்த Tour என்ற வார்த்தை குறிக்கிறது.

முன்னர் பணம் படைத்தவர்கள் மட்டுமே சென்று வந்த சுற்றுலா என்பது, தற்போது உலக மக்களின் தேவைகளில் ஒன்றாக மாறி வருகிறது. அதிசயமானவை, ஆர்வமூட்டக் கூடியவை, மனதை கவர்பவை, இயற்கைக் காட்சிகள் போன்றவற்றைக் காண மக்கள் விரும்புகின்றனர். தாங்கள் வசிக்கும் இடங்களிலிருந்து சென்று பிற இடங்களைக் காணும் ஆர்வமே சுற்றுலா தோன்றுவதற்கு அடிப்படை காரணமாகும். மக்கள் இன்பமாகவும், பயனுள்ளதாகவும் ஓய்வு நேரத்தை செலவிட சுற்றுலாவை விரும்புகின்றனர். மக்களின் வாழ்க்கைத் தரம், போக்குவரத்தில் முன்னேற்றம், தரமான சாலைகள், விரைவான செய்தித் தொடர்பு வசதி போன்றவை சுற்றுலாவை ஒரு முக்கியமான தொழிலாக மாற்றியுள்ளன.

இன்றைய உலகில் சுற்றுலா ஒரு பயன்மிகு தொழிலாக விளங்குகிறது. சுற்றுலா மூலம் தனிநபர் பயனடைவது தவிர, நாட்டின் வருவாயும் அதிகரித்து, பொருளாதார வளர்ச்சி அடைந்து, பல துறைகளில் நாடு முன்னேற வழி வகுக்கிறது.

வேற்றுமையில் ஒற்றுமையைப் பேணும் இந்தியா போன்ற நாடுகளில், சுற்றுலா செல்லும் பயணி பிற மாநிலங்களில் வாழும் மக்களுடன் கூடிப் பேசி மகிழ முடிகிறது. நாட்டின் ஒரு பகுதியில் வாழும் மக்கள், பிற பகுதிகளுக்கு செல்லும் போது, ஒருமைப்பாட்டு உணர்வு வலுவடைகிறது. வெளிநாட்டிற்கு நாம் செல்லும் போதும், வெளிநாட்டினர் நம் நாட்டிற்கு வரும் போதும், புலவர் கனியன் பூங்குன்றனாரின் ‘யாதும் ஊரே யாவரும் கேளீர்’ என்ற கூற்றிற்கு ஏற்ப நாம் அனைவரும் உலகத்தின் குடிமக்கள் என்ற உணர்வு மேலோங்குகிறது.

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு சுற்றுலாத் தலங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும், தொடர்ந்து புதிய சுற்றுலா மையங்களை தெரிவு செய்து அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கும், பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருவதால், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இதனால், தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் மிகவும் போற்றத்தக்க வகையில் கட்டடக் கலைகள், உயிரோட்டமுள்ள பாரம்பரிய இசை, நடனம், கிராமியக் கலை மற்றும் கவின் கலை ஆகியவை உள்ளன.

- தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் இசை விழா நிகழ்ச்சியை கேட்டு ரசிப்பதற்கும்,

“முன்னர் பணம் படைத்தவர்கள் மட்டுமே சென்று வந்த சுற்றுலா என்பது, தற்போது உலக மக்களின் தேவைகளில் ஒன்றாக மாறி வருகிறது. அதிசயமானவை, ஆர்வமூட்டக் கூடியவை, மனதை கவர்பவை, இயற்கைக் காட்சிகள் போன்றவற்றைக் காண மக்கள் விரும்புகின்றனர்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

- நாட்டியாஞ்சலி மற்றும் தமிழ்நாட்டிற்கே உரிய வீர விளையாட்டுகளை கண்டு களிப்பதற்கும்,
- தமிழ்நாட்டில் உயர்தர மருத்துவம் பெறுவதற்கும்,
- உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்வதற்கும் என

பிற நாடுகள் மற்றும் மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வந்த வண்ணம் உள்ளனர்.

இது தவிர, ஆன்மிகம் மற்றும் பொழுதுபோக்கு சுற்றுலாத் தலங்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் உள்ளன. குறிப்பாக உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு போன்ற சுற்றுலாத் தலங்கள், உலகின் 2ஆவது நீளமான கடற்கரையான சென்னை மெரினா கடற்கரை, உலகிலேயே மூன்று கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி, சிற்பக் கலையில் சிறந்த மாமல்லபுரம், தமிழ்நாடு முழுவதும் நிறைந்து காணப்படும் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்கள், ஒவ்வொரு மதத்தினரும் வழிபடும் வழிபாட்டு தலங்கள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கின்றன.

யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட உலகப் பாரம்பரிய சின்னங்கள் அமைந்துள்ள மாமல்லபுரம், தஞ்சை பெரிய கோயில், தாராசுரம் திருக்கோயில், கங்கைகொண்ட சோழபுரம் திருக்கோயில் மற்றும் நீலகிரி மலை ரயில் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ளன.

2014, 2015, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தை பெற்றுள்ளது. 2018ஆம் ஆண்டில் 39 கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள், 61 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் என சுமார் 40 கோடி சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். ஆண்டுக்கு ஆண்டு தமிழ்நாட்டுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, இந்தியாவிலேயே மிகவும் விரும்பத் தக்க சுற்றுலா தலங்கள் நிறைந்த மாநிலம் தமிழ்நாடு என்பதை உறுதிப்படுத்துகிறது.

சுற்றுலாத் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்திய சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 53 தங்கும் விடுதிகள் மற்றும் 14 சொகுசு பேருந்துகளுடன் செயல்பட்டு வருகிறது.
- தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, முக்கிய சுற்றுலாத் தலங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்த, 2018–2019ஆம் ஆண்டில் 6 கோடியே 28 இலட்சம் ரூபாயும், சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக 10 கோடியே 64 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 2 வோல்வோ பேருந்துகள் வாங்கியது உட்பட 20 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மேலும், காஞ்சிபுரத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்காக 16 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், வேளாங்கண்ணியில் சுற்றுலா மேம்பாட்டிற்காக 5 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- முக்கியமான கடற்கரை சுற்றுலா தலங்களை மேம்படுத்த 99 கோடியே 91 இலட்சம் ரூபாய் நிதியில், கடற்கரை பகுதிகளில் நிலச் சீரமைப்பு, மின் விளக்கு வசதி, பொது கழிப்பிடங்கள், சாலையோர வசதிகள், கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம் தொகுதி–4இன் கீழ், ரூ.288 கோடி மதிப்பீட்டில்

“வேற்றுமையில் ஒற்றுமையைப் பேணும் இந்தியா போன்ற நாடுகளில், சுற்றுலா செல்லும் பயணி பிற மாநிலங்களில் வாழும் மக்களுடன் கூடிப் பேசி மகிழ முடிகிறது. நாட்டின் ஒரு பகுதியில் வாழும் மக்கள், பிற பகுதிகளுக்கு செல்லும் போது, ஒருமைப்பாட்டு உணர்வு வலுவடைகிறது.”

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

சுற்றுலாத் தலங்களில் ஆற்றல்மிகு மின் விளக்குகள் அமைத்தல், ஒளிரும் வழிகாட்டு பலகைகள் அமைத்தல், சிதம்பரம், ஆலங்குடி மற்றும் வேதாரண்யத்தில் சுற்றுலாப் பயணியர் தங்கும் விடுதி கட்டுதல், காஞ்சிபுரத்தில் யாத்ரி நிவாஸ் கட்டுதல், கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு சென்று வர படகுகள் வாங்குதல் போன்ற பல்வேறு பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் வரும் 2020ஆம் ஆண்டில் முடிவடையும் வகையில் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

- மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, 1992ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்–ஜனவரி மாதங்களில் இந்திய நாட்டிய விழா மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழாவினை காண இந்தியாவின் பிற பகுதிகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர்.
- தமிழ்நாட்டில் சிற்பங்கள், குகை கோயில்கள் அதிகம் உள்ள மாமல்லபுரத்தில் சமீபத்தில் மாண்புமிகு சீன நாட்டு அதிபரும், மாண்புமிகு **பாரதப் பிரதமர் அவர்களும் பேச்சு வார்த்தை நடத்தியது ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும்.** இதனைத் தொடர்ந்து, மாமல்லபுரத்தை காண சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஏற்கெனவே உள்ள வசதிகளை நவீனப்படுத்தவும் மத்திய அரசின் துணையுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதற்கென மத்திய அரசு தனது ஒப்புதலை சமீபத்தில் வழங்கியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- கடந்த 29.11.2019 அன்று செங்கல்பட்டு மாவட்ட துவக்க விழாவில், மாமல்லபுரத்திற்கு வரும் உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, மாமல்லபுரச் சுற்றுலா பேருந்து வசதியினை துவக்கி வைத்தேன். இதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோவில், ஐந்து ரதம், அர்ஜுனன் தபசு பாறை சிற்பங்கள், சிற்ப அருங்காட்சியம், கலங்கரை விளக்கம், புலிக்குகை உள்ளிட்ட வரலாற்று நினைவுச் சின்னங்களை சுற்றுலாப் பயணிகள் சிரமமின்றி குறுகிய காலத்தில் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தில் ரூ.50 கட்டணத்தில் கண்டு களிக்கலாம்.

இதுபோன்று எண்ணற்ற சாதனைகளை தமிழ்நாடு சுற்றுலாத் துறை நிகழ்த்தி வருகிறது என்பதைப் பெருமையுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக,

- பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் சங்கத்தின் சார்பில் **'சிறந்த பாரம்பரிய சுற்றுலா மாநிலம்' என்ற சர்வதேச விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.**
- 'இந்தியா டுடே' குழுமம் 2018ஆம் ஆண்டில் 'சுற்றுலாவில் சிறந்த செயல்திறன் மிக்க மாநிலம்' என தமிழ்நாட்டை தேர்வு செய்து விருது வழங்கியுள்ளது.
- வேளாண்மைத் துறையில் 5ஆவது முறையாக கிரிஷி கர்மான் விருதைப் பெற்றுள்ள மாநிலம் தமிழ்நாடு,
- உள்ளாட்சித் துறையில் மத்திய அரசின் 99 விருதுகளைப் பெற்று சாதனையை படைத்த அரசு அம்மாவின் அரசு,
- உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் 5ஆவது முறையாக மத்திய அரசு விருதை தொடர்ந்து பெற்றுள்ளது,
- சட்டம் ஒழுங்கிற்காக 'இந்தியா டுடே' பத்திரிகை விருது வழங்கியுள்ளது,

என மாண்புமிகு அம்மாவின் அரசின் ஒவ்வொரு துறையும் சிறந்த பணிகளுக்கான விருதுகளை பெற்ற

> **"உள்ளாட்சித் துறையில் மத்திய அரசின் 99 விருதுகளைப் பெற்று சாதனையை படைத்த அரசு அம்மாவின் அரசு"**
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

மாநிலம் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு என்றால் விருது பெறும் முதன்மை மாநிலம் என்று அனைவரும் நினைக்கும் அளவுக்கு இந்திய அளவில் தமிழ்நாட்டின் நிலை உயர்ந்து நிற்கிறது என்பதை பெருமிதத்துடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்தும் சாதனைகள் பலரால் பாராட்டப்பட்டாலும், சிலர் ஒப்புக் கொள்ள மனமின்றி, நாம் வெற்றிகரமாக பயணிக்கும் பாதைகளில் தடைகளை ஏற்படுத்த முயன்று வருகிறார்கள். உலகத்திலே தாங்கள் தான் திறமைசாலிகள் என்று இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இவர்களின் திறமை எப்படிப்பட்டது என்பதை இங்கே ஒரு கதையின் மூலம் கூற விரும்புகிறேன்.

ஒரு நாட்டில் சிலர், அங்குள்ள மக்களை விட தாங்கள்தான் சிறந்த திறமைசாலிகள் என்று நினைத்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் அவர்கள் சேர்ந்து வீடு ஒன்றினை கட்ட தீர்மானித்தனர்.

அந்த வீடு கட்டுவதற்கு மரத்தை தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் காட்டிற்குள் செல்ல முடிவெடுத்தனர். அப்போது அவர்களில் அதிதிறமைசாலி என்று அழைக்கப்படும் ஒருவன், 'நான் குதிரை வண்டியில் போகிறேன், நீங்கள் பின்னால் வாருங்கள்', என்று கூறிச் சென்றான். அவன் செல்லும் பாதையில் குதிரை வண்டி ஒரு கல் மீது ஏறி, கவிழ்ந்தது. அவன் கையில் வைத்திருந்த கோடாரி சற்று தூரத்தில் விழுந்து, அவனும் ஒரு குழியில் விழுந்து விட்டான்.

குதிரை வண்டிக்கு பின்னால் வந்த மற்ற திறமைசாலிகள், வழியில் கோடாரி இருப்பதை பார்த்தனர். கோடாரியை எடுத்துச் சென்றவன் அவர்களில் சிறந்த திறமைசாலி என்பதால், கோடாரியை விட்டுச் சென்றதற்கு காரணம் இருக்கும் என்று நினைத்து, அவர்களும் தங்கள் கைகளில் எடுத்து வந்த கோடாரிகளை அங்கேயே போட்டனர்.

காட்டிற்குள் சென்று மரத்தினை தேர்ந்தெடுத்தனர். ஆனால், அதனை வெட்டுவதற்கு அவர்களிடம் கோடாரி இல்லை. மரத்தை எப்படி வெட்டுவது என்று அந்த திறமைசாலிகள் சிந்தித்தனர்.

அப்பொழுது ஒரு திறமைசாலி சொன்னான், "நான் மரத்தின் மீது ஏறி கிளையை பிடித்துக் கொள்கிறேன். ஒருவன் எனது காலைப் பிடித்து தொங்க வேண்டும். அப்படியே நீண்ட சங்கிலி போல ஒருவர் காலை மற்றொருவர் பிடித்து தொங்கும்போது பாரம் தாளாமல் கிளை ஒடிந்து கீழே விழும்" என்றான். இதனை ஏற்றுக் கொண்ட மற்ற திறமைசாலிகளும் அப்படியே தொங்கினர். கிளையை பற்றிக் கொண்டிருந்த திறமைசாலி சொன்னான், "நான் இன்னும் பலமாக பற்றிக் கொள்கிறேன். அப்போது கிளை ஒடிந்து விழும்" என்று கூறிக் கொண்டே கையை அசைத்தான். அப்போது அவனது பிடி நழுவ, அனைவரும் கீழே விழுந்தனர். ஆனால், மரக் கிளையோ முறியவில்லை.

மரத்தை வெட்ட கோடாரிதான் முக்கியம் என்பதை நினைவில் கொள்ளாமல், அதனை வழியில் போட்டு விட்டு, தேவையில்லாத யோசனைகளை செய்யும் இவர்களைப் போன்று, **மக்களின் ஆதரவு என்ற கோடாரியை தேர்தல் நடத்தும் நேரத்தில் பயன்படுத்தாமல் வழக்கு தொடுத்து கால விரயம் செய்தவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும். மக்களின் பேராதரவு என்ற கோடாரியை வைத்துக் கொண்டுள்ள உண்மையான திறமைசாலிகள் யார் என்பதும் மக்களுக்கு நன்றாகத் தெரியும்.**

இந்தப் பொருட்காட்சியில் நேர்த்தியாக அரங்கங்களை அமைத்த அரசுத் துறை நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், மத்திய, பிற மாநிலத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய நெகிழி பொருட்களை மாண்புமிகு அம்மாவின் அரசுதான் முதன் முதலில் தடை செய்தது. இதற்கு பொதுமக்களாகிய நீங்கள் அளித்து வரும் ஆதரவு எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கின்றது.

இந்தப் பொருட்காட்சியில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழி பொருட்களை அறவே ஒதுக்கியும், அரங்கங்களை சுத்தமாக வைக்கவும், பொதுமக்களாகிய உங்களின் ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு விடை பெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

குடிமராமத்து திட்டம் என்பது ஒட்டுமொத்த மக்களின் எண்ணங்களை நிறைவேற்றுகின்ற திட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.01.2020 அன்று சட்டப்பேரவையில், குடிமராமத்து திட்டம் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து விவசாய பெருங்குடி மக்களும் தூர் வார வேண்டும் என்று கோரிக்கை வைத்து கொண்டு இருக்கிறார்கள். பொதுமக்களும் கோரிக்கை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் தூர்வாருது சரியில்லை என்ற ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார். அவரும் விவசாயம் செய்து கொண்டு தான் இருக்கிறார் என்று நினைக்கிறேன். நானும் விவசாயம் செய்து கொண்டு தான் இருக்கின்றேன். ஆகவே, தூர்வாருகின்ற பொழுது, அதில் படிந்த வண்டல் மண் தான் அகற்றப்படுகிறது. அப்படி வண்டல் மண் அகற்றுகின்ற பொழுது, பெய்கின்ற மழைநீர் முழுவதும் அந்த ஏரியில் சேமித்து வைக்கப்படுகின்றது, ஊரணியில் சேமித்து வைக்கப்படுகின்றது, குட்டையில் சேமித்து வைக்கப்படுகின்றது. ஆகவே, **பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு நீர்கூட வீணாகக்கூடாது என்பதற்காக தான் இந்த தண்ணீர் சேமிப்பை அரசு செயல்படுத்தி கொண்டு இருக்கிறது.**

ஏனென்றால் 2 வருடங்களுக்கு முன்பு எவ்வளவு கடுமையான வறட்சி என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். அதுவும் டெல்டா பாசன விவசாயியாக இருக்கின்றீர்கள். அந்த நெற்பயிர் முதிர்ச்சி அடைந்தபோது, 2 வருடத்திற்கு முன்பு பார்த்தீர்களானால் தண்ணீர் இல்லாததால் 2 இலட்சம் ஏக்கர் காய்ந்து போய் விட்டது. ஆகவே, குளங்கள் தூர் வாரப்பட்டு இருந்தால், அங்கே கொள்ளளவு அதிகமாகி, நீர் அதிகமாக தேக்கி வைத்திருக்க முடியும். அப்படி நீர் அதிகமாக தேக்கி வைத்திருந்தால், இந்த 2 இலட்சம் ஏக்கரை காப்பாற்றி இருக்கலாம். ஆகவே, இதையெல்லாம் தெரிந்து தான், விவசாய பெருங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று, விவசாயிகளின் பங்களிப்போடு தான் குடிமராமத்து திட்டத்தை நடைமுறைப்படுத்தி கொண்டு இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன்.

ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளி, அந்த விவசாயிகளே பயன்படுத்துகிறார்கள். ஒன்று ஏரி ஆழமாகிறது, மற்றொன்று விவசாயிகளுடைய நிலத்திற்கு இயற்கை உரமாக வண்டல் மண் பயன்படுகிறது. இது அரசாங்கம் செய்கின்ற ஒரு தனி திட்டம். முழுக்க முழுக்க விவசாயிகளின் பங்களிப்போடு தான் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன்.

அதேபோல, மேட்டூர்அணை கட்டப்பட்டு 83 ஆண்டு காலம் ஆகிறது. இந்த 83 ஆண்டு காலத்திலே, இந்த வண்டல் மண் எல்லாம் தேங்கி, கொள்ளளவு குறைகின்றது. நீர் தேக்கத்தில் வருகின்ற நீர், அதிகமாக தேக்கக்கூடிய சூழ்நிலை மாறி, குறைவான நீர் தேங்குகிறது. அணை முழு கொள்ளளவை எட்டுகின்ற விதமாக, அந்த வண்டல் மண் அள்ளுவதற்கு தான் நம்முடைய அரசு இந்த திட்டத்தை கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

இது ஒரு மகத்தான திட்டம். குடிமராமத்து திட்டம் என்பது ஒட்டுமொத்த மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற திட்டம். அதுவும் நான் விவசாயியாக இருக்கின்ற காரணத்தினாலே, நீரினுடைய அருமை தெரிந்த காரணத்தினாலே, நீர் மேலாண்மை திட்டத்தை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். அதற்காக 5 பொறியாளர்கள், ஓய்வு பெற்ற 2 தலைமை பொறியாளர்கள், 3 கண்காணிப்பு பொறியாளர்களை

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நியமிக்கப்பட்டு, தமிழகத்திலே எங்கெங்கு எல்லாம் நீர் வீணாக ஓடையின் வழியாக, நதியின் வழியாக, கடலில் போய் கலக்கின்றதோ, அந்த நீரை ஆங்காங்கே தேக்கி வைத்து, அந்த நீர் சேமிக்கின்ற திட்டத்தை துவக்கி வைத்திருக்கின்றோம். அதன்மூலமாக அதிகமான தடுப்பணைகளை கட்டி கொண்டு இருக்கின்றோம். அதிகமான ஏரிகள், குளங்கள், ஊரணிகள் எல்லாம் தூர் வாரப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இதில் எந்தவொரு தவறும் கிடையாது. வண்டல் மண்ணை தான் அள்ளுகிறார்கள். அதற்கு மேல் அள்ள அனுமதி கொடுப்பதில்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு Grand Anaicut Canal பற்றி சொல்லி இருக்கிறீர்கள். டெல்டா பாசனத்தில் இருக்கின்ற அந்த கால்வாய்கள் எல்லாம் சீரமைக்கப்படும் என்பதற்காக ஒரு திட்டத்தை தீட்டி மத்திய அரசிடம் அனுமதியை கோரியிருக்கின்றோம். கிட்டத்தட்ட 35,000 மேற்பட்ட கிலோ மீட்டர் தூரம் உள்ள கால்வாய்கள் இருக்கின்றன. அந்த கால்வாய்களில் நீர் செல்லுகின்றபோது, 20 சதவிகித நீர் வீணாகின்றது. அப்படி அந்த 20 சதவிகித நீரை மிச்சப்படுத்துவதற்காக நவீன முறையிலே கால்வாய் அமைக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் நிதி கோரப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் மேட்டூர் அணையிலிருந்து உபரிநீர் வீணாக கடலில் கலக்கிறது. அப்படி அந்த உபரிநீரை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, கரூர் – மாயனூர் கதவணையிலிருந்து விருதுநகர், குண்டாறு வரை இணைக்கும் மிகப்பெரிய திட்டத்தை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். அந்த திட்டம் மூலம் திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, குண்டாறு வரை செல்ல இருக்கின்றது. இதன்மூலமாக 6,000 கனஅடி தண்ணீர் கொண்டு செல்கின்ற அளவிற்கு கால்வாய் அமைக்கப்படும். அப்படி கால்வாய் அமைக்கின்ற போது, பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் உபரியாக செல்கின்ற போது, 6,000 கனஅடி தண்ணீரை எடுத்து இந்த மாவட்ட மக்களுக்கு தேவையான நீரை சேமித்து, பாசனத்திற்கு தேவையான நீர் வழங்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் நிறைய திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி கொண்டு இருக்கின்றோம். அந்த புள்ளி விவரங்கள் எல்லாம் என்னுடைய பதிலுரையில் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூர் அணையை பற்றி சொன்னார்கள். மேட்டூர் அணையை பொறுத்தவரைக்கும் 5 கிலோ மீட்டர் தள்ளி தான் நாம் தூர் வாரினோம். அரசாங்கம் அள்ளவில்லை. விருப்பப்படுகின்ற விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை இலவசமாக அள்ளிக் கொண்டு போகிறார்கள். அரசாங்கம் அள்ளுவது கிடையாது. விவசாயிகள் ஒரு நாளைக்கு 2,500 லாரி முதல் 3,000 லாரி வரை அள்ளுகிறார்கள். ஆகவே, 50 கிலோ மீட்டர் ஏன், என்னுடைய நிலத்தில் கூட அங்கிருந்து தான் அந்த மண் கொண்டு வந்து இயற்கை உரமாக பயன்படுத்துகிறோம். ஆகவே, சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற விவசாயிகள், சுமார் 50 அல்லது 60 கிலோ மீட்டர் இருக்கின்ற விவசாய பெருங்குடி மக்கள் கேட்டு கொண்டதற்கிணங்க அவர்களுடைய கோரிக்கையை ஏற்று 5 கிலோ மீட்டருக்கு அப்பால், எந்தவித சேதாரமும் பாதிப்பும் இல்லாமல் அரசு அதிகாரிகள், பொறியாளர்களை வைத்து அங்கே இருக்கின்ற வண்டல் மண்ணை தான் விவசாயிகள் அள்ளுகிறார்கள். அரசாங்கம் அள்ளவில்லை. அரசாங்கம் அவர்களுக்கு அனுமதி கொடுக்கின்றது. அதுவும் அந்த அனுமதி கூட, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்து அனுமதி வாங்கினால் தான் அதையும் அள்ள முடியும். இல்லை என்றால் அந்த மண்ணை அள்ளி விற்றுவிடுவார்கள். அதுவும் தடை செய்யப்பட்டு இருக்கிறது. விவசாய பெருங்குடி மக்கள் எந்தெந்த நிலம் வைத்திருக்கிறார்களோ, அந்த நிலத்தினுடைய உரிமையாளர்கள், சம்பந்தப்பட்ட வேளாண் துறை அதிகாரிகளிடம், வட்டாட்சியர்களிடம் அதற்குண்டான அத்தாட்சியை வாங்கி, அதை கொண்டு போனால், அங்கே இருக்கின்ற பொறியாளர்கள் அனுமதிக்கின்றார்கள். அந்த அனுமதியின் பெயரிலே

தமிழகத்திலே எங்கெங்கு எல்லாம் நீர் வீணாக ஓடையின் வழியாக, நதியின் வழியாக, கடலில் போய் கலக்கின்றதோ, அந்த நீரை ஆங்காங்கே தேக்கி வைத்து, அந்த நீர் சேமிக்கின்ற திட்டத்தை துவக்கி வைத்திருக்கின்றோம். அதன்மூலமாக அதிகமான தடுப்பணைகளை கட்டி கொண்டு இருக்கின்றோம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

மேட்டூர் அணையில் இருக்கின்ற வண்டல் மண் படிந்த இடங்களிலே அந்த மண்ணை அள்ளிக் கொண்டு வந்து விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு இயற்கை உரமாக இடுகிறார்கள் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி–குண்டாறு பற்றி சொல்லியிருக்கின்றார்கள். அது ஒரு மிகப் பெரிய நீண்ட திட்டம். எடுத்த உடனே செய்ய முடியாது, 20 ஆயிரம் கோடி ரூபாய் திட்டம். அந்த அளவிற்கு தமிழக அரசிற்கு நிதி வசதி கிடையாது. மத்திய அரசை அணுகி, மத்திய அரசு – மாநில அரசும் இணைந்து இரண்டும் சேர்ந்து செயல்படுத்துவதற்காக இன்றைக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சரிடத்திலே நான் எடுத்து சொன்னேன், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே எடுத்து சொல்லி இருக்கிறேன். அவர்களும் நமக்கு உதவி செய்வதாக இருக்கின்றார்கள். இந்த ஆண்டு இறுதியில் அந்த திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திட்டத்தை Open Panel மூலமாக கொண்டு போகிறோம். விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு நவீன முறையிலே இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது. அதுவும் அதிகமான தண்ணீரை கொண்டு செல்லக்கூடிய அளவிற்கு இந்த கால்வாய் அமைக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல், ரூ.34,853.83 கோடி மதிப்பீட்டில், 47,828 பணிகள் துவக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், சட்டமன்ற விதி எண்.110–இன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்து அளித்த பதில் – 07.01.2020.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், 2011–2012 முதல் 2016–2017 முடிய 6 ஆண்டுகளில் சட்டமன்ற விதி எண். 110–இன் கீழ் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட மொத்த அறிவிப்புகள் 1,055, அனைத்து அறிவிப்புகளுக்கும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 822 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். 230 அறிவிப்புக்கான திட்டப்பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன, 2 அறிவிப்புகளின் திட்டம் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையிலும், 1 அறிவிப்பு மத்திய அரசின் பரிசீலனையிலும் உள்ளன.

அதேபோல, 2017–2018 முதல் 2019–2020 முடிய மூன்றாண்டுகளில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, சட்டமன்ற விதி எண்.110–இன் கீழ் மொத்தம் 453 அறிவிப்புகளில் 417 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 114 அறிவிப்புகளின் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன, 303 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் இருக்கின்றன. 26 அறிவிப்புகளுக்கு திட்டப் பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 9 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலும், 1 அறிவிப்பு சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையிலும் உள்ளன. மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்றுவரை, ரூபாய் 34,853 கோடியே 83 இலட்சம் மதிப்பீட்டில் 47,828 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ரூபாய் 24,090 கோடியே 88 இலட்சம் மதிப்பீட்டில் 7,950 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஆகவே, 110–விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட பெரும்பாலான அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

வாரி வழங்கிய வள்ளல் கொடுத்து சிவந்த கரம்!

சினிமாத் துறையிலும், பின்னர் அரசியல் துறையிலும் சகாப்தம் படைத்து, தமிழக முதல்வராக 10 ஆண்டுக் காலம் பணியாற்றிய எம்.ஜி.ஆர்., இலங்கையில் உள்ள கண்டியில் 1917 ஜனவரி 17–ந்தேதி பிறந்தார். தந்தை கோபால மேனன்., தாயார் சத்தியபாமா.

கோபாலமேனன், கேரளத்திலும், தமிழ்நாட்டிலும், திருச்சூர், அரூர், கரூர், எர்ணாகுளம் முதலிய இடங்களில் மாஜிஸ்திரேட்டாகப் பணியாற்றினார். பின்னர் இலங்கைக்குச் சென்று ஒரு கல்லூரியில் முதல்வராக அமர்ந்தார். அப்போதுதான் எம்.ஜி.ஆர் பிறந்தார். இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் இராமச்சந்திரன் எம்.ஜி.ஆருக்கு 2½ வயதாகும் போது தந்தை இறந்து விட்டார். கோபாலமேனன் காலமானதும், சத்தியபாமா, குழந்தைகளுடன் தமிழ்நாட்டுக்கு வந்து கும்பகோணத்தில் குடியேறினார். கும்பகோணத்தில் உள்ள அணையாடி பள்ளிக்கூடத்தில் எம்.ஜி.ஆர் சேர்க்கப்பட்டார். வறுமையுடன் போராடிக் கொண்டு, குழந்தைகளை அன்புடன் வளர்த்தார் சத்தியபாமா.

வறுமை காரணமாக எம்.ஜி.ஆர். படிப்பைத் தொடர முடியாமல் நாடகங்களில் நடித்தார். நல்ல சிவப்பாகவும், அழகாகவும் சுருட்டை முடியுடனும் இருந்த எம்.ஜி.ஆருக்கு நல்ல வேடங்கள் கிடைத்தன. மதுரை வீரன், குலேபகாவலி முதலிய படங்களில் நடித்து "வசூல் சக்ரவர்த்தி" என்று பெயர் எடுத்தார். சினிமாத்துறையில் புகழேணியில் உயரே உயரே சென்று கொண்டிருந்த எம்.ஜி.ஆர். அரசியலிலும் உயர்ந்து கொண்டு போனார். எம்.ஜி.ஆருக்கு, ரசிகர்களும், தொண்டர்களும் ஏராளம். அவர் எதைச் செய்தாலும் அதை வேதவாக்காக ஏற்று, செயல்பட்டார்கள்.

1977ஆம் ஆண்டு தமிழக முதல்வராக ஆட்சி பொறுப்பேற்றபோது 30.06.1977 அன்று தலைமைச் செயலக அதிகாரிகள், அலுவலர்கள் முன்பு ஆற்றிய உரையின் சுருக்கம்.

"கொடுத்து, கொடுத்துச் சிவக்க வேண்டிய கரங்களாக' என்னை ஆக்கிவிட்டிருக்கிறார்கள் என்பதையும் நாடு புரிந்திருக்கும்: நீங்கள் நன்கு தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை.

எந்த அமைச்சர்களானாலும், எப்படிப்பட்டத் திறமை படைத்த அமைச்சர்களானாலும், பதவியிலே வந்து உட்காரும்பொழுது அவர்கள் பதவியைப் பற்றி எண்ணுவார்களேயானால், ஒரு கண நேரம் தம்மை மறந்து அகந்தையிலே மூழ்கிவிட்டார்களேயானால் அதன் விளைவு எவ்வளவு பயங்கரமாக ஒரு நாட்டைத் தாக்கும் என்பதை வரலாறு நமக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது.

ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்றவர்கள் மக்களேதான் என்பது மக்களாட்சித் தத்துவத்திலே ஒரு முடிவான உண்மைதான் என்றபோதிலும், நடத்தித் தருபவர்கள் மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்கு உதவி செய்பவர்கள் உங்களைப் போன்ற பொறுப்புமிக்கவர்கள்தான் என்பதை இந்த நாடு என்றும் மறக்கக்கூடாது என்பதை நான் பல்வேறு நேரங்களில் கூறியிருக்கிறேன்.

இதை நான் சொல்லுவதற்குக் காரணம் இந்த நாட்டிற்காக உழைக்கின்ற நீங்கள் தான் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்பது மட்டுமல்ல கோடிக்கணக்கான தமிழகத் தாய்மார்களின் மானத்தையும், தமிழகக் குழந்தைகளின் எதிர்காலத்தையும், தமிழ்நாட்டின் உயர்வையும் காப்பாற்றி, பேணி வளர்த்து, மற்ற மாநிலங்களில், இன்னும் சொல்லப்போனால் வெளிநாடுகளில், அங்கே இருக்கின்ற ஆன்றோர்கள் அனைவரும் உங்களைப் பார்த்து பொறாமைப்பட வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள் என்பதை இங்கே நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டி விரும்புகிறேன்.

நானோ எனது நண்பர்களோ நிச்சயமாக உங்களுடைய குறைகளை ஆராய்வதிலும், உங்களுடைய தொல்லைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவதிலும், உங்களோடு இணைந்து நான் முதலமைச்சர் என்ற

பதவியில் இருந்தாலும் தோளோடு தோள் நின்று, உங்களுடைய தொண்டனாக, தோழனாக, நண்பனாக இருப்பேன் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பவேண்டும்.

நாங்கள் உங்களை நம்பித்தான் வந்திருக்கின்றோம். எங்கள் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வது என்றால், எங்களுக்காக அல்ல. உங்களை வாழ வைக்கின்ற தெய்வங்களாக இருக்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்காக நீங்கள் நிச்சயமாகத் தொண்டு செய்வீர்கள் என்பது மட்டுமல்ல, அவர்களுக்காக உழைப்பீர்கள் என்ற உத்திரவாதத்தைத் தருகின்ற நேரத்திலேயெல்லாம் உண்மையிலே நான் புல்லரித்துப் போனேன் என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும்.

இந்த நாடு யாரை நம்பியிருக்கிறது? ஐந்தாண்டுக் காலம், இரண்டாடுக் காலம் அல்லது ஓராண்டுக் காலம் அல்லது பத்தாண்டுக்காலம் அல்லது ஏழாண்டுக் காலம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த இடைக்காலத்தில் வந்துபோகின்ற அமைச்சர்களை மட்டும் நம்பியா இந்த நாடு இருக்கிறது? மனிதனுடைய ஆயுள் எவ்வளவு என்பதைச் சொல்ல முடியாத சூழ்நிலையில் நாமிருக்கின்றோம்.

தமிழகத்தில் உள்ள யாரோ ஒரு குடும்பம் யாரோ ஒரு தனி மனிதர், எங்கோ கஷ்டப்பட்டால் நமக்கு என்ன என்று நினைக்கின்ற மனநிலை, அலட்சியம், அந்த சுயநலம், யாருக்கும் வந்துவிடக்கூடாது என்பதிலே நாங்கள் மிக மிக எச்சரிக்கையாக இருப்போம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது என்னுடைய நீங்காத கடமையாகக் கருதுகின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலான கிராமங்களில், 'குடிநீர் இல்லை', குடிநீர் இல்லை என்ற பிரச்சினை இருக்கிறது என்பதைத் தயவுசெய்து நீங்கள் அலட்சியப்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் அந்த ஒன்றை மட்டும் இங்கே நான் வெளியிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். குடிப்பதற்குத் தண்ணீர்தான் கேட்கின்றார்கள். நல்ல தண்ணீர்தான் அவர்களுக்குத் தேவை. எங்கு போனாலும் இந்தக் குறை இல்லாமல் இல்லை.

இந்தச் சாதிக்காக ஒன்று, இந்த மதத்திற்காக ஒன்று, இந்த பிரிவுக்காக ஒன்று என்ற நிலைமையை நாம் ஏற்படுத்துவோமானால், சிந்திப்போமானால்—நம்முடைய அறிவு, நேர்மை, உழைப்பு, நம்முடைய திறமை, நல்ல எண்ணம் ஆகியவை வீணாகிவிடும் என்ற அச்சம் எனக்கு நிறைய உண்டு. ஆகவே நாம் அதற்கெல்லாம் அப்பாற்பட்டு ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டிய கட்டாயம் இன்று நாட்டிலே உருவாக்கப்பட்டு இருக்கிறது.

ஒரு நாட்டை வாழ்விக்கின்றவர்களுடைய வாழ்க்கை நிச்சயமாகப் பாதுகாப்போடு அமைய வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறேன் என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நாம் எல்லோரும் மனிதர்கள்தான். எல்லோரும் ஓர் குலம்தான். எல்லோரும் ஓரினம் தான். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற எங்கள் அமரர் அண்ணாவின் கொள்கை அடிப்படையில் நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, எதையும் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன்.

தமிழக மக்கள் நல்வாழ்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை ஐந்தாண்டுக் காலத்திற்குள் இந்தியத் துணை கண்டத்திற்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை உங்களுக்க நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாற்றத்தைச் செய்ய நீங்கள் துணை புரிய வேண்டும்.

நான் பொறுப்பேற்றிருக்கின்ற நிலைமையில் இதைச் சொல்ல வேண்டியது என் நீங்காத கடமை. மனத்தில் எதையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது என் கருத்து, ஆகவே சமுதாயத்தை, தமிழகத்தைக் காப்பாற்றி, எந்த ஒரு அழிவுப் பாதைக்கும் இளைஞர்களை இழுத்துச் செல்வதற்கு மற்றவர்கள் வாய்ப்புத் தராமல், தடைபோட வேண்டிய அறிவால், ஆற்றலால், திட்டங்களால் நிறைவேற்ற வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை— நம்மிடம் தமிழக மக்கள் இந்த 1977ஆம் ஆண்டில் ஒப்படைத்திருக்கிறார்கள்.

அன்று 1967. இன்று 1977 என்றார்கள். அன்றைக்கு அறிஞர் அண்ணா இருந்தார்கள். நான் சாதாரணமான ஒருவன். ஆனால் எண்ண அலைகள், குமுறல்கள், மக்களுடைய உள்ளத்தில் எப்படியிருக்கின்றன என்பதை மட்டும் நிச்சயமாக என்னால் சரியாகப் பிரதிபலிக்கமுடியும். அவைகளை மட்டும் நீங்கள் உணர்ந்து எங்களுக்கு உதவி செய்வீர்களேயானால், உண்மையிலேயே சொல்லுகிறேன், எதிர்காலம் உங்களுக்கு வரலாற்றிலே இடத்தைத் தந்து உங்களைப் போற்றும், புகழும், என்றும் தமிழகம் உங்களை மறக்காது.

வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு, பல சோதனைகளில் வெற்றி கண்ட, நடிகராக உயர்ந்து, அரசியலில் மும்முறை முதலமைச்சரான எம்.ஜி.ஆர் மறைந்தாலும், மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

நன்றி : பாரதரத்னா புரட்சித்தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்
எழுச்சிமிகு உரைகள் (1977–1987)
எனும் நூலிலிருந்து...

சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருப்பதை மத்திய அரசு ஆய்வு செய்துதான் தமிழ்நாட்டிற்கு முதலிடம் கொடுத்துள்ளது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.01.2020 அன்று சட்டப்பேரவையில், சட்டம் ஒழுங்கில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது குறித்தும், உள்ளாட்சி தேர்தல் குறித்தும், சேப்பாக்கம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எந்த ஆதாரத்தை வைத்து சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று சொல்கிறீர்கள். புள்ளி விவரத்தோடு மத்திய அரசு கொடுத்திருக்கிறது. அந்த ஆதாரத்தின் அடிப்படையில் தான் தமிழ்நாடு சட்டம் ஒழுங்கில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்ந்து கொண்டு இருக்கிறது என்று கூறுகிறோம். உங்களுடைய ஆட்சியிலே எப்படி நடந்தது, புள்ளி விவரமாக தெரிவிக்கட்டுமா? உங்கள் மேல் என்ன குற்றச்சாட்டு இருக்கிறது என்பது எங்களுக்கு தெரியும். திருப்பூரில் என்னென்ன செய்தீர்கள் என்பது எங்களுக்கு தெரியும். அதை எல்லாம் பேசுவது என்றால் சரியான முறையாக இருக்காது. நீங்கள் உள்நோக்கத்தோடு பேசுவதை விட்டுவிட்டு, உண்மை நிலையை எடுத்து சொல்லுங்கள்.

சட்டம் ஒழுங்கில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்று நாங்கள் சொல்லவில்லை, மத்திய அரசு ஆய்வு செய்து கொடுத்திருக்கிறது. “இந்தியா டுடே” என்ற ஆங்கில பத்திரிகை கொடுத்திருக்கிறது. நாங்களே சொல்லவில்லை. சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்று மற்றவர்கள் சொல்லியதை தான் நாங்கள் சொல்கிறோம்.

வேண்டுமென்றே திட்டமிட்டு ஏதாவது ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டும் என்று தான் வருகிறார்களே தவிர, உண்மை நிலையை எடுத்து சொல்லவில்லை. சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருப்பதற்கு பல்வேறு காரணிகளை ஆய்வு செய்து மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு முதலிடம் கொடுத்திருக்கிறது. ஆனால், வேண்டுமென்றே திட்டமிட்டு, வேறு ஒரு நோக்கத்தின் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். கவர்னர் உரைக்கு நீங்கள் வாருங்கள், நீங்கள் பேசுங்கள், நாங்கள் பேசினால் இன்னும் அதிகமாக இருக்கிறது. உங்களை பற்றி பேசுவதற்கு எங்களுக்கு அதிகமாக இருக்கிறது ஆதாரம். அதை பற்றி நாங்கள் பேசினால் தேவையில்லாத விவாதம் தான் ஏற்படும்.

மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும் பல்வேறு சமயங்களிலே விளக்கம் கேட்டு பேசினார்கள். அதை எல்லாம் அனுமதித்து இருக்கின்றோம். அதை எல்லாம் கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றோம். ஆனால் இங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் ஒரே ஒருவர் தான் பிரச்சினைக்குரியவர். அவர் தான் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு.ஜெ.அன்பழகன் அவர்கள். எப்பொழுது அவையில் பேசினாலும், அவர் சொல்லுகின்ற கருத்திற்கு தான் பிரச்சினையே உருவாகிறது. இது

அனைவருக்கும் தெரியும். தெரியாதது ஒன்றுமே கிடையாது. இங்கே இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாக தெரியும். ஆகவே, வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு தவறான தகவலை தெரிவித்துக் கொண்டு இருக்கிறார் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அது இப்பொழுது நிஜமாகிவிட்டது. நான் ஏற்கெனவே சொன்னேன். கவர்னர் உரை மீது பேசியிருந்தால் எந்த பிரச்சினையும் கிடையாது. அதற்கு மீறி பேசும் போது தான் இந்த பிரச்சினையே உருவாகின்றது. அவர் தனிப்பட்ட முறையிலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரை விமர்சனம் செய்யும் போது தான் இந்த பிரச்சினையே உருவாகின்றது. அவர் நேரடியாக குறிப்பிட்ட காரணத்தினால் தான், அவர் எழுந்து பேசினார். யாராக இருந்தாலும் உணர்ச்சிகள் உண்டு. அந்த உணர்ச்சியின் அடிப்படையில் தான் எழுந்தாரே தவிர வேறு எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆகவே, கவர்னர் உரையிலே பேசியிருந்தால் எந்த பிரச்சினையும் எழுந்திருக்காது. ஆகவே, நீங்கள் ஒரு கருத்தை சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு மறுப்பு கருத்தை ஆளுங்கட்சியிலிருந்தும் சொல்லப்படுகிறது. அந்த உண்மைநிலை தெரிந்து அடுத்த தலைப்பிற்கு போனால் சரியாக இருக்கும். அதையே திருப்பி திருப்பி பேசி, பிரச்சினையை உருவாக்கி, அவை சுமூகமாக நடைபெற்று கொண்டு இருக்கின்ற சூழ்நிலையை மாற்றி திசைதிருப்ப பார்க்கிறார் என்பது தான் என்னுடைய கருத்து என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகின்ற போது கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டார் என்று தெரிவித்தார். **தனிப்பட்ட முறையிலே விமர்சனம் செய்கின்ற போது தான் பிரச்சினையே வருகின்றது. பொதுவான பிரச்சினைகளை சொல்லுகின்ற போது யாருக்கும் எந்தவித உணர்வும் ஏற்படாது.** தனிப்பட்ட முறையிலே அவர்கள் குற்றத்தை சாற்றுகின்ற போது, யாராக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, அது வரத்தான் செய்யும். ஆகவே, அதை தவிர்த்துவிட்டு, அதற்கு ஏற்றவாறு அவையினுடைய மரபை கடைப்பிடித்து பேசினால் இந்த பிரச்சினை எழாது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே உள்ளாட்சித் தேர்தல் சரியான முறையிலே நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டை சொன்னார். நான் உண்மையாக சொல்லுகின்றேன், எந்த இடத்திலும், எந்த தவறும் நடைபெறவில்லை. அரசு ஊழியர்கள் தான் இந்த வாக்குகளை எண்ணினார்கள். அப்படி என்றால் அரசு ஊழியர்கள் தவறு செய்தார்களா? ஆசிரியர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் வாக்குகளை எண்ணினார்கள். காலை 8 மணிக்கு தொடங்கி, அடுத்த நாள் காலை 10 மணி வரை நின்று கொண்டே வாக்குகளை எண்ணினார்கள். தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். அத்தனை முகவர்களுமே, தடுப்பு அமைக்கப்பட்டு, வெளியே நின்று தான் பார்க்கிறார்கள். அது எந்த கட்சியாக இருந்தாலும் சரி. சுயேட்சையாக இருந்தாலும் சரி. ஆகவே, இதில் எந்த தவறும் நடைபெறவில்லை. என்னுடைய தொகுதியிலே, நங்கவள்ளி ஒன்றியத்திலே 2 ஒன்றிய கவுன்சிலர், ஒருவர் 11 வாக்குகளிலே தோல்வியுற்றார், மற்றொருவர் 17 வாக்குகள் வித்தியாசத்திலே தோல்வியுற்றார். அதற்கு மறுவாக்கு எண்ணிக்கை கூட எண்ணப்படவில்லை. இரண்டு பேரும் மனு கொடுத்தனர், பிறகு கூட எண்ணப்படவில்லை. எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணை தலைவர் அவர்கள் பேசுகின்ற போது, பத்திரிகையிலே வெளிவருகிறது. ஆகவே, இதில் பணியாற்றிய அதிகாரிகளுக்கு எல்லாம் ஒரு அவப்பெயர் ஏற்பட்டுவிடும் என்பதால் தான் இதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். **இந்த தேர்தலை பொறுத்தவரைக்கும், தேர்தல் ஆணையம் முறையாக செயல்பட்டு இருக்கிறது. அந்த தேர்தல் பணியில் ஈடுபட்ட அதிகாரிகள் அனைவரும் நேர்மையோடும், நீதியோடும், தர்மத்தோடும், நடுநிலையோடும் செயல்பட்டு இருக்கின்றார்கள்.** அதனால் தான் சுமார் 450 சுயேட்சைகள் இன்றைக்கு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அது சாதாரண விஷயம் இல்லை. அவர்கள் எந்த கட்சியும் சேராதவர்கள். ஆளுங்கட்சியும் கிடையாது, எதிர்க்கட்சியும் கிடையாது. உங்கள் கூட்டணிக் கட்சியிலே இடம் பெற்றவர் கிடையாது, எங்கள் கூட்டணி கட்சியிலே இடம் பெற்றவர் கிடையாது. ஆகவே, **எந்த பின்பலமும் இல்லாத சுயேட்சை வேட்பாளர்கள் கூட வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த தேர்தல், தேர்தல் ஆணையம் மூலமாக எவ்வளவு சிறப்பாக, நடுநிலையோடு நடைபெற்று இருக்கிறது** என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களை பொறுத்த வரைக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டணி 43.73 சதவிகிதம் வாக்குகளை பெற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 45.32 சதவிகிதம் பெற்றிருக்கிறது. நீங்கள் 1.59 சதவிகிதம் வாக்குகள் தான் வித்தியாசமாக இருக்கிறீர்கள். அதேபோல மாவட்ட ஊராட்சி உறுப்பினர், 39.60 சதவிகிதம் வாக்குகள் அண்ணா திமுக கூட்டணி பெற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40.35 சதவிகிதம் வாக்குகள் பெற்றிருக்கிறது. 0.75 சதவிகிதகம் தான் நீங்கள் அதிகமான வாக்குகளை பெற்றிருக்கிறீர்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

தமிழ்நாடு பெற்றுள்ள பல்துறை வளர்ச்சி, உரக்கப் பறைசாற்றும் விதமாக அமைந்துள்ளது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 08.01.2020 அன்று சட்டப்பேரவையில், சிறந்த நல்லாட்சிக்கான பல்வேறு குறியீடுகளில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மத்திய அரசு தெரிவு செய்து அறிவித்தது தொடர்பாக மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எல்லா துறைகளையும் கணக்கிட்டு தான் இதிலே முதன்மையாக கொடுக்கிறார்கள். எல்லாவற்றிலும் முதன்மையாக வருவதற்கில்லை. 25.12.2019 அன்று **நல் ஆளுமை தினத்தை முன்னிட்டு, மத்திய இணை அமைச்சர் திரு. ஜீதேந்திர சிங் அவர்கள் வெளியிட்ட நல் ஆளுமை குறியீட்டில் தமிழ்நாடு அரசு முதல் இடம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டு மக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின் முயற்சியாலும், கடின உழைப்பாலும் இந்த நிலை எட்டியிருக்கின்றது.**

- வேளாண்மை – வேளாண் பொருட்கள் உற்பத்தி, ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, பால் உற்பத்தி, தோட்டப் பயிர், இறைச்சி மற்றும் பயிர் காப்பீடு.
- வர்த்தகம் மற்றும் தொழில்துறை – தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, தொழில் தொடங்க அனுமதி பெறுதல், குறு மற்றும் சிறு தொழில்கள் வளர்ச்சி.
- மனிதவள மேம்பாடு – பள்ளி மற்றும் உயர்கல்வி, துவக்க கல்வி இடைநிற்றல், ஆண் பெண் பிறப்பு விகிதம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பதிவு செய்தல், கைத்திறன் கற்பித்தல், சுயவேலைவாய்ப்பு.
- பொது சுகாதாரம் – ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை, வேலை நேரம் மற்றும் பணிபுரியும் மருத்துவர்கள், மருத்துவர்களின் எண்ணிக்கை, தாய்–சேய் பிறப்பு விகிதம், பேறுகால இறப்பு விகிதம், மொத்த பிறப்பு விகிதம், நோய் தடுப்பு சாதனங்கள்.
- உட்கட்டமைப்பு வசதிகள் – மக்களுக்கு குடிநீர் வசதி, திறந்தவெளி கழிப்பறை இல்லா நகரம் மற்றும் கிராமங்கள், கிராமங்களில் மின்வசதி, 24 மணிநேர மின்வசதி, தேவைக்கேற்ற மின்சாரம் வழங்குதல், தனிநபர் வருமானம்.
- பொருளாதார ஆளுமை – மாநில மொத்த உற்பத்தி மற்றும் வளர்ச்சி விகிதம், தனிநபர் வருமான வளர்ச்சி, நிதி பற்றாக்குறை, மாநிலத்தின் வரி வருவாய் மற்றும் இதர வருவாய், மாநில கடன்.
- சமூகநலம் மற்றும் சமூகவளர்ச்சி – ஆண் பெண் பிறப்பு விகிதம், மருத்துவ காப்பீடு, கிராம வேலைவாய்ப்பு உறுதி, வேலையில்லாதோர் எண்ணிக்கை, அனைவருக்கும் வீடு, பெண்களின் பொருளாதார முன்னேற்றம், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான குற்றங்கள்.
- நீதி மற்றும் பாதுகாப்பு – சட்டம் ஒழுங்கு மற்றும் குற்ற விகிதம், பெண் காவலர்களின் எண்ணிக்கை, முடிவு காணப்பட்ட நீதிமன்ற வழக்குகள் மற்றும் நுகர்வோர் வழக்குகள்.
- சுற்றுச்சூழல் – மாநிலத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், மாநிலத்தின் வனத்தின் பரப்பளவு மாற்றம்.

மக்களை மையமாகக் கொண்ட நிருவாகம், சேவை சட்டங்களை மாநிலத்தில் நடைமுறைப்படுத்துதல், உதாரணமாக ஆட்சியை கணினி மற்றும் மொபைல்போன் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் பணிகள், உதாரணமாக உழவன் செயலி, காவலன் செயலி, இ–சேவை மையம், ஒற்றைசாரள முறை போன்றவை, என மொத்தம் பத்துப் பிரிவுகளில், 50 தரவுகளை ஆய்வு செய்து இந்தக் குறியீடு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் அடிப்படையில் தான், இந்த தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு முதலிடம் வகித்தது. இதனை வெளியிட்டுள்ள நிருவாக சீர்திருத்தம் மற்றும் பொதுகுறைதீர் துறையானது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் மத்திய அரசுத் துறையாகும். இத்துறை தான் பிரதம மந்திரி விருகளும், மின் ஆளுமை விருதுகளும் பல வருடங்களாக வழங்குகின்றன. இதில் இடம்பெறுகின்ற அமைப்புக்கள் எல்லாம் இந்த விருதுகளை தேர்வு செய்கின்ற அமைப்புகள்.

- இந்திய ரிசர்வ் வங்கி
- இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு நிறுவனம் (Census of India)
- தேசிய குற்ற ஆவண காப்பகம் (NCRB) – மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் கூட இதில் இடம்பெற்றிருக்கிறார்கள்.
- தேசிய குடும்ப நல கணக்கெடுப்பு (NHS)
- மத்திய அரசின் புள்ளிவிவரம் ஆண்டு புத்தகம் (Statistical Year Book)
- தேசிய மாதிரி கணக்கெடுப்பு (NSSO)
- இந்திய பொது நிதி புள்ளிவிவரங்கள் (Indian Public Finance Statistics)
- கல்விக்கான மாவட்ட தகவல் அமைப்பு (DISE)

போன்ற அதிகாரப்பூர்வமான, நம்பத்தகுந்த மத்திய அரசுத் துறை புள்ளி விவரங்கள் மற்றும் பல்வேறு அரசு துறைகளின் ஆய்வறிக்கைகள் ஆகியவை ஆய்வு செய்து இக்குறியீடு வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூறிய, இந்தியாவின் தலைசிறந்த நிறுவனங்களின் புள்ளிவிவரங்கள் செயற்கையானதா? என்பதை தாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இக்குறியீட்டின் உட்பரிவுகளான நீதி மற்றும் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு ஆகிய பிரிவுகளில் தமிழ்நாடு முதலிடமும், பொது சுகாதாரத்தில் இரண்டாவது இடமும் பிடித்துள்ளது. சுற்றுச்சூழலில், மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது. மனிதவள மேம்பாட்டில் மற்றும் பொருளாதார ஆளுமையில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளது. மரியாதைக்குரிய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் கூறியதைப் போல, இது செயற்கையான குறியீடு என்றால், எல்லா தரவுகளிலும் தமிழ்நாடு முதலாவதாக வந்திருக்கும். அப்படி அல்ல. எல்லா தரவுகளையும் கணக்கிட்டு தான், அதில் ஒவ்வொன்றிற்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கிறார்கள். அந்த மதிப்பெண் அடிப்படையில் தான், தரவரிசையில் நாம் முதலிடம் வகிக்கின்றோம்.

தி.மு.க.வுடன் கூட்டணியில் உள்ள காங்கிரஸ், புதுச்சேரியில் ஆட்சி அமைத்துள்ளது. நல் ஆளுமைக்கான குறியீட்டில், புதுச்சேரி யூனியன் பிரதேசங்களில் முதலிடத்தை பெற்றுள்ளது. இதில் இருந்தே, எந்தவித விருப்பு, வெறுப்பின்றி, உள்ளது உள்ளபடியே நல் ஆளுமை குறியீடு மத்திய அரசால் வெளியிடப்பட்டு உள்ளது என தெளிவாகிறது. அதேபோல புதுச்சேரியும் அப்படித்தான், புள்ளி விவரத்தின்படி தான் அவர்கள் மதிப்பெண்ணை கொடுத்து தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே இந்தியா டுடே இதழ், உங்களுக்கு தெரியும் ஒரு புகழ்பெற்ற பத்திரிகை, அவர்களும் அதைத்தான் தெரிவித்திருக்கிறார்கள்.

சர்வதேச நிறுவனமாகிய பிராஸ்ட் அண்ட் சல்லிவன் தொடர்ந்து மூன்றாவது முறையாக வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் தலைமை பண்பு குறியீட்டில் இந்தியாவிலேயே இரண்டாவது சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை தேர்வு செய்துள்ளது.

தேசிய பொருளாதார ஆய்வு நிறுவனத்தின் ஆய்வறிக்கை (NCAER), பொது விவகாரங்கள் குறியீடு (Public Affairs Index) உள்ளிட்ட பல்வேறு அரசு சாரா அமைப்புகளும், தமிழ்நாட்டை இந்தியாவின் இரண்டாவது சிறந்த மாநிலமாகவும், நல் ஆளுமை மற்றும் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு இனங்களில் முதல் மாநிலமாகவும் அறிவித்துள்ளன.

மத்திய அரசின் பல்வேறு துறை புள்ளி விவரங்களையும் ஆராய்ந்து, மத்திய அரசால் வெளியிடப்பட்ட இந்த நல் ஆளுமைக் குறியீடும், பல்வேறு இந்திய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் ஆய்வு முடிவுகளைப் போலவே மாண்புமிகு அம்மாவின் அரசால் தமிழ்நாடு பெற்றுள்ள பல்துறை வளர்ச்சியை உரக்கப் பறைசாற்றும் விதமாக அமைத்துள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டெர்லைட் பிரச்சினையில் உண்மைத்தன்மையை அறிந்துதான் அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.01.2020 அன்று சட்டப்பேரவையில், ஜல்லிக்கட்டு போராட்டம் விசாரணை, ஸ்டெர்லைட் விசாரணை, புதிய நெல் ரகம் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு குறித்து மாண்புமிகு ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு அளித்த விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜல்லிக்கட்டு போராட்டம் நடைபெற்ற போது தமிழகத்தில் பல்வேறு இடங்களிலே போராட்டங்கள் நடைபெற்றது. வன்முறைகளும் நடைபெற்றது. அதை எல்லாம் விசாரிப்பதற்காகத் தான் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் நியமிக்கப்பட்டு, அவர் தலைமையிலே இன்றைக்கு விசாரணை கமிஷன் நடைபெற்று வருகிறது. ஒரு இடத்தில் நடைபெறவில்லை. தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களிலே நடைபெற்ற சம்பவங்களை விசாரித்து கொண்டு இருக்கிறார்கள். அதுதான் காலதாமதம் ஆகின்றது. அதுவும் விரைவாக கமிஷனுடைய அறிக்கையை வழங்க வேண்டும் என்று அவர்களிடத்திலே நாங்களும் தெரிவித்திருக்கின்றோம். ஆகவே விரைந்து அந்த கமிஷன் தனது அறிக்கையை வழங்கும் என்று நாங்களும் எதிர்பார்த்து கொண்டு இருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர், ஒரு மூத்த உறுப்பினர், சிறந்த வழக்கறிஞர். அவர் அந்த வழக்கறிஞர் தோரணையிலே இங்கே கருத்துகளை எடுத்து வைக்கின்றார். ஸ்டர்லைட் பிரச்சினை குறித்து நீதிமன்றம் வரை சென்று, நீதிமன்றம் சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்து, விசாரிக்கப்பட்டு வருகிறது. மாநில அரசும் அங்கே நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை நியமித்து, விசாரணை கமிஷனை நியமித்து, விசாரணை நடைபெற்று கொண்டு இருக்கிறது. ஆகவே, உண்மைதன்மையை அறிந்து தான் அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகவே, எடுத்த உடனே எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. இது ஒரு மிகப் பெரிய பிரச்சினை. நீதிமன்றத்திற்கு சென்று, நீதிமன்றத்தின் மூலமாக நடைபெற்று கொண்டிருக்கின்ற சம்பவம், இப்பொழுது கூட நீதிமன்றத்திலே இந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிக விளைச்சல் தரக்கூடிய புதிய தானிய வகைகளை கண்டுபிடிக்க ரூ.5 கோடி ஒதுக்கீடு!

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய நெல் ரகத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்று இங்கே கருத்தை சொல்லி இருக்கின்றார்கள். கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழகத்திலே ஆராய்ச்சி நிறுவனத்திற்காக 5 கோடி ரூபாய் இந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். புதிய நெல் ரகம், புதிய தானிய வகைகளை கண்டுபிடிப்பதற்காக, அதிக விளைச்சல் தரக்கூடிய தானியத்தை கண்டுபிடிப்பதற்காக கோவை வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையத்திற்கு அரசு 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எங்களுடைய அரசு தொடர்ந்து குரல் கொடுக்கும்!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
சட்டப்பேரவையில், முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம் – 07.01.2020

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காலையிலிருந்து நான் கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றேன். இலங்கை அகதிகள் பற்றி பேசினீர்கள். இப்பொழுது நான் நேரடியாகவே மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களை கேட்கின்றேன். எத்தனை ஆண்டுக் காலம் மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே இருந்தீர்கள். அப்பொழுது எல்லாம் இவர்களுக்கு குடியுரிமை பெற்று தருவதற்கு உங்களுக்கு ஞாபகம் வரவில்லையா. ஏன் மறந்தீர்கள். உங்களுக்கு அதிகாரம் கையில் இருந்தது. அதைத்தான் இன்று மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் சொல்லிக்கொண்டு இருக்கிறார். 12 ஆண்டு காலம் ஆட்சி அதிகாரத்திலே இருந்தீர்கள். அதற்கான வாய்ப்பை தமிழ்நாடு மக்கள் கொடுத்தார்கள் எதற்காக, ஆட்சியிலிருந்து செய்வதற்கு தான். ஏன் அதை தட்டிக் கழித்தீர்கள்? இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை பெற்று தரவில்லை, தரவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, 12 ஆண்டுகாலம் மத்தியிலே அமைச்சராக இருந்தீர்களா இல்லையா? அந்த அதிகாரம் எதற்காக கொடுத்தார்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு பாதிப்பு வருகின்றபோது, அந்த பாதிப்பிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காகத் தானே கொடுத்தார்கள். நீங்கள் செய்தீர்களா? குடியுரிமை பெற்றுத் தந்தீர்களா? இல்லையே. இன்றைக்கு மட்டும் வக்காலத்து வாங்கி கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் எங்களை பொறுத்தவரைக்கும், மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே இல்லை என்றாலும், எங்களுடைய கொள்கையிலிருந்து எப்பொழுதும் விலக மாட்டோம். உறுதிபட இருப்போம். அதுமட்டுமல்ல, இலங்கையிலிருந்து வந்து தமிழகத்தில் இருக்கின்ற அந்த தமிழர்களுக்கு அனைத்து உதவிகளும் நாங்கள் செய்து வருகின்றோம். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, மத்திய அரசாங்கம் கொடுத்த உதவியைத் தான் நீங்கள் செய்தீர்கள். வேறு எந்த உதவியையும் நீங்கள் செய்யவில்லை. ஆனால் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற, தமிழ்நாட்டு மக்களுக்கு அரசின் சார்பில் கொடுக்கப்படுகின்ற அனைத்து உதவிகளும் அந்த இலங்கை வாழ் தமிழர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல, அண்மையிலே நான் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களை சந்தித்த போது, இதை நான் தெரிவித்தேன். இந்த NRC எங்களுக்கு சம்மதம் அல்ல. ஒரு அகதியாக இங்கே வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நிச்சயம் நீங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பரிகாரம் செய்யப்படும் என்ற வார்த்தையையும் அவர் சொல்லி இருக்கிறார் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்களை பொறுத்தவரைக்கும், மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே இல்லை என்றாலும், எங்களுடைய கொள்கையிலிருந்து எப்பொழுதும் விலக மாட்டோம். உறுதிபட இருப்போம். அதுமட்டுமல்ல, இலங்கையிலிருந்து வந்து தமிழகத்தில் இருக்கின்ற அந்த தமிழர்களுக்கு அனைத்து உதவிகளும் நாங்கள் செய்து வருகின்றோம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

ஆகவே, நீங்கள் செய்யத் தவறியதை, நாங்கள் செய்து கொடுக்கின்றோம். அந்த இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இரட்டை குடியுரிமை வேண்டும் என்று கேட்கின்றார்கள். அவர்களுக்கு எங்களுடைய அரசு தொடர்ந்து குரல் கொடுக்கும். அதை பெற்றுத் தருகின்ற வரை நாங்கள் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி கொண்டு இருப்போம்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கும் பொங்கல் தொகுப்பு 1,000 ரூபாயும், அரிசி, என்னென்ன தமிழ்நாட்டு மக்கள் அரசு நலத்திட்ட உதவிகள் பெறுகிறார்களோ அத்தனையும் அந்த மக்களுக்கு கொடுக்கின்றோம். காலையில்கூட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக சொன்னார்கள், அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்குக் கூட அதிலே BC, MBC என்று இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட பிரிவு இல்லாமல், இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு அகதியாக வந்திருக்கின்ற படிக்கின்ற மாணவர்களுக்குக் கூட Scholarship–ம் அம்மாவுடைய அரசு வழங்கி கொண்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நல்ல அனுபவம் வாய்ந்தவர், திறமையாக பேசக்கூடியவர், எந்த நேரத்திற்கு எப்படி பேச வேண்டுமோ, அப்படி அழகாக பேசி சமாளிக்க திறமையுள்ள மூத்த உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் திரு.துரைமுருகன் அவர்கள். ஆகவே, எங்களைப் பொறுத்தவரைக்கும், எங்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்பு மூலமாக மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி இலங்கை வாழ் தமிழருக்கு நன்மை செய்வதற்காக பாடுபடுவோம் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறோம்.



மேகதாது அணை குறித்து சட்டப் போராட்டம் நடத்தி நிச்சயமாக வெற்றி பெறுவோம்!

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள்
08.01.2020 அன்று,
சட்டமன்றப் பேரவையில்
மேகதாது அணை விவகாரம் குறித்து
அளித்த பதில்

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

தென்பெண்ணை ஆறு குறித்த மூல வழக்கு ஏற்கனவே இருக்கிறது. அப்படி மூல வழக்கு இருக்கும்பொழுதே அவர்கள் கட்டிக் கொண்டிருந்தார்கள், நாமும் வாதாடிக் கொண்டிருந்தோம், இருந்தாலும் உச்சநீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளோம். மேகதாது அணையையும் கட்டக் கூடாது என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். ஏற்கனவே இதற்கு முன்பு கருநாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்படி காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபொழுது, நேற்றைய தினமே சொன்னேன், காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று கொண்டிருக்கும் போது, அப்போது அங்கு நீர்வளத் துறை அமைச்சராக இருந்தவர் அந்த இடத்திற்கே நேரில் சென்றார். நீங்கள் கூட்டணியில் இடம் பெற்றிருந்தீர்கள். இருந்தாலும் நம்முடைய கொள்கையிலிருந்து மாறுபடாமல் மேகதாது அணை கட்டினால் தமிழகம் வறண்டு போய்விடும். அதை உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி கொண்டு இருக்கின்றோம். எந்த வகையிலும் மத்திய அரசு சுற்றுச்சூழல் அனுமதி கொடுக்கக்கூடாது, நாம் இடைக்கால மனு அளித்திருக்கின்றோம், மூல வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, உங்களுடைய நோக்கமும், எங்களுடைய நோக்கமும் ஒன்றாக இருக்கின்றது. **மேகதாது அணை கட்டக் கூடாது என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். நீதிமன்றத்தின் மூலமாக சட்டப் போராட்டம் நடத்தி நிச்சயமாக வெற்றி பெறுவோம்** என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிமன்ற வழக்கில் இருக்கும் ஒரு பொருளைப் பற்றி பேசுவது மரபு அல்ல!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 08.01.2020 அன்று சட்டப்பேரவையில், உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் குறித்து சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய கேள்விக்குஅளித்த விளக்கம்.

மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே,

நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது, அந்தப் பொருளைப் பற்றி பேசுவது மரபு அல்ல என்று நீங்கள் பதில் சொல்லி இருக்கிறீர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களே பதில் சொல்லி இருக்கிறீர்கள். அது அவைக்குறிப்பில் இருக்கிறது. வேண்டுமென்றால் எடுத்துக் கொண்டு காட்ட சொல்கிறேன். அதைத்தான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி, நேற்றைய தினம் முழு அளவில் விவாதம் நடத்தப்பட்டு விட்டது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்றபோது, அதில் பல்வேறு வாதங்கள், விவாதங்கள் நடைபெறும். அப்போது நாம் சொன்ன கருத்துக்களெல்லாம் வெளியில் போகும். அது வழக்கிற்கு தேவையில்லாத இடையூறாக இருக்கும் என்பதைத்தான் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலிலே இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றீர்கள் என்று குரல் கொடுத்து கொண்டு இருந்தீர்கள். அதற்கு தான் இந்த புள்ளி விவரத்தை நான் கொடுத்தேன். நாடாளுமன்ற தேர்தலிலே நீங்கள் ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம், மக்களெல்லாம் எங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தீர்கள், அது இல்லை. இந்த உள்ளாட்சித் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு வாக்குகளைப் பெற்றிருக்கிறது என்ற புள்ளிவிவரத்தைத் தான் நான் சொல்லியிருக்கிறேன். அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை ஒப்பிட்டுத்தான் அதைப் பேசியிருக்கிறேன், சட்டமன்றத் தேர்தல் இல்லை. அண்மையில் தான் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்த நாடாளுமன்றத் தேர்தலிலே, அதிகமான வாக்குகளை உங்களுடைய கூட்டணி பெற்று, அதிகமான வேட்பாளர்கள் வெற்றி பெற்றார்கள். ஆனால் அது இப்போது தலைகீழாக மாறி விட்டது. அண்மையிலே நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலே இவ்வளவு வாக்குகள் தான் பெற்றிருக்கிறீர்கள், இவ்வளவு உறுப்பினர்களைத் தான் பெற்றிருக்கிறீர்கள் என்ற விவரத்தைத்தான் நேற்றைய தினம் நான் குறிப்பிட்டேன்.

அப்படித்தான் கனவு கண்டு கொண்டிருந்தீர்கள், நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. நாடாளுமன்றத் தேர்தலிலே போட்ட கணக்குப்படி உங்கள் கணக்கு சரியாக இருக்கும் என்று நினைத்தீர்கள். ஆனால், உள்ளாட்சிமன்றத் தேர்தலிலே மக்கள் தலைகீழாக மாற்றிவிட்டார்கள். ஆகவே, நாடாளுமன்றத் தேர்தலிலே கிராமப்புறங்களிலே எவ்வளவு வாக்குகள் வாங்கியிருக்கிறீர்கள் என்று அத்தனை பேருக்கும் தெரியும். ஆனால் இப்பொழுது உள்ளாட்சி மன்றத் தேர்தலில் உங்களுடைய நிலை என்ன? தலைகீழாக மாற்றப்பட்டுவிட்டது. இன்னும் 9 மாவட்டங்கள் இருக்கிறது. அந்த 9 மாவட்டங்களிலும் அதிக அளவிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர்கள் அதிக அளவு வெற்றி பெறுவார்கள், அதுவும் மாறத்தான் போகிறது. ஏனென்றால், நீங்கள் நாடாளுமன்றத் தேர்தலிலே சொல்லிக் கொண்டு இருந்தீர்கள்.

22 தொகுதிகளுக்கான சட்டமன்ற இடைத்தேர்தலிலே, நாங்கள் அதிக இடங்களை பெற்றுவிடுவோம் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள். ஆனால், அதற்குப் பிறகு, இடைத்தேர்தல் வந்தது. இரண்டும் உங்கள் கையிலே தான் இருந்தது. ஒன்று தி.மு.க. வசம் இருந்தது விக்கிரவாண்டி, மற்றொன்று, நாங்குநேரி காங்கிரஸ் வசம் இருந்தது. எவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் நாங்கள் வெற்றி பெற்றோம் என்பதை நாட்டு மக்கள் எங்களுக்கு அங்கீகாரத்தை கொடுத்திருக்கின்றார்கள்.

அதேபோலத்தான், நாடாளுமன்றத் தேர்தலிலே, கிராமப்புறத்திலே நீங்கள் அதிகமான வாக்குகளை பெற்றீர்கள். அதை வைத்து ஒவ்வொரு வேட்பாளரும் நாங்கள் இலட்சக்கணக்கான வாக்குகளை பெற்றோம் என்று சொன்னீர்கள். அண்மையில், வேலூர் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அதற்கு முன்பு ஒரு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். ஏற்கெனவே நாங்கள் திண்டுக்கல்லிலே அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். அதைவிட கூடுதலான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்று சொன்னார்கள். என்ன ஆகியது? வேலூர் தொகுதியில் வெறும் 0.70 சதவிகிதம் தான் வாக்குகள் வித்தியாசத்தில் தான் வெற்றி பெற்றீர்கள். வெறும் 8,000 வாக்குகள் வித்தியாசத்தில் தான் வெற்றி பெற்றீர்கள். ஆக, நீங்கள் பெற்ற வெற்றியை நான் மறுக்கவில்லை. நீங்கள் சொல்கிறீர்களே அதற்கு தான் நான் பதில் சொல்லி கொண்டு இருக்கின்றேன். மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர் சொன்ன கருத்துக்கு நான் பதில் சொல்கின்றேன். அப்பொழுது நடைபெற்ற தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல். அந்த நாடாளுமன்றத் தேர்தலிலே அதிக வாக்குகளைப் பெற்றோம், அதனால் அதிக இடங்களைப் பெற்றோம் என்று சொன்னீர்கள். இப்பொழுது நிலைமை மாறிவிட்டது, அந்தக் குறிப்பைத்தான் நான் குறிப்பிட்டேன்.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

பூக்களுக்கும் புன்னகையை கற்றுத் தந்த பொன்மனச் செம்மல்!

பெருமிதம் கொள்ளத் தக்க தம் வாழ்நாள் சேவைகளாலும், தம்மிடமிருந்து இந்தச் சமூகம் பெற்றுக் கொண்டதெல்லாம் நல்லதை மட்டுமே என்னும் பெருமை கொண்ட வாழ்வாலும், உலகெங்கும் வாழும் தமிழர்களின் உள்ளங்களில் எல்லாம், நிலைத்த இடம் பிடித்து, நினைவில் இருந்து நீங்காது வாழுகின்ற காவியம், கழக நிறுவனத் தலைவர், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்!

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மறைந்து, ஏறத்தாழ கால் நூற்றாண்டு கடந்த நிலையிலும், அவரது நிலைத்த புகழும், நிகரில்லா அழகும், நீதி உரைத்த அவரது தெளிவும், நேர்மைக்கே எந்நாளும் அஞ்சாது வாழ்ந்திட்ட அவரது நேர்மைத் திடமும், இன்றும் தமிழக மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் நீக்கமற்ற நிறைந்திருக்கின்றன.

தனக்காக வாழாது, பிறரின் சிரிப்பில் தம் அகம் மகிழ்ந்து, பிறர் பசி தீர்ப்பதில் தம் மனம் நெகிழ்ந்து, இவ்வுலகில் இருக்கும் காலமெல்லாம், இல்லையெனச் சொல்லாமல், எதிர் வந்து நிற்போர்க்கு அள்ளி அள்ளிக் கொடுத்து, பெறுபவர் முகம் பூரித்தது கண்டு, அதில் உச்சி குளிர்ந்து, வள்ளலெனவே வாழுகின்ற மனித மகான்களை, இந்தப் பூமி உள்ள காலம் வரை, மானுடம் நெஞ்சார நினைத்தே போற்றும் என்பதற்கு நம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நிலைத்த புகழ், ஓர் நிகரில்லா சாட்சி!

தமக்கென்று, எந்த ஒரு தனிப்பட்ட வாழ்கைகையும் இல்லாது, கோடான கோடி தமிழக மக்களுக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். உலகமே உயர்த்திப் போற்றும் ஒப்பற்ற தலைவராகவும், பூக்களுக்கும் புன்னகையை கற்றுத் தந்த பொன்மனச் செம்மலாகவும், கழகம் கண்டெடுத்த கலியுக வள்ளலாகவும், ஈகையின் பிறப்பிடமாகவும் வாழ்ந்து காட்டிய தலைவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

நன்றி : 'பாரத ரத்னா', புரட்சித் தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா சிறப்பு மலர்

அடுத்த ஆண்டிலிருந்து புத்தகக் காட்சிக்கு அரசு சார்பாக ரூ.75 இலட்சம் வழங்கப்படும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள்
09.01.2020 அன்று தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்படும் 43ஆவது சென்னை புத்தகக் காட்சியை துவக்கி வைத்து ஆற்றிய உரை

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்படும் 43வது சென்னை புத்தகக் காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

படைப்பாளர்களும், படிப்பாளர்களும் சூழ்ந்திருக்கின்ற அறிவுசார்ந்த இந்த இனிய விழாவிற்கு தலைமையேற்றுள்ள பத்மஸ்ரீ டாக்டர் நல்லி குப்புசாமி பெரியவர் ஐயா அவர்களே!

சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டுள்ள மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே!

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் டாக்டர்.வி.சரோஜா அவர்களே!

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்பண்பாடுத் துறை அமைச்சர் திரு.கே.பாண்டியராஜன் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் முன்னாள் அமைச்சர் திருமதி.பா.வளர்மதி அவர்களே!

சிறப்புரை ஆற்றவிருக்கின்ற முன்னாள் கல்வி அமைச்சர் முனைவர் வைகைச் செல்வன் அவர்களே!

வரவேற்புரையாற்றிய “பபாசி” தலைவர், திரு.ஆர்.எஸ்.சண்முகம் அவர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.விருகை ரவி அவர்களே! திரு.கே.வி.ராமலிங்கம் அவர்களே! திரு.தென்னரசு அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே! முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே!

கழகத்தினுடைய முன்னோடி பொறுப்பாளர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! விருது பெறும்

பதிப்பாளர்களே! எழுத்தாளர்களே ! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! நன்றியுரை ஆற்றவுள்ள "பபாசி" செயலாளர் திரு.எஸ்.கே.முருகன் அவர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டுதோறும், பொங்கல் திருநாளையொட்டி, மக்களின் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் சுற்றுலாப் பொருட்காட்சியும், அறிவுக்கு விருந்தளிக்கும் புத்தகக் காட்சியும் சென்னையில் ஒருசேர நடைபெறுவது ஒரு சிறப்பு அம்சமாகும்.

திரு.மாத்யூ அவர்களின் முயற்சியால், சில பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கம் தொடங்கப்பட்டது. புத்தக ஆர்வலர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அதிகமாக நூல்களை வெளியிடுவதற்காகவும், புத்தக வாசிப்பை பரவலாக்குவதற்காகவும், புத்தகங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் 24.08.1976இல் ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தக் கூட்டமைப்பு, முதன்முதலில் 1977ஆம் ஆண்டு சென்னை புத்தகத் திருவிழாவை நடத்தியது. இந்தப் புத்தகக் காட்சி பெற்ற வரவேற்பினைத் தொடர்ந்து, இந்திய மொழிகளில் குறிப்பாக தமிழ் மற்றும் இதர தென்மொழிகளில் நூல்களை வெளியிடும் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இந்தக் கூட்டமைப்பில் சேர்ந்தனர் என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் புத்தகத்திற்கு என்று ஒரு பொருட்காட்சி தனியாக ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இது பெருமைப்படத்தக்க ஒரு விஷயமாகும். இந்தப் புத்தகக் காட்சி சென்னையில் மட்டுமல்லாமல், ஆண்டுதோறும், மதுரை மற்றும் கோவை ஆகிய இடங்களில் இந்த அமைப்பால் நடத்தப்பட்டு வருவது என்பது உண்மையிலேயே பாராட்டக்குரியது.

மக்களின் வாசிக்கும் பழக்கத்தை பரவலாக்கும் இந்தத் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் 43ஆவது புத்தகக் காட்சியை தொடங்கி வைப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இந்தப் புத்தகக் காட்சி அனைத்து வயதினரும் கொண்டாடும் ஆனந்தத் திருவிழா. இந்தப் புத்தகக் காட்சி இன்று முதல் இம்மாதம் 21ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்தப் புத்தகக் காட்சியில் இடம் பெற்றுள்ள சிறப்பு அம்சங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ✶ கீழடி, அகழ்வாராய்ச்சி பற்றிய தமிழக தொல்லியல் துறையின் சிறப்பு அரங்கம் 3,000 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ளது. கீழடி, அகழ்வாராய்ச்சி அமைக்கப்பட்ட அரங்கு நம்முடைய மூதாதையர்கள் என்னென்ன பயன்படுத்தினார்கள், கிட்டத்தட்ட 2,500 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி வாழ்ந்தார்கள் என்ற வாழ்க்கையை நாம் எண்ணிப் பார்க்கின்ற அளவிற்கு, அப்பொழுதே நம்முடைய நாகரிகம் இன்றைய மக்கள் புகழ்கின்ற அளவிற்கு அந்தக் காலக்கட்டத்திலே இருக்கிறது என்று சொன்னால் நம்முடைய பெருமை, என் தமிழகத்தினுடைய பெருமை எந்தளவிற்கு இருக்கிறது என்பதை உணர்த்துகின்ற அளவிற்கு இந்தக் கீழடி அகழ்வாராய்ச்சி அப்படியே தத்ரூபமாக அரங்குகளை அமைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- ✶ திருவள்ளுவர் மணற் சிற்பம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அப்படியே தத்ரூபமாக திருவள்ளுவரை உரித்து வைத்த மாதிரி மணலில் அந்தச் சிற்பக் கலையைச் செய்தவருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- ✶ 15 இலட்சம் தலைப்புகளில், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடும் இலக்கியம், கலை, அறிவியல், தொழில் நுட்பம், வரலாறு, பொது அறிவு, விளையாட்டு, உணவு, உடல் நலம் உள்ளிட்ட பல பிரிவுகளுக்கான புத்தகங்கள் இந்தக் காட்சியில் இடம்பெற உள்ளது.
- ✶ 10,000 மாணவர்கள் பங்குபெறும் "சென்னை வாசிக்கிறது" என்ற ஒரு புதிய நிகழ்வு இந்த ஆண்டு நடைபெற உள்ளது.
- ✶ இந்தப் புத்தகக் காட்சியில், அறிவு சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளும், மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி போன்ற பல்வேறு நிகழ்வுகளும் நடைபெறுகின்றன என்பதை அறிவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.
- ✶ உலகப் பொதுமறையான திருக்குறள், பல்வேறு உலக மொழிகளில் வெளிவந்துள்ள நூல்களின் முகப்பு அட்டவணையை காட்சிப்படுத்துதல் என பல்வேறு புதுமையான நிகழ்ச்சிகள் இந்தப் புத்தக காட்சியில் இடம் பெற்றுள்ளன.

"மனிதனின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்" என்றார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். புத்தகம் என்பது மனிதர்களிடையே வாய் திறந்து பேசாமல் பேசுகின்ற நண்பன். அதேபோல், நம்மை ஒருபோதும் ஏமாற்றாத சிறந்த நண்பன். மனிதனுக்கும், இந்த உலகத்துக்கும் இடையில் பிணைப்பை ஏற்படுத்துவது புத்தகங்கள் மட்டுமே. புத்தகம் என்பது ஒரு அலங்காரப் பொருள் அல்ல. அது நம்மை நேர்மையான வழியில் வாழ்வதற்கு வழி நடத்துகின்ற தோழன். புத்தகங்கள் இல்லையெனில், மனிதகுலம் இத்தகைய வளர்ச்சியைக் கண்டிருக்க முடியாது. உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ, அதுபோலவே மனப் பயிற்சிக்கு புத்தக வாசிப்பு அடிப்படையானது. புத்தகத்தினை தனது உயிர் நண்பனாக ஏற்றுக் கொண்டவர்கள், புகழின் உச்சியில் அமர்ந்திருக்கிறார்கள். பலர் சாதனையாளர்களாகவும் மாறியிருக்கிறார்கள்.

'அடிமைகளின் சூரியன்' என போற்றப்பட்ட ஆபிரகாம் லிங்கன், புத்தகங்களைப் படித்தே உயர்ந்தவர். அத்தகைய பெருமைக்குரிய புத்தகக் காட்சி இன்றைக்கு திறக்கப்படுகிறது. ஜார்ஜ் வாஷிங்டன் வரலாறு என்ற புத்தகத்தை இரவல் வாங்கிப் படித்தவர், பிற்காலத்தில் அமெரிக்கா நாட்டின் அதிபராக உயர்ந்து சரித்திரம் படைத்திருக்கிறார்.

இலண்டன் நூலகத்தில், இருபது ஆண்டுகள், பல அரிய நூல்களை படித்து ஆய்வு செய்த காரல் மார்க்ஸ் அவர்கள் உலகின் பொதுவுடைமை தந்தையாக உயர்ந்தார்.

"காஞ்சிபுரத்தில் இருந்து, முதுகலை பட்டதாரியான ஓர் இளைஞன், சென்னை நோக்கிச் சென்றான். முடிவில் தமிழ்நாட்டின் முதல்வராக திரும்பினார்" என்று பேறிஞர் அண்ணாவை புகழ்வார்கள். அவர் சென்னை கன்னிமாரா நூலகத்தில் உள்ள பெரும்பாலான புத்தகங்களை படித்தவர். நூலகம் திறக்கும்போது உள்ளே நுழைபவர், இரவில் அது மூடப்படும்போது தான் வெளியே வருவாராம்.

மறைந்த குடியரசுத் தலைவர் திரு.அப்துல் கலாம் அவர்களின் பதவிக் காலம் முடிந்தபின், அவர் சொந்த இடத்திற்கு எடுத்துச் சென்றது 1000க்கும் மேற்பட்ட புத்தகங்களை மட்டும்தான். குடியரசுத் தலைவராக அவர் இருந்தபோதும், அவர் நேசித்ததும், வாசித்ததும் புத்தகங்கள்தான்.

நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள், தனது வாழ்க்கையை திருப்பிப் போட்ட புத்தகம் என, ஜான் ரஸ்கின் அவர்கள் எழுதிய Unto this last எனும் புத்தகத்தை குறிப்பிட்டதோடு, "அந்தப் புத்தகத்தை ஒரு பயணத்தின்போது படித்து முடித்தேன். அதன் தாக்கத்தால் அன்று இரவு முழுவதும் தன்னால் தூங்க முடியவில்லை", என குறிப்பிட்டுள்ளார்.

"விமானத்தில் போகாமல் பம்பாய்க்கு காரில் மூன்று நாள் பயணம் செய்தது ஏன் ?" என வினவியபோது "பத்து புத்தகங்கள் படிக்க வேண்டியிருந்தது," என பதிலளித்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

"எங்கே தங்க விரும்புகிறீர்கள் ?" என்று இலண்டன் தோழர்கள் கேட்டபோது, "எது நூலகத்திற்கு அருகில் உள்ளது," என கேட்டார் பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள்.

தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது, அழுது புலம்பாமல், மன்னிப்புக் கடிதம் எழுதி உயிர்ப்

பிச்சை கேட்காமல் தான் தூக்கிலிடுவதற்கு முன்பு வரை புத்தகத்தை படித்துக் கொண்டு இருந்தவர், மாவீரன் பகத்சிங் அவர்கள்.

தான் சிறையில் இருந்தபொழுது, "தமக்கு வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம், சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் தனக்கு அனுமதிக்க வேண்டும்'' எனக் கேட்டவர் நெல்சன் மண்டேலா அவர்கள்.

"தமிழ் இலக்கியங்களை—நூல்களை—ஒரு மாணவன் நூறு ஆண்டுகாலம் படித்தாலும், படித்து முடிக்க முடியாது. அந்த அளவிற்கு தமிழ் இலக்கியம் நம்மிடம் நிறைந்திருக்கிறது,'' என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

நமது புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தனது இல்லத்திலேயே நூலகம் வைத்திருந்தார். அதில் 1,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள் இடம் பெற்றிருந்தன. அதனால்தான் பல்வேறு மொழிகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் புலமைமிக்கவராக திகழ்ந்தார்கள். அதிகளவில் அவர் நூல்களை படித்ததன் காரணமாக, அவரால் சிந்தித்து உருவாக்கப்பட்டது தான் "தொலைநோக்குப் பார்வை 2023'' என்ற திட்டமாகும். இதன் மூலம் அவர் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் சென்றார் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும்.

மக்களிடையே படிக்கும் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் நூலகத் துறையில், மாண்புமிகு அம்மாவின் அரசின் சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ✶ தமிழ்நாடு அரசினால் தற்போது 4,634 நூலகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மக்களிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு நூலகர் தினம், நூலக தினம், தேசிய நூலக வார விழா, உலக புத்தக தினம் ஆகிய நிகழ்ச்சிகள் வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றன.
- ✶ மாநிலம் முழுவதும் உள்ள பொது நூலகங்களின் பயன்பாட்டிற்கு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ✶ மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2004ஆம் ஆண்டு கன்னிமாரா பொது நூலகத்தில் ஒரு நிரந்தர புத்தகக் கண்காட்சியை அமைத்தார். அக்கண்காட்சி கடந்த 16 ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது.
- ✶ சிறந்த செயல்திறனைக் கொண்ட நூலகர்களை கௌரவிக்க ஆண்டுதோறும், எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது, நூலகங்கள் சிறப்பாக பராமரிக்கப்படுவதை ஊக்குவிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, நூலகங்களுக்கு கேடயம் வழங்குதல், நூலக ஆர்வலர் விருது ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.
- ✶ மதுரை உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதி உதவியுடன் 5 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் நூல்கள் அடங்கிய ஒரு மாபெரும் நூலகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ✶ ஒரு இலட்சம் அரிய வகை உலகத் தமிழ் நூல்கள் சேகரிக்கப்பட்டு, இலங்கையில் உள்ள தமிழர்கள் பயன்பெறும் வகையில் யாழ்ப்பாணம் நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.
- ✶ போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு தேவையான புத்தகங்கள், பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த உலக அளவிலான பத்திரிகைகள், இதழ்களை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகளுடன் அனைத்து மாவட்ட மைய நூலகங்களும், திறன்மிகு நூலகங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன.
- ✶ நூலக இயக்ககத்தின் மேம்பட்ட செயல்பாட்டிற்காக இந்த ஆண்டு 125 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு நூலகத் துறையில் செயல்படுத்தி வருகிறது.

திறன்பேசிகளில் மின்னூலாக வாசித்தல், ஒலிப் புத்தகம், காணொலி வழிக் கற்றல் என்ற நிலையை நாம் எட்டியிருந்தாலும், வீட்டுக்கொரு நூலகம் அமைக்க வேண்டும் என்ற சிந்தனை நம் மனதில் உருவாக

மனிதன் மிகச்சிறந்த வாய்ப்புகளை பெற வேண்டுமெனில், அவனது தனிமனித கோட்பாடுகள் கண்ணியமானவையாக உருவாக வேண்டுமெனில், புத்தக வாசிப்பை அனுதின சுவாசிப்பாக மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

வேண்டும். மனிதன் மிகச்சிறந்த வாய்ப்புகளை பெற வேண்டுமெனில், அவனது தனிமனித கோட்பாடுகள் கண்ணியமானவையாக உருவாக வேண்டுமெனில், புத்தக வாசிப்பை அனுதின சுவாசிப்பாக மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை."

அதாவது தம்மை விட, எல்லாவற்றிலும் சிறந்த பெரியவர்களை துணையாய் கொண்டு அவர் வழி நடப்பது, வலிமை அனைத்திலும் பெரிய வலிமை ஆகும் என்றார் வள்ளுவர் பெருந்தகை. அதுபோல், புத்தகங்களின் துணை கொண்டு, அதில் கூறியுள்ள நெறிகளின் வழிநடப்பதே மக்களுக்கு, குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கு சிறந்த வலிமையையும், எதிர்காலத்தையும் தரும்.

நாட்டிலுள்ள நூலகங்கள் மற்றும் அடிக்கடி நடைபெறும் புத்தக காட்சிகளுக்குச் சென்று புத்தகத் துறையில் ஏற்பட்டுள்ள பரிணாம வளர்ச்சியை அறிந்து கொண்டும், அன்றாடம் வெளியாகும் புத்தகங்களை வாங்கிப் படித்தும் தங்களது திறமையையும், அறிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மக்களை, குறிப்பாக இளைய சமுதாயத்தினரை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் தனிநபர் மட்டுமல்லாமல், நாட்டின் சிந்தனை திறனும் உயர்வு பெறும்.

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் நடத்தும் புத்தகக் காட்சிக்கு ஆண்டுதோறும் மக்களின் வருகை உயர்ந்து வருவது, மக்களிடையே புத்தகம் வாசிக்கும் பழக்கம் அதிகரித்திருப்பதையே காட்டுகிறது. இந்த வருடம் நடைபெறும் 43ஆவது புத்தக காட்சியிலும் மக்கள் வருகை அதிகரித்து, இந்தப் புத்தகக் காட்சி நன்முறையில் நடைபெற்று, வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விழாவில் அறிஞர் பெருமக்களை சிறப்பிக்கும் வகையில், அவர்கள் ஆற்றிய பணிகளுக்காக இன்று விருதுகள் வழங்கி சிறப்பித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். விருதாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 43ஆவது புத்தகக் காட்சியை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்திரை நான் பாராட்டி, அதே வேளையில் உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் மற்றும் இனிய பொங்கல் வாழ்த்துக்களையும் கூறுகிறேன். அதேபோல, இங்கே பேசுகின்ற இந்த நிகழ்ச்சியினுடைய செயலாளர் திரு.எஸ்.கே.முருகன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்தப் புத்தகக் கண்காட்சி சீரும், சிறப்போடும் இருப்பதற்கு அரசினுடைய நிதி தேவை என்று சொன்னார். அடுத்த ஆண்டிலிருந்து இந்த புத்தகக் கண்காட்சிக்கு அரசு சார்பாக 75 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்து, இந்தப் புத்தகங்கள் மூலமாக அறிவுபூர்வமான நிலையை உருவாக்க அற்புதமான களஞ்சியமாக திகழ்கின்ற இந்தப் புத்தகத் திருவிழாவில் நான் கலந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

உடல் வலிமையையும், ஆரோக்கியத்தையும் கொண்டு நேர்த்தியான வாழ்க்கை வாழ்வதற்கு விளையாட்டு அவசியம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 04.01.2020 அன்று சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மெரினா கிரிக்கெட் மைதானத்தில், தமிழ்நாடு அகில இந்திய குடிமைப்பணி மற்றும் மத்தியப் பணி அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டியினை துவக்கி வைத்து ஆற்றிய உரை.

இந்த காலைப் பொழுதில் சிறப்பான நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார் அவர்களே,

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., அவர்களே,

காவல்துறை தலைமை இயக்குநர் மரியாதைக்குரிய திரு.திரிபாதி இ.கா.ப., அவர்களே,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., அவர்களே,

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர் திரு.ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., அவர்களே,

மற்றும் நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் எம்.பி.அவர்களே, ஐ.ஏ.எஸ்., மற்றும் ஐ.பி.எஸ்., அந்தஸ்து உள்ள உயர் அதிகாரிகளே, மாணவ, மாணவிகளே,

இந்த நிகழ்ச்சியை கண்டு களிப்பதற்கு வருகை தந்து, அவர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்கும் வகையில், விழாவிலே பங்கு பெற்றிருக்கின்ற அனைவருக்கும், ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும், இரண்டு அணிகளுக்கு முதன்மை வகிக்கின்ற கேப்டன்களுக்கும், இந்த விளையாட்டிலே கலந்து கொண்டிருக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கும், என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டு என்பது உடல் ஆரோக்கியத்தையும், ஒரு கட்டுக்கோப்பான உடலையும் வளர்த்துக் கொள்வதற்கு மிக முக்கியம். அதுவும், உயர் அதிகாரிகளுக்கு பல்வேறு பணிச் சுமைகள் இருக்கிறது. அந்த பணிச்சுமைகள் எல்லாம் குறைய வேண்டுமென்று சொன்னால், விளையாட்டிலே நீங்கள் ஆர்வம் கொண்டு விளையாடுகின்றபொழுது, மனதில் இருக்கின்ற அழுத்தம் குறையும், மகிழ்ச்சி கூடும், உங்களது பணி சிறக்கும். எனவே, அதற்கு மிகமிக முக்கியம் விளையாட்டு. மாணவ, மாணவிகள்தான் விளையாட வேண்டும் என்பது கிடையாது. அது எந்த வயதானாலும் விளையாடலாம். விளையாடுவதற்கு உடல் ஆரோக்கியமும், உடல் வலிமையும் வேண்டும். ஆகவே, அந்த உடல் வலிமையையும், ஆரோக்கியத்தையும், கட்டுக்கோப்பான உடலையும் கொண்டு நேர்த்தியான ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு அவசியம் விளையாட்டு. அந்த விளையாட்டை இங்கே இருக்கின்ற உயர்அதிகாரிகள் மூலமாக இன்றைக்கு துவக்கியிருக்கின்றீர்கள். உங்கள் மூலமாக, நாட்டில் இருக்கின்ற இளைஞர்களும், பொதுமக்களும் பார்த்து, தாங்களும் விளையாடி உடல் ஆரோக்கியத்தை பேண வேண்டும், மன அழுத்தத்தை குறைக்க வேண்டும், மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்து, அகில இந்திய குடிமைப்பணி மற்றும் மத்திய பணி அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டியை துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி, வணக்கம்.

உயர் அதிகாரிகளுக்கு பல்வேறு பணிச் சுமைகள் இருக்கிறது. அந்த பணிச்சுமைகள் எல்லாம் குறைய வேண்டுமென்று சொன்னால், விளையாட்டிலே நீங்கள் ஆர்வம் கொண்டு விளையாடுகின்றபொழுது, மனதில் இருக்கின்ற அழுத்தம் குறையும், மகிழ்ச்சி கூடும், உங்களது பணி சிறக்கும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இந்த இனிய நாளில், உலகில் அன்பும், அமைதியும், சகோதரத்துவமும் தழைத்தோங்கிட வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
“கிறிஸ்துமஸ்” திருநாள் வாழ்த்துச் செய்தி
24.12.2019

அன்பின் திருவுருவாம், கருணையின் வடிவமாம் இயேசுபிரான் அவதரித்த தினமான கிறிஸ்துமஸ் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் கிறிஸ்துவப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இனிய கிறிஸ்துமஸ் தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இயேசுபிரான் பிறந்த இத்திருநாளில், கிறிஸ்துவப் பெருமக்கள் தங்கள் இல்லங்களின் வாசலில் வண்ண நட்சத்திரங்களைக் கட்டி, கிறிஸ்துமஸ் மரம் மற்றும் இயேசுவின் பிறப்பை சித்தரிக்கும் குடில் அமைத்து, வண்ண மின் விளக்குகளால் அலங்கரித்து, புத்தாடை உடுத்தி, தேவாலயங்களில் நடைபெறும் சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டு, கர்த்தரை வழிபட்டு, உற்றார், உறவினர்களுடன் விருந்துண்டு, மகிழ்ச்சியுடன் கிறிஸ்துமஸ் திருநாளை கொண்டாடி மகிழ்வார்கள்.

“வழி தவறிய ஆட்டை தேடிச் சென்று மீட்கும் மேய்ப்பன் போன்று, பாவம் எனும் முள்ளிடையே நிற்கும் மனிதர்களையும் தேடிச் சென்று மீட்பது என்னுடைய பணி” என்றுரைத்த இயேசுபிரான் அவதரித்த இத்திருநாளில், அத்திருமகனார் போதித்த, அன்பு வழியை மக்கள் அனைவரும் பின்பற்றி, வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் வாழ்ந்திட இந்த இனிய நாளில் உறுதியேற்போம்.

அன்பால் உலகை ஆட்கொண்ட இயேசுபிரான் பிறந்த இந்த இனிய நாளில், உலகில் அன்பும், அமைதியும், சகோதரத்துவமும் தழைத்தோங்கிட வேண்டும் என்று வாழ்த்தி, கிறிஸ்துவப் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது உளமார்ந்த கிறிஸ்துமஸ் தின நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.



இந்த அரசு, சிறுபான்மை மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாப்பதில் தொடர்ந்து உறுதியாக இருக்கிறது!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 22.12.2019

சிறுபான்மை மக்களின் அரணாக திகழ்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் வகுத்துத் தந்த பாதையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த அரசு, சிறுபான்மை மக்களை பாதுகாக்கும் பேரரணாக விளங்கி வருகிறது. இந்த பேரியக்கத்தின் தலைவர்கள் வகுத்துத் தந்த பாதையில் ஆட்சி செய்யும் இந்த அரசு, எக்காலத்திலும் சிறுபான்மை மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாப்பதில் தொடர்ந்து உறுதியாக இருக்கிறது.

நான் முன்னரே தெரிவித்தபடி, குடியுரிமை (திருத்த) சட்டத்தினால் இந்திய மக்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்றபோதிலும், சிலர் தொடர்ச்சியாக இஸ்லாமிய சகோதரர்களிடையே அவர்களது குடியுரிமை பாதிக்கப்படும் என்று வதந்திகளை தொடர்ந்து பரப்பி வருகின்றனர். இது முற்றிலும் தவறானதாகும். இந்த பொய்யான வதந்திகளை நம்பவேண்டாம் என்று நான் தமிழ்நாட்டு மக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குடியுரிமை (திருத்த) மசோதாவின்மீது நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போதும், அ.இ.அ.தி.மு.க.வை சேர்ந்த உறுப்பினர்கள், இந்தியாவில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு “இரட்டைக் குடியுரிமை” வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கோரிக்கையை வலியுறுத்தி, எடுத்துரைத்துள்ளனர். நான் அண்மையில் புதுதில்லிக்கு சென்றபோதும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடமும், மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களிடமும் நேரில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினேன். இந்த நிலைப்பாட்டில் நாங்கள் எப்போதும் உறுதியாக இருக்கிறோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, சிறுபான்மையினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு தமிழ்நாட்டு மக்களின் நலனிலும், முன்னேற்றத்திலும், பாதுகாப்பிலும் அக்கறையோடு தொடர்ந்து செயல்பட்டு வருவதால், பொதுமக்கள் தவறான பிரச்சாரங்களுக்கு செவி சாய்க்காமல், அமைதி காக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைதிப் பூங்காவாகத் திகழும் நமது மாநிலத்தில், பொதுமக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தி, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் யாரும் வதந்திகளைப் பரப்பவேண்டாம் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

“மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, சிறுபான்மையினர் உள்ளிட்ட அனைத்துத்தரப்பு தமிழ்நாட்டு மக்களின் நலனிலும், முன்னேற்றத்திலும், பாதுகாப்பிலும் அக்கறையோடு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

படமும்/செய்தியும்

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆலோசனைக் கூட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில், 13.01.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மத்திய அரசின் அர்ஜுனா விருது பெற்றவருக்கு ரூ.25 இலட்சம் ஊக்கத்தொகை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.12.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தேசிய மற்றும் சர்வதேச அளவில் உடற்கட்டு போட்டிகளில் பதக்கங்களை வென்று 2019ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் அர்ஜுனா விருது பெற்ற திரு. சோ. பாஸ்கரன் அவர்களுக்கு சிறப்பினமாக உயரிய ஊக்கத் தொகையான 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

படமும் / செய்தியும்

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் கட்டடங்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.01.2020 அன்று தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் அரியலூர் மாவட்டம், அரியலூரில் கட்டப்பட்டுள்ள மாவட்ட காவல் அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், புதிதாக கட்டப்பட்டுள்ள 50 காவலர் குடியிருப்புகள், 7 காவல் நிலையங்கள், 5 காவல்துறை இதர கட்டடங்கள், 3 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 55 குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

ஜனவரி 23 : நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள்

இந்திய இராணுவப்படையை உருவாக்கிய தலைவர்

சுபாஷ் சந்திர போஸ் கட்டாக்கில் 1897ஆம் ஆண்டு ஜனவரி–23இல் பிறந்தார். அவரது தாயார் பிரபாவதி. மன்னர் சுபாஷ் சிறுவனாயிருந்த போதே புரட்சிகரமான எண்ணங்களைக் கொண்டிருந்தார். 1915இல் பள்ளி இறுதி நிலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தார். கல்கத்தாவிலுள்ள பிரசிடென்சி கல்லூரியில் உயர்கல்வி கற்றார்.

1920இல் இங்கிலாந்து சென்று ஐ.சி.எஸ் தேர்வு எழுதுவதற்காகப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அந்தத் தேர்வில் நான்காவது இடத்தில் சிறப்புறத் தேறினார். 1921இல் சுபாஷ் இந்தியா திரும்பினார். அப்பொழுது காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கப் போரட்டங்கள் நாட்டில் தீவிரமடைந்திருந்தன. அவருக்கு காந்திஜியின் அறப் போராட்டங்களில் நம்பிக்கை இல்லை. அந்த நாட்களில் வங்காளத்தில் புரட்சிப் போராட்டத் தலைவராக சி.ஆர்.தாஸ் என்பவர் பிரபலமானவர்.

அரசியல் கட்சியான ஸ்வராஜ் கட்சியின் உறுப்பினராகவும் சுபாஷ் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரிட்டிஷ் காவல் அதிகாரிகள் சுபாஷின் மீது எப்போதும் ஒரு கண் வைத்திருந்தனர். போராட்டக் காலத்தில் அதிரடியாகப் பணியாற்றி ஆங்கிலேயரை நெஞ்சை நிமிர்த்தி எதிர்த்ததற்காகக் கைது செய்யப்பட்டார். 1924 அக்டோபர் 24இல் சிறப்புச் சட்ட மேலாணையின் கீழ், கைது செய்யப்பட்டு மாண்டலே சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆயுதப் புரட்சி செய்து ஆங்கிலேயரை வெளியேற்றும் காலத்தை அவர் திட்டமிட்டு, வீர்சாவர்க்கரிடம் பேச்சுவார்த்தை நடத்தி, ரகசியமாக இராணுவப்படை ஒன்றை உருவாக்கினார். இதனை அறிந்த கொண்ட பிரிட்டிஷ் அரசு அவரைக் கைது செய்து கடுங்காவலில் வைத்தனர். ஒரு முஸ்லீம் சாதுவைப் போல் வேடமணிந்து சிறைக் காவலரை ஏமாற்றி விட்டு வெளியேறித் தப்பித்து இறுதியாக ஜெர்மனி போய்ச் சேர்ந்தார். அங்கு ஆங்கிலேயருக்கு எதிராகப் போர்க்களத்திலிருந்த ஜெர்மனியின் தலைவர் ஹிட்லரிடம் சென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவருடைய இலட்சியத்திற்குத் தாம் உதவுவதாக ஹிட்லர் வாக்களித்தார். அதனைத் தொடர்ந்து சுபாஷ் ‘சுதந்திர இந்தியப் படை’ என்ற இராணுவ அமைப்பை உருவாக்கினார்.

1943, ஜுலை 2இல் இராணுவத்தினருக்கு முன்பாகச் சிறந்ததோர் வீர எழுச்சி உரையாற்றினார். நாமெல்லாரும் **ஒன்று சேர்ந்து நம் தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருப்போம்.** அதனையே நமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு அதில் வெற்றியும் காண்போம். இரத்தம் சிந்தி யுத்தம் செய்து நம் தாய் மண்ணை மீட்டெடுப்போம்” என்று ஆவேச உரையாற்றினார் சுபாஷ் சந்திர போஸ். அவரது வீரமும் தியாகமும், சேவையும் இந்திய வரலாற்றில் ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்துள்ளன.

நன்றி : நாட்டிற்கு பெருமை சேர்த்த நாற்பது ரத்தினங்கள் எனும் நூலிலிருந்து

புதிதாக உதயமான மாவட்டங்கள் உள்பட 10 மாவட்டங்களில், 11ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கு இலவச மிதிவண்டிகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.12.2019 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், 2019–2020ஆம் கல்வியாண்டிற்கான விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தை மாணாக்கர்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 23.12.2019 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 10 மாவட்டங்களின் 11ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 2019–2020ஆம் கல்வி ஆண்டிற்கு முதற்கட்டமாக விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக 9 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

தமிழ்நாட்டில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில், மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவியர் அனைவருக்கும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2001–2002ஆம் கல்வியாண்டில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. பின்பு, 2005–2006ஆம் ஆண்டு முதல், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் அனைத்து பிரிவு மாணவ, மாணவியருக்கும் இத்திட்டத்தின் கீழ் மிதிவண்டிகள் வழங்கப்பட்டு மாணவ, மாணவியர் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, 11ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை சீரிய முறையில் தொடர்ந்து செயல்படுத்திடும் விதமாக, சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 10 மாவட்டங்களின் 11ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 2019–2020ஆம் கல்வியாண்டிற்கு முதற்கட்டமாக விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 9 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

பள்ளிக்கல்வித் துறை சார்பில், ரூ.95.94 கோடி மதிப்பீட்டில், சைனிக் இளநிலை மாணவர்கள் விடுதிக் கட்டடம் மற்றும் 42 பள்ளி கட்டடங்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் திறந்து வைத்தார்கள் – 06.01.2020

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 06.01.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் 9 கோடியே 87 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்பட்டுள்ள சைனிக் இளநிலை மாணவர்கள் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 86 கோடியே 7 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 42 பள்ளிக் கட்டடங்கள், 3 ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனக் கட்டடங்கள் மற்றும் ஒரு ஆசிரியர் இல்லக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழகத்திலுள்ள அனைத்து மாணவ, மாணவியரும் கல்வியில் சிறந்து விளங்கிடவும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்திடவும், கட்டணமில்லா கல்வி, விலையில்லா பேருந்து பயண அட்டைகள், மிதிவண்டிகள், சீருடைகள், பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள், கல்வி உபகரணப் பொருட்கள், காலணிகள், இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகை வழங்குதல், பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் அமைந்துள்ள சைனிக் பள்ளி வளாகத்தில் 52,924 சதுர அடி பரப்பளவில் 9 கோடியே 87 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 288 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ள சைனிக் இளநிலை மாணவர்கள் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ் தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், பெரம்பலூர், இராமநாதபுரம், நீலகிரி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி,

திருப்பூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 31 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 60 கோடியே 66 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர்;

ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ், கடலூர், திண்டுக்கல், மதுரை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், திருவள்ளூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 11 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 15 கோடியே 20 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள்;

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கீழ், திருவாரூர் மாவட்டம் – கொரடாச்சேரி, பெரம்பலூர் மாவட்டம் – வேப்பூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – பிரம்மதேசம் ஆகிய இடங்களில் ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனத்திற்கு 7 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – கவுண்டம்பாளையத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆசிரியர் இல்லக் கட்டடம்;

என மொத்தம் 95 கோடியே 94 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சைனிக் இளநிலை மாணவர்கள் விடுதிக் கட்டடம், 42 பள்ளிக் கட்டடங்கள், 3 ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனக் கட்டடங்கள் மற்றும் ஆசிரியர் இல்லக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் காலியாக உள்ள 18 நூலகர் மற்றும் தகவல் உதவியாளர் நிலை–II பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 43 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளையும், பொது நூலகத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான ஒரு பணியாளரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணையையும் வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 9 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 491 இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள் – 06.01.2020

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 06.01.2020 அன்று தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் உபரி பணியாளர்களாக பணிபுரிந்த பணியாளர்களுக்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் இளநிலை உதவியாளர் நிலையில் காலியாக உள்ள பணியிடத்திற்கு சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 491 பணியாளர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கிடும் அடையாளமாக, 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவின்படி, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1,000 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும், நெடுஞ்சாலை அருகாமையில் அமைந்துள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை அகற்றிட வேண்டுமென்ற உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி 3,321 கடைகள் மூடப்பட்டன. மூடப்பட்ட மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்து வந்த பணியாளர்கள், இயங்கி வரும் பிற மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் உபரி பணியாளர்களாக பணிபுரிந்து வந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூட்டத்தில், உபரியாக பணிபுரிந்து வரும் கடைப் பணியாளர்களை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்களில் சிறப்புத் தேர்வு நடத்தியும், பிற துறைகளில் காலியாகவுள்ள பணியிடங்களிலும் நியமனம் செய்ய வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் காலியாகவுள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்து வரும் மேற்பார்வையாளர், விற்பனையாளர் மற்றும் உதவி விற்பனையாளர்களைக் கொண்டு சிறப்புத் தேர்வு நடத்தி இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்திட 18.08.2019 அன்று சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய மண்டல மையங்களில் சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டு 491 இளநிலை உதவியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 491 பணியாளர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மக்களின் கோரிக்கையை ஏற்று காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பிரித்து புதிதாக செங்கல்பட்டு மாவட்டம் தொடங்கப்பட்டுள்ளது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 29.11.2019 அன்று செங்கல்பட்டில் நடைபெற்ற விழாவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்தினைத் தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்ட எல்லையிலிருந்து விழா நடைபெறும் இடம் வரை, ஏறக்குறைய 7 கிலோ மீட்டர் தூரமும் மக்கள் வெள்ளமாகக் குழுமி வரவேற்றக் காட்சியைக் கண்டபோது, மக்கள் ஆரவாரத்தோடு, எழுச்சியோடு இருப்பதைப் பார்க்கின்றபொழுது, இந்த மாவட்டத்தைப் பிரிப்பதற்கு எந்தளவிற்கு வரவேற்பு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

செங்கல்பட்டுப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து பிரித்து **தமிழ்நாட்டின் 37ஆவது மாவட்டமாக உதயமாகும் செங்கல்பட்டு** மாவட்டத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசின் நலத் திட்டங்களை செவ்வனே செயல்படுத்துவதிலும், சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கை சீற்றங்கள் ஏற்படும்போது மக்களை நாடிச் சென்று உதவிக்கரம் நீட்டுவதிலும், மாண்புமிகு அம்மா அவர்களைப் போலவே, மாண்புமிகு அம்மாவின் அரசும் தமிழ்நாட்டு மக்களுக்காகவே பணியாற்றி வருகின்றது.

“மக்களுக்கு சேவைகள் விரைந்து கிடைத்திட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், புதிய மாவட்டங்களை உருவாக்குதல், புதிய கோட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது’’ என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் பெரிய மாவட்டங்களைப் பிரித்து, புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது. அதன்

அடிப்படையில், சட்டமன்ற விதி 110ன் கீழ் 18.07.2019 அன்று என்னால் அறிவிக்கப்பட்டு, புதிய செங்கல்பட்டு மாவட்டம் தொடங்கப்படுகிறது என்பதை இங்கே பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் நாட்டின் சுதந்திரத்திற்கு முன்பு, செங்கல்பட்டு நகரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட்டன. நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, செங்கல்பட்டு மாவட்டத்தின் நிருவாகப் பிரிவு தலைமையகம் மட்டும் சைதாப்பேட்டையில் உள்ள பனகல் மாளிகையில் செயல்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆன பிறகு, 1968ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமையிடத்தை காஞ்சிபுரத்திற்கு மாற்றினார். பின்னர் செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் என இரண்டாக பிரிக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்து, விரிந்த மாவட்டமாக இருப்பதால், செய்யூர், மதுராந்தகம், திருப்போரூர், பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் தேவைகளை விரைந்து பூர்த்தி செய்து கொள்ள செங்கல்பட்டை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என பல ஆண்டுகளாக இந்த மாவட்ட மக்கள் கோரிக்கை வைத்து வந்தனர்.

"மக்களை நாடி அரசு" என்ற புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கைக்கு வடிவம் கொடுக்கும் வகையில், ஒவ்வொரு பகுதியின் மீதும் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், அரசின் நலத் திட்ட உதவிகள் விரைவில் மக்களை சென்றடைய வேண்டும் என்றும், மாண்புமிகு அம்மாவின் அரசு, காஞ்சிபுரம் மாவட்டத்தை பிரித்து புதிதாக செங்கல்பட்டு மாவட்டத்தை மக்களின் கோரிக்கையை ஏற்று இன்றைக்கு தொடங்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகின்றேன்.

புதிய செங்கல்பட்டு மாவட்டத்தின் சிறப்பு அம்சங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகராக செங்கல்பட்டு நகரம் விளங்கும். இம்மாவட்டம் 2,945 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டுள்ளது. இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 25 இலட்சத்து 56 ஆயிரத்து 244 ஆகும்.

இம்மாவட்டத்தில் செங்கல்பட்டு, மதுராந்தகம், தாம்பரம் ஆகிய மூன்று வருவாய் கோட்டங்களும், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், செங்கல்பட்டு, செய்யூர், திருப்போரூர், தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் ஆகிய 8 வட்டங்களும், 40 உள் வட்டங்களும், 636 வருவாய் கிராமங்களும் உள்ளடங்கியுள்ளன. மதுராந்தகம், செங்கல்பட்டு, மறைமலை நகர், பல்லாவரம், தாம்பரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய 8 நகராட்சிகளும், அச்சரப்பாக்கம், லத்தூர் உட்பட 8 ஊராட்சி ஒன்றியங்களும், மாமல்லபுரம், சிட்லப்பாக்கம் உட்பட 12 பேரூராட்சிகளும், 359 கிராம ஊராட்சிகளும் உள்ளடங்கியுள்ளன.

இங்குள்ள நீர்நிலைகளில் **செங்கழுநீர் மலர் பூத்துக் குலுங்கியதால் செங்கழுநீர்பட்டு என்று முதலில் அழைக்கப்பட்டு, பின்னர் அதுவே செங்கல்பட்டு** என்று மருவியது என்று கூறுவர். செங்கல்பட்டு, பல்லவர் காலத்தில் உருவான பழமையான நகரமாகும். இங்கு மூன்று பக்கம் மலைகளும், ஒரு பக்கம் கொளவாய் ஏரியும் உள்ளது. இம்மாவட்டத்தில் ஏரிகள் அதிகமாக உள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் ஏரி தமிழ்நாட்டிலுள்ள பெரிய ஏரிகளில் ஒன்றாக விளங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் வேளாண்மைக்கு இணையாக அதிக அளவில் தொழிற்சாலைகளும், கல்வி நிறுவனங்களும் இடம் பெற்றுள்ளன. கல்பாக்கம் அணுமின் நிலையம் இம்மாவட்டத்தில்தான் உள்ளது.

பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட மாமல்லபுர கற்கோயில்கள், தமிழர்களின் கலை நுணுக்கத்தை பறைசாற்றும்படியாக அமைந்துள்ளன. பல்லவர் காலத்துக்குப் பிறகு, விஜயநகர அரசர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஒரு திருமால் கோயிலும் மாமல்லபுரத்தில் உள்ளது. கோவர்த்தன சிற்பத் தொகுதியின் மீது அமைக்கப்பட்ட கிருஷ்ண மண்டபம், அர்ச்சுனன் தபசு, கடற்கரைக் கோயில், ஐந்து ரதக் கோயில்கள் மற்றும் சிற்பங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க படைப்புகளாகும். ஒரு முறை நரசிம்மவர்மன் என்ற மாமல்லர் தனது தந்தையுடன் உலா சென்றபோது ஒரு பாறையின் மீது யானையின் படம் வரைந்தார். அதைப் பார்த்த பிறகு தான் அவர் தந்தைக்குப் பாறைகளில் அழியாக் கோயில்கள் கட்ட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதனால் அவர் பெயரையே அந்த நகருக்கு இட்டார். மாமல்லபுர நினைவுச் சின்னங்களை உலகப் பண்பாட்டுச் சின்னம் என்று 1984இல் யுனெஸ்கோ

அறிவித்தது. மகாபலிபுரத்தில் மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களும், அப்போதைய சீன பிரதமரும் 1956ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6ஆம் நாளில் வருகை புரிந்துள்ளனர். ஏறக்குறைய 63 வருடங்களுக்குப் பிறகு 11.10.2019 மற்றும் 12.10.2019 ஆகிய தினங்களில் மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபர் ஆகியோரிடையே வரலாற்று சிறப்புமிக்க சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கான அனைத்து பாதுகாப்பு மற்றும் வரவேற்பு போன்ற ஏற்பாடுகள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன. ஆகவே, உலகத் தலைவர்கள் சந்தித்த பகுதி தமிழ்நாட்டில் உள்ள மாமல்லபுரம் என்னும் மாபெரும் பெருமையை நாம் பெற்றுள்ளோம்.

மன அமைதி தரும் ஸ்ரீ அகோர வீரபத்திரர் கோயில் இருக்கும் ஹனுமந்தபுரம், நலம் யாவும் தரும் ஸ்ரீநந்தீஸ்வரர் இருக்கும் நந்திவரம், நரசிம்மர் கோயில் இருக்கும் சிங்கப்பெருமாள் கோயில், நித்ய கல்யாண பெருமாள் வீற்றிருக்கும் திருவிடந்தை, குளத்திலிருந்து சங்கு வெளிப்படும் திருக்கழுக்குன்றம், ஹயக்கிரீவர் கோயில் இருக்கும் செட்டிபுண்ணியம், சிவன் கோயில் இருக்கும் அச்சரப்பாக்கம் ஆகிய திருக்கோயில்கள் இந்த மாவட்டத்தின் பெருமையை இன்றைக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், மதுராந்தகம் பகுதியில் அடை மழை பெய்து, மதுராந்தகம் ஏரி உடைந்து விடும் சூழ்நிலை வந்ததாகவும், அப்போது ஆங்கிலேய மாவட்ட ஆட்சித் தலைவர் ஏரியை பலப்படுத்தும் முயற்சி எடுக்க அப்பகுதிக்கு வந்தார் என்றும், அச்சமயம் அருள்மிகு கோதண்டராமரே அந்த ஏரியை பாதுகாத்து வருகின்றதை அவர் கண்டதாகவும் வரலாறு கூறுகிறது. **எனவே அக்கோயில் "ஏரி காத்த ராமர் கோயில்" என்று பெயர் பெற்றது.**

தென்திருவேங்கடம் என்று அழைக்கப்படும் திருமலை வையாவூர் இந்த மாவட்டத்தில் தான் உள்ளது. இங்கு உள்ள மலை மீது அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். முருகப்பெருமான் நிலம், ஆகாயம், கடல் ஆகிய மூன்று பகுதிகளில் நின்று அசுரனை போரிட்டு வெற்றி கண்டார். இவ்வகையில் அசுரர்களின் ஆணவத்தை விண்ணில் நின்று முருகப்பெருமான் அடக்கி, ஒடுக்கிய இடமே இம்மாவட்ட திருப்போரூரில் உள்ள திருத்தலம் ஆகும் என ஸ்தல வரலாறு கூறுகிறது.

இங்குள்ள வேடந்தாங்கலுக்கு கனடா, சைபீரியா, வங்காளதேசம், பர்மா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் பறவைகள் வருகின்றன. அக்டோபர் முதல் மார்ச் வரையிலான பருவத்தில் ஆயிரக்கணக்கான பறவைகள் இங்கு தங்கி இனப்பெருக்கம் செய்கிறது. எனவே, பறவைகள் சரணாலயத்திற்குப் புகழ்பெற்ற வேடந்தாங்கல், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது தமிழகத்திற்கு பெருமை சேர்க்கிறது. கோவளம் கடற்கரை, முட்டுக்காடு படகு குழாம், முதலியார்குப்பம் படகு குழாம், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா போன்ற சுற்றுலாத் தலங்களும் இம்மாவட்டத்தில் உள்ளன. இந்திய தலைநகருக்கு வெளியே, முதன்முறையாக இம்மாவட்டத்தில் உள்ள திருவிடந்தையில் 2018, ஏப்ரல் 11 முதல் 4 நாட்கள் "இராணுவக் கண்காட்சி-2018" சிறப்பான முறையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, இக்கண்காட்சிக்கான அனைத்து ஆயத்த ஏற்பாடுகளையும் மேற்கொண்டதற்காக மத்திய அரசின் பாராட்டுதலையும் பெற்றது.

இதுபோன்ற எண்ணற்ற சிறப்புகளைக் கொண்ட மாவட்டம் செங்கல்பட்டு மாவட்டமாகும். **இம்மாவட்டம், தென் மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாகத் திகழ்வதால், இதனை Gateway of Chennai என்றும் அழைக்கலாம்.**

செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரை 1,313 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 52 பாலப் பணிகள், 1,451 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் 1,409 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 215 கி.மீ. நீள சாலைகள், 10 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செங்கல்பட்டில் கொளவாய் ஏரியினை மீட்டெடுத்து செங்கல்பட்டு பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்தும் திட்டம், ரூ.90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். செங்கல்பட்டு பகுதிக்கு வெள்ளத் தடுப்புக்கென முதல் கட்டமாக, ரூ.104 கோடி சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, மணிமங்கலம் ஏரி உள்பட 5 ஏரிகளை ஆழப்படுத்தும் பணிகள் 6 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுள்ளன. கீழ்கட்டளை வடிகால்வாயினை ரூ.17 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தி வெள்ளத் தடுப்பு சுவர் அமைத்து கீழ்கட்டளை,

எஸ்.கொளத்தூர், பள்ளிக்கரணை போன்ற பகுதிகளில் வெள்ளம் சூழும் அபாயத்தை தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 2ஆவது கட்ட நிரந்தரப் பணிகள் ரூ.244 கோடி மதிப்பீட்டில் முழுவீச்சில் துவங்கப்பட உள்ளன.

அது போன்றே ரூ.14 கோடி மதிப்பீட்டில் தாம்பரம் பெரிய ஏரியின் கலங்களிலிருந்து மூடிய வெள்ள பெருவடிகாலும், ரூ.11.25 கோடி மதிப்பீட்டில் அடையாறு மற்றும் வரதராஜபுரம் தாங்கல் ஏரியினை இணைத்து புதிய ஆற்றுப் படுகை நீர்தேக்கம் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணியினால் 80 மில்லியன் கன அடி வெள்ள நீரினை சேகரிக்க இயலும். மேலும், வெள்ள அபாயம் நீங்கி, விவசாயிகளின் நலன் காக்கப்படுவதுடன், குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படும்.

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிரந்தரமாக வெள்ள அபாயத்தை தடுக்கும் வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் பொதுப்பணித்துறை மூலம் ரூ.282.79 கோடியில் 52 பணிகளும், நெடுஞ்சாலைத் துறை மூலம் ரூ.118.77 கோடி செலவில் 80 பணிகளும், ஊரக வளர்ச்சித் துறை மூலம் ரூ.13.41 கோடி செலவில் 121 பணிகளும், பேரூராட்சித்துறை மூலம் ரூ.13.88 கோடி செலவில் 55 பணிகளும், நகராட்சி நிருவாகத்துறை சார்பில் ரூ.2.25 கோடி செலவில் 6 பணிகளும் என மொத்தம் ரூ.431 கோடி செலவில் 314 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை பெருமையுடன் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடையாறு பகுதியில் ஒரத்தூர் கிளை ஆற்றில் வெள்ள அபாயத்தைக் குறைக்க ஏதுவாக சுமார் ரூ.60 கோடி செலவில் அடையாற்றின் கிளை ஆறான ஒரத்தூர் மடுவின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த நீர்தேக்கத்தை ஒரத்தூர் ஏரி–ஆரம்பாக்கம் ஏரி மற்றும் ஒரத்தூர் அணைக்கட்டுடன் இணைத்து, 1.35 டி.எம்.சி. கொள்ளளவுடன் நீர் தேக்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

செங்கல்பட்டில் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் "மெடிபார்க்" திட்டத்திற்கு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இன்னும் 6 மாதத்தில் இத்திட்டம் துவங்கப்படும். இந்தத் திட்டம் நிறைவேறும்பொழுது, அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்கித் தரும். மேலும், விபத்து மூலம் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில், ரூ.19.46 கோடி மதிப்பில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையமும், ரூ.3.43 கோடி மதிப்பிலான கேத்லேப் மையமும், ரூ.7 கோடி மதிப்பிலான எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி உட்பட மொத்தம் ரூ.39 கோடி மதிப்பிலான பல்வேறு பணிகள் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே போன்று, தாம்பரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைகளில் ரூ.8.83 கோடி செலவில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏறக்குறைய ரூ.92 கோடி மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்தில் இந்திய பாரம்பரிய மருத்துவ முறையான யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையம் ஒன்றினை அமைத்திட நான் சென்ற வாரம் அடிக்கல் நாட்டினேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்தத் தருணத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தொழில் வளம் நிறைந்த செங்கல்பட்டு மாவட்ட தொடக்க விழாவில், **மாண்புமிகு அம்மாவின் அரசு தொழில் துறையில் சாதித்த சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.**

2015ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினை தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கான தொழில் முதலீடுகள், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஈர்க்கப்பட்டன. இதில் 270 நிறுவனங்கள் பணிகளை துவக்கி, பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. கையெழுத்து இடப்பட்ட ஒப்பந்தங்களில் இது ஏறக்குறைய 90 சதவிகிதமாகும். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை சார்பில் கையொப்பம் இடப்பட்ட 3,573 தொழில் திட்டங்கள், பணிகளை துவக்கி பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. ஆனால், திரு.ஸ்டாலின் பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்துக் கொண்டிருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தவறான செய்தியை மக்களிடம் பரப்பி வருகிறது என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். உலக முதலீட்டாளர் மாநாடு என்று ஒரு மாநாட்டை நடத்தி, அதன் மூலம் கோடிக்கணக்கான முதலீடுகளை ஈர்த்துள்ளதாகக் கூறுகின்றீர்கள், எவ்வளவு முதலீடு தமிழகத்திற்கு வந்திருக்கிறது? போடப்பட்ட ஒப்பந்தங்களில் எவ்வளவு நடைமுறையில் உள்ளது? என்று கேட்கிறார். அதற்குத் தான் நான் விளக்கமளித்துள்ளேன்.

சமீபத்தில் நான், அமெரிக்கா, இங்கிலாந்து, துபாய் ஆகிய நாடுகளுக்கு அரசு முறை பயணமாக சென்றபோது, 8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 41 நிறுவனங்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, அதன்மூலம் 35,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன. இதில் 2 திட்டங்களை நான் ஏற்கெனவே துவக்கி வைத்துள்ளேன். **மேலும், 3 திட்டங்களை துவக்கி வைக்க உள்ளேன்.**

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளைப் பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாடு வாழ் தமிழ் மக்களை வரவேற்கவும், “யாதும் ஊரே” என்ற ஓர் புதிய திட்டத்தை கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் போது நான் அறிவித்திருந்தேன். அதன்படி தமிழ்நாடு அரசின் சார்பில், நானே நேரடியாகச் சென்று, உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைத்திட, ஒரு உறவுப்பாலம் அமைக்கும் இந்த உன்னத முயற்சியை, அமெரிக்காவில் நான் துவக்கி வைத்தேன்.

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மூலம் ஒற்றைச்சாளர அனுமதி, ஒற்றைச் சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து விரைவுபடுத்திட எனது தலைமையில் உயர்மட்டக் குழு, முதலமைச்சர் அலுவலகத்தில் முதலீட்டு எளிதாக்குதல் பிரிவு, மின்சார வாகனக் கொள்கை என தொழில் துறை மேம்பட பலத் திட்டங்களைத் தீட்டி சிறப்புற செயல்படுத்தி வருகிறோம் என்பதை இந்தத் தருணத்தில் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தொழில் முதலீடுகளை அதிகரிப்பதற்கு இதுவரை நான் 48 வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க சாதகமாக உள்ள மாவட்டங்கள், அம்சங்களை எடுத்துரைத்துள்ளேன். இவற்றுக்கெல்லாம் முக்கியமான காரணம், நமது மாநிலம் தொடர்ந்து மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருவது தான். இவ்வாறு மின்மிகை மாநிலமாக தமிழ்நாடு முன்னேறியது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு, இன்றைய தினம் அது நிறைவேற்றிக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இது போன்று பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு சார்பில், இந்த நிகழ்ச்சியில், பொதுப் பணித் துறையின் சார்பில் ரூ.47 கோடி மதிப்பிலான 3 பணிகள் உட்பட மொத்தம் ரூ.113.93 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 181 பணிகளை நான் திறந்து வைத்துள்ளேன்.

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ரூ.61.69 கோடி மதிப்பிலான 110 பணிகள் உட்பட மொத்தம் 128 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 213 பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். அதே போல, 8,624 பயனாளிகளுக்கு ரூ.67.79 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுக்கு நன்மை பயக்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் அதே வேளையில், அரசின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதையே தொழிலாகக் கொண்ட சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின்

குணாதிசயங்கள் எப்படிப்பட்டவை என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். உண்மையிலேயே, மக்கள் பணி ஆற்றுபவர்களுக்கு உரிய பலன் தானாகவே வந்து சேரும். இதைச் சொல்லும் போது, **கதை ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.**

ஒரு கோயில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தார்கள். அப்போது வானத்திலிருந்து ஒரு தங்கத் தட்டு கோயில் முற்றத்தில் விழுந்தது. "தகதக" என மின்னும் அந்த தங்கத் தட்டை கோயில் நிருவாகி ஒருவர் கையில் எடுத்தார். யாருக்கு அந்த தங்கத்தட்டு? கோயிலுக்கா, இல்லை பக்தர்களில் ஒருவருக்கா? என நிருவாகிக்கு ஒரு கேள்வி எழுந்தது.

கோயில் நிருவாகி அந்த தட்டில் ஒரு வாசகத்தை கண்டார். "அன்பில் சிறந்தவர் யாரோ, அவருக்கு ஆண்டவன் பரிசு" என்று எழுதப்பட்டிருந்தது. உடனே அந்த நிருவாகி, "நாளைக்கு பகலில் பக்தர்கள் வந்து தாங்கள் செய்த நற்செயல்களை விளக்கிச் சொல்லி, தட்டை பெற்றுக் கொள்ளலாம்", என்று அறிவித்தார். மறுநாள் ஏகப்பட்ட கூட்டம். ஒவ்வொருவரும் தங்களது நற்செயல்களை விவரித்தார்கள். ஒரு பணக்காரர் தன் சொத்தை ஏழைகளுக்கு வாரி வாரி வழங்குவதாகக் கூறினார். உடனே நிருவாகி, அந்த தட்டை அவரிடம் அளித்தார். "இவர் தானம் செய்தார் என்பதற்கு என்ன சாட்சி?" என்று கோயில் நிருவாகி நினைக்கும்போதே, அந்தப் பணக்காரரின் கையில் இருந்த தங்கத் தட்டு தகரமாக மாறி விட்டது. "ஓகோ! தகுதியில்லாதவர்கள் கைக்குப் போனால் தங்கத் தட்டு இப்படி தகரத் தட்டாக மாறிவிடும் போலும்!" என்று எல்லோரும் அங்கே பேசிக் கொண்டார்கள்.

அந்த ஊருக்கு பணக்காரர்கள் நிறைய பேர் வந்து தாங்கள் செய்த தான தர்மங்களை சொல்லி, தங்கத்தட்டை பெற முயன்றனர். ஆனால் தானம் செய்ததாக சொன்ன பல பணக்காரர்களின் கைகளுக்குப் போன தங்கத் தட்டு தகரத் தட்டாக மாறியது. சில நாட்கள் கழித்து, அக்கோயிலுக்கு எளிய மனிதர் ஒருவர் வந்தார். அவருக்கு இந்தத் தங்கத்தட்டு விவரம் எதுவுமே தெரியாது. கோயிலில் சாமி கும்பிட போன அவர், அங்கு அதிக அளவில் ஏழை எளிய மக்களைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். "இந்த நாட்டில் இவ்வளவு ஏழை மக்களா?" அந்த ஏழை மக்களில் கை, கால் இழந்தவர்கள், கண் பார்வை இழந்தவர்கள், வாய்பேச முடியாதவர்கள் இருப்பதைப் பார்த்து அவரது உள்ளம் உருகிற்று. அவர் ஆண்டவன் முன் இம்மக்களுக்கு விமோசனம் வேண்டி கோயிலுக்கு சென்றார். அப்பொழுது கூட்ட நெரிசலில் கோயில் நிருவாகி கையிலிருந்த தங்கத் தட்டை தவற விட்டார். அந்தத் தட்டு கோயிலின் உள்ளே வந்த நல்ல உள்ளம் கொண்ட அந்த எளிய மனிதரின் கையில் விழுந்தது. உடனே ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. தங்கத் தட்டு தகரத் தட்டாக மாறாமல் ஜொலித்தது. கோயில் நிருவாகிக்கு மட்டற்ற மகிழ்ச்சி! "ஐயா! நீங்கள் தான் உண்மையான அன்பின் வடிவம். இந்த தங்கத் தட்டுக்கு உரியவர் நீங்கள்தான்" என்று கூறினார்.

"மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்", "மக்களை நாடி அரசு" என்று மாண்புமிகு அம்மாவின் அரசு, ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மக்களுக்காக அன்புள்ளத்துடன் உருகிய அந்த எளியவருக்கு தங்கத் தட்டு கிடைத்தது போல, மக்களுக்காக பணியாற்றும் நமக்கு, மக்கள் தங்கள் பேராதரவின் மூலம் அளித்த இடைத்தேர்தல்கள் வெற்றியைப் போல, வருகின்ற அனைத்து தேர்தல்களிலும் வெற்றி எனும் தங்கத்தட்டை அளிப்பார்கள் என்பது உறுதி.

இன்றையதினம் ஸ்டாலின் அவர்கள், நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், "உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடைபெறும் என்று மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. அந்த அறிவிப்பில், முறையாக வார்டு வரையறுக்கவில்லை, முறையாக அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முறையாக வார்டு வரையறுக்கப்படவில்லை. முதலமைச்சர் திடீரென்று, நேரடித் தேர்தலை ரத்து செய்து விட்டு வார்டு வாரியாக தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். இதையெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, திட்டமிட்டு செயல்படுத்தி, தேர்தலை நிறுத்துவதாகத் தெரிகிறது" என்ற ஒரு பச்சைப் பொய்யைத் தெரிவித்திருக்கின்றார்.

1996ஆம் ஆண்டு வரை உள்ளாட்சித் தேர்தல், வார்டு வாரியாக நடைபெற்று, அதன் மூலமாகத் தான் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். 1996ஆம் ஆண்டு வரை மேயர் பதவிக்கு மறைமுகத் தேர்தல்தான் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது நேரடித் தேர்தலை அறிமுகம் செய்தார்கள். அதற்குப் பிறகு 2006ஆம் ஆண்டு நேரடியாக நடைபெற்ற தேர்தலை மறைமுகத் தேர்தலாக அறிவித்ததும் அப்போதைய உள்ளாட்சித் துறை அமைச்சர், தற்பொழுது

எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் தான். அவரே மறைமுகத் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகளைப் பற்றி விரிவாக, தெளிவாக சட்டமன்றத்தில் பதிலளித்திருக்கிறார். அப்பொழுது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு.ஸ்டாலின் அவர்கள் 31.08.2006 அன்று மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறைக்கு பதில், மறைமுகமாக தேர்ந்தெடுக்க சட்டமுன்வடிவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். 31.08.2006 அன்று திரு.ஸ்டாலின் கூறுகையில், அசாம், குஜராத் என்று பல மாநிலங்களைப் பட்டியலிட்டு அங்கெல்லாம் மறைமுகத் தேர்தல் மூலம் தான் தலைவரை தேர்ந்தெடுக்கின்றார்கள் என்று கூறி தீர்மானத்தை நிறைவேற்றக் கோரினார். மேலும், திரு.ஸ்டாலின் அவர்கள் 31.08.2006 அன்று தீர்மானத்தின் மீது பேசும்போது "மேயர் ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும், அதேபோல், மெஜாரிட்டியாக வரக்கூடிய உறுப்பினர்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்களாகவும் வந்துவிடுகின்ற காரணத்தினால் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை அவையிலே வைத்து, மன்றக் கூட்டத்திலே வைத்து, அதை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறது. அதனால் மக்களுடைய பிரச்சினைகள் தேக்கம் அடையாமல் இருப்பதற்கு இதைக் கொண்டு வருகிறோம். மேலும், உதாரணத்திற்கு விழுப்புரம், விருத்தாச்சலம் நகராட்சிகளில், 2001 தேர்தல் நடந்ததற்குப் பிறகு இதுவரையில் ஆகஸ்டு 2006 வரை அந்த இரண்டு நகராட்சிகளிலும் முறையாக கூட்டங்கள் நடைபெறவில்லை, முன்வைத்து நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானங்களும் அங்கே முழுமையாக நிறைவேற்றப்பட முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிலைகளையெல்லாம் கருத்திலே கொண்டு தான் இப்பொழுது இந்த முறையை நாங்கள் அமல்படுத்தியிருக்கின்றோம்'' என்று கூறி தீர்மானத்தை நிறைவேற்றித் தரக் கோரியிருந்தார். திரு.ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த பொழுது, வார்டு வாரியாகத் தேர்தல் நடத்துவது சிறப்பாக இருக்கும் என்று அவரே சட்டமன்றத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். எங்களைப் பொறுத்தவரை, வார்டு வாரியாகத் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றோம். இதிலே என்ன தவறு இருக்கின்றது. நீங்கள் தெரிவித்தால் சரி, நாங்கள் அறிவித்தால் அது தவறா? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் கவுன்சிலர்கள் தானே பேரூராட்சித் தலைவர்களையும், நகரமன்றத் தலைவர்களையும், மேயர்களையும் தேர்ந்தெடுக்கின்றார்கள். இதில் என்ன தவறு இருக்கின்றது? இதில் எந்தத் தவறும் கிடையாது. வேண்டுமென்றே, திட்டமிட்டு இந்தத் தேர்தலை தடை செய்வதற்காக, நிறுத்துவதற்காக திரு.ஸ்டாலின் அவர்கள் பொய்யான குற்றச்சாட்டை சொல்லி வருகின்றார். உண்மையிலே, இந்தத் தேர்தலைக் கண்டு அவர் அஞ்சுகிறார் என்று தான் நான் நினைக்கின்றேன். பல கூட்டங்களிலும், செல்லும் இடங்களிலும், கிராமங்களிலும், நகரங்களில் பல்வேறு பகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உள்ளாட்சித் தேர்தலை நடத்தவில்லை. எனவே, மக்களுக்கு முறையாக தண்ணீர் கிடைக்கவில்லை, கழிவுநீர் அகற்றப்படவில்லை, தெருவிளக்கு எரியவில்லை என்று குற்றச்சாட்டுக்களை சொல்லிக் கொண்டிருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தேர்தல் நடத்த அஞ்சுகிறது என்று வீர வசனம் பேசிக் கொண்டிருக்கிறார், திரு.ஸ்டாலின். உள்ளாட்சித் தேர்தலை நடத்த தில் இருக்கிறதா? திராணி இருக்கிறதா? தெம்பு இருக்கிறதா? என்று கேட்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, தில் இருக்கிறது, தெம்பு இருக்கிறது, திராணி இருக்கிறது, துணிவு இருக்கிறது என்று நாங்கள் தெரிவிக்கிறோம். மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலை அறிவித்தால் அதை எதிர்கொள்ளக்கூடிய வலிமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துகிறோம். நீங்கள் நொண்டிச்சாக்குச் சொல்லிக் கொண்டு நீதிமன்றத்தை நாடப் பார்க்கின்றீர்கள். இந்தத் தேர்தலை நிறுத்துவதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சிகள் எதுவும் பலிக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்பானது, மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருப்பது. ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அமைப்பு.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

உள்ளாட்சி அமைப்பானது, மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருப்பது. ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அமைப்பு. அந்த உள்ளாட்சித் தேர்தலை நிறுத்துவதற்குத் தான் இன்றையதினம் வழக்குத் தொடர நீதிமன்றம் சென்றிருக்கின்றார்கள். அதுகுறித்த சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக சார்பில் வழக்கறிஞர் அமீத் திவாரி என்பவர் உச்சநீதிமன்றத்தில் 28.11.2019 அன்று உள்ளாட்சித் தேர்தல் தேதி அறிவிப்பை நிறுத்த வேண்டுமென்று இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளார். இன்றையதினம், இதனை நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வுக்குச் சென்று, மனுக்கள் பட்டியலிட்டு முறையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முறையிட்டிருக்கிறார். ஆனால், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள், மனுக்கள் பட்டியலிட்டு முறையாக விசாரணைக்கு வரும்பொழுது, விசாரிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். இந்த வழக்கை உடனடியாக விசாரிக்க வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழக கோரிக்கையை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை. அந்த வழக்கு தள்ளிப் போடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இந்தத் தேர்தலை நிறுத்துவதற்கு அவர் குறிப்பிட்ட காரணம், முற்றிலும் தவறான, பொய்யான காரணம். இந்தத் தேர்தலை சந்திக்க திமுக தலைவர் அஞ்சுகிறார் என்று தான் நான் கருதுகிறேன். அதற்கான விளக்கத்தையும் நான் தருகின்றேன். இந்திய தேர்தல் ஆணையம் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் இனம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது. தமிழ்நாட்டில் 1996, 2001, 2006 மற்றும் 2011 ஆகிய வருடங்களில் நடத்தப்பட்ட உள்ளாட்சித் தேர்தல்கள் 1991ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் வரையறுக்கப்பட்ட வார்டுகளின் அடிப்படையிலே நடைபெற்றது. 2016ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்கு அனைத்து ஆயத்தப் பணிகளும் நடத்தப்பட்டு வந்த நிலையில், 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி வார்டு மறுவரையறை செய்த பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தவுடன், உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. மேல்முறையீடு செய்தது. இன்று வரை இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. மாநில தேர்தல் ஆணையம் செப்டம்பர் 2016இல் தேர்தல் அறிவிப்பு வெளியிட்டவுடன் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு முறையாக செய்யப்படவில்லை எனவும், அட்டவணையில் தேர்தல் நடத்த போதுமான கால அவகாசம் ஒதுக்கப்பட வேண்டும் எனவும் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஒரு வழக்கைத் தொடர்ந்தது.

1996, 2001, 2006 மற்றும் 2011 ஆகிய வருடங்களில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் கடைபிடிக்கப்பட்ட அதே அட்டவணையின் நடைமுறையின்படி 2016 உள்ளாட்சித் தேர்தல் அட்டவணையும் வெளியிடப்பட்டது என்ற வாதத்தை மாநிலத் தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் எடுத்து வைத்தபொழுதும் அந்தத் தேர்தலை நீதிமன்றம் ரத்து செய்தது. இதன் பின்னர், தமிழ்நாடு அரசு 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஊரகப் பகுதி மற்றும் நகர்ப் பகுதி வார்டுகளை மறுவரை செய்ய ஆணையத்தை அறிவுறுத்தியது. அந்த ஆணையம் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊரகப் பகுதி மற்றும் நகர்ப் பகுதி வார்டுகளை மறுவரை செய்து ஒவ்வொரு வார்டின் வரைவு அறிக்கையை வெளியிட்டு, பொதுமக்களின் கருத்தையும் கேட்டது. இப்பணி முடிவுற்றப் பிறகு தான் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியான வார்டு மறுவரையறை அரசிதழில் வெளியிடப்பட்டது. இதன் பின் தமிழ்நாடு அரசு, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான விகிதாச்சாரப்படி இடஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு அனைத்துப் பணிகளையும் முறையாக செய்த பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு வழக்குளைப் தொடுத்து, உள்ளாட்சித் தேர்தலை நடத்த விடாமல் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது. புதிதாக மாவட்டங்கள் தொடங்குவதற்கும் உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இதற்காக 2018ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் சந்தேகம்

ஏழை, எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம் என்பதற்காக, இந்த அரசு வலு பெற்றிருக்கிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இருந்திருந்தால், அப்பொழுதே திராவிட முன்னேற்றக் கழகம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கலாம். ஆனால், அப்பொழுது செல்லவில்லை. வார்டு வரையறுக்கப்பட்ட பிறகு பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டது. பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் வார்டு வரையறை செய்ததில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கலாம் என்ற அறிவிப்பை கொடுத்தன் விளைவாக, எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆட்சேப மனுக்களின் கோரிக்கையை பரிசீலித்து, முறையாக வார்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது என்பதை தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. இப்படி அனைத்தையும் முறையாக மாநிலத் தேர்தல் ஆணையம் செய்தும், தேர்தலைச் சந்திக்கத் தெம்பில்லாமல், திராணியில்லாமல், துணிவில்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார். மாநிலத் தேர்தல் ஆணையம் கேட்கும் உதவிகளை அரசு செய்து கொண்டிருக்கிறது.

ஏழை, எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம் என்பதற்காக, இந்த அரசு வலு பெற்றிருக்கிறது, உள்ளாட்சி அமைப்பை சிறப்பாக நடத்துவதற்காக இந்தத் தேர்தலை சந்திக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். கிராமங்களில் பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவார்; தூங்குபவரை எழுப்பலாம், தூங்குவது போல் நடிப்பவரை எழுப்ப முடியாது என்று சொல்வார்கள். அதைப் போலத் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இன்று உருவாகும் செங்கல்பட்டு மாவட்டம், பல்வேறு துறைகளிலும் மேலும் சிறந்து விளங்கும் வகையில், சில அறிவிப்புகளை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன்:–

❖ மதுராந்தகம் வட்டம், இரும்புலிச்சேரி கிராமத்திற்கு அருகே பாலாற்றின் குறுக்கே 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். இதனால் தடுப்பணையை சுற்றியுள்ள நல்லாத்தூர், பொய்கைநல்லூர், இரும்புலிச்சேரி, புறஞ்சேரி, தண்டரை, நெரும்பூர், அட்டவட்டம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிணறுகளின் நிலத்தடி நீர் செறிவூட்டப்படும். இதன் மூலம் 1,340 ஹெக்டேர் நிலம் பயன்பெறுவதோடு, குடிநீர் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

❖ திருப்போரூர் வட்டம், பஞ்சன்திருத்தி கிராமத்திற்கு அருகே மானாமதி மடுவின் குறுக்கே 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும்.

❖ அதேபோல, திருப்போரூர் வட்டம், பண்டிதமேடு கிராமத்திற்கு அருகே மானாமதி மடுவின் குறுக்கே 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். மேற்படி பஞ்சன்திருத்தி மற்றும் பண்டிதமேடு தடுப்பணைகளினால் 19 மில்லியன் கன அடி நீர் சேமிக்கப்பட்டு, மானாமதி, புன்னப்பட்டு, அகரம், காரணை ஆகிய கிராமங்களில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, வேளாண் மற்றும் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

- மதுராந்தகம் வட்டம், செம்பூண்டி கிராமம் அருகே கிளியாற்றின் குறுக்கே 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். இதனால், இதனைச் சுற்றியுள்ள செம்பூண்டி, பசுவங்கரனை, ஓரத்தூர் ஆகிய கிராமங்கள் பயன் பெறும்.

- மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபரின் மாமல்லபுரம் சந்திப்பிற்குப் பிறகு, உலகமே மாமல்லபுரத்தை உற்று நோக்குகிறது. அதனால் சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஏற்கெனவே உள்ள வசதிகளை நவீனப்படுத்தவும் மத்திய அரசின் துணையுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

- குறுகிய கால அவகாசத்தில் மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயில், ஐந்து ரதம், அர்ஜுனன் தபசு பாறை சிற்பங்கள், சிற்ப அருங்காட்சியகம், கலங்கரை விளக்கம், புலிக்குகை உள்ளிட்ட வரலாற்று சின்னங்களை அனைவரும் கண்டுகளிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தை 50 ரூபாய் கட்டணத்தில் இயக்க உள்ளது. இந்தப் பேருந்துப் பயணத்தில் சுற்றுலாப் பயணிகள் மேற்கண்ட நினைவுச் சின்னங்களின் அருகே எங்கு வேண்டுமானாலும் ஏறி, மற்றொரு நினைவுச் சின்னத்தின் அருகில் இறங்கிக் கொள்ளலாம் என்பது சிறப்பு அம்சமாகும்.

- செங்கல்பட்டு வட்டம் முருகமங்களம் கிராமத்தில் 151 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரதப் பிரதமரின் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ், 1,260 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

- செங்கல்பட்டு வட்டம், கீரப்பாக்கம் கிராமத்தில் 157 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரதப் பிரதமரின் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ், 1,760 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம், மாநிலத் தேர்தல் ஆணையத்தின் மூலமாக, அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அதில், திராவிட முன்னேற்றக் கழக ஒரு குற்றச்சாட்டைக் கூறியது. ஏற்கெனவே, உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் இடங்களிலெல்லாம் நீங்கள் மின்னணு வாக்கு இயந்திரத்தை பயன்படுத்த வேண்டும் என்று நேற்றையதினம் திமுக சார்பில் கலந்து கொண்ட திரு.என்.ஆர்.இளங்கோ அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். 2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன் வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் வரிசை எண்.11இல் தேர்தல் சீர்திருத்தங்கள் என்ற தலைப்பில், வாக்குப் பதிவு இயந்திரங்களுக்குப் பதிலாக வாக்குச் சீட்டு முறையை மீண்டும் அமல்படுத்துதல் போன்ற முக்கிய சீர்திருத்தங்களை திமுக தொடர்ந்து வலியுறுத்தும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதுமட்டுமல்ல, 2019ஆம் ஆண்டு புதுதில்லியில் நடத்தப்பட்ட, மக்களவைத் தேர்தலுக்கான அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மரியாதைக்குரிய திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்கள் கலந்து கொண்டு "மின்னணு வாக்கு இயந்திரங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை, வாக்குச்சீட்டு முறையை மீண்டும் அமல்படுத்துங்கள்" என்று தெரிவித்திருந்தார். நேற்றைய தினம் மாநில தேர்தல் ஆணையத்தால் கூட்டப்பட்ட கூட்டத்தில், வாக்குச் சீட்டுக்கு மின்னணு வாக்கு இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய திரு.என்.ஆர்.இளங்கோ அவர்கள் கூறியுள்ளார். என்ன வேடிக்கை பாருங்கள், தமிழ் நாட்டில் கொள்கையில்லாத ஒரே கட்சி தி.மு.க. கட்சி தான்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பச்சோந்தி அடிக்கடி நிறத்தை மாற்றிக் கொண்டே இருக்கும். ஆனால், அதைவிட வேகமாக கொள்கையை மாற்றக்கூடிய ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழக கட்சி என்பதை நான் சொன்ன கருத்திலிருந்து உங்களுக்கு தெள்ளத் தெளிவாக புரிந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, வேண்டுமென்று திட்டமிட்டு

"இது மக்களுடைய அரசு, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரே அரசு"

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

ஏதாவது குழப்பத்தை உருவாக்கி, உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளிப்போட முயற்சிக்கின்றார், அது நிறைவேறாது. மாநிலத் தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரைக்கும், சரியான முறையில் தேர்தல் நடைபெற வேண்டுமென்று எண்ணி, வார்டு வரையறை முழுமையாக செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், புதிய மாவட்டத்தைப் பிரித்ததினால் பிரச்சினை என்று சொன்னார். 2018இல் வரையறுக்கப்பட்ட அந்த வார்டு முறையைப் பின்பற்றித் தான் புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களிலும் தேர்தல் நடைபெறும் என்று தெளிவாக தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது. ஆகவே, இதில் எந்தக் குழப்பமும் கிடையாது, குழப்பமெல்லாம் திரு.ஸ்டாலினுக்குத் தான் இருக்கிறது, தேர்தல் ஆணையத்திடமும் இல்லை, மற்ற கட்சிகளுக்கும் இல்லை.

இன்றைக்கு தமிழகத்தில் மழைக்காலங்களில் பெய்கின்ற மழைநீர் ஆங்காங்கே தேங்கி வருவதால் கொசு அதிகமாக உற்பத்தியாகி, மக்களுக்கு மர்மக் காய்ச்சல்கள் வருகிறது. அதிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக **அம்மாவினுடைய அரசு ஏழை மக்களுக்கு கொசுவலை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும். நைலான் துணியிலான அற்புதமான கொசுவலையை எங்களுடைய அரசு ஏழை மக்களுக்கு வழங்குமென்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.** அனைத்து மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று என்று சிலர் கூறினார்கள். அதையும் அரசு விரைவில் பரிசீலிக்கும். தற்போது ஏழை மக்களுக்கு அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எல்லா குடும்பங்களும் தைப்பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்பதற்காக அரிசி குடும்ப அட்டை வைத்திருக்கும் சுமார் 2 கோடியே 5 இலட்சம் குடும்பங்களுக்கு பொங்கல் சிறப்புப் பரிசாக ரூ.1,000 வழங்கப்படும் என்ற அறிவிப்பை வழங்கி, இன்றைக்கு காலை அதை துவக்கி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். **தமிழகத்திலே ஏழை, எளிய மக்களின் துன்பங்களைக் களைவது தான் எங்களுடைய இலட்சியம், அந்த இலட்சியப் பாதையிலே இன்றைக்கு வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறோம்.** எதிர்காலத்தில், தமிழகம் குடிசையில்லாத தமிழகமாக உருவாக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம் ஏரிகள் நிறைந்த மாவட்டம், ஏரிகள் நிறைந்த இந்த மாவட்டத்தில் தான் முதன்முதலாக நான் குடிமராமத்துத் திட்டத்தை துவக்கி வைத்திருக்கின்றேன். இதன் மூலமாக, தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் பயன்பெறுவதற்காக இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை சேமித்து வைக்கும் திட்டம் குடிமராமத்துத் திட்டம். அதே போல, தடுப்பணை மூன்றாண்டு கால திட்டமாக ரூ.1,000 கோடி ஒதுக்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். அதை நிறைவேற்றும் விதமாகத்தான், நான் வந்தவுடன் இங்கே குறும்படம் வாயிலாக அழகாகக் காண்பித்தார்கள். இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்த அறிவிப்பை நடைமுறைப்படுத்திய அரசு என்பதை புள்ளிவிவரத்தோடு, ஆதாரத்தோடு இன்றைக்கு வெளியிட்டு காண்பித்திருக்கின்றோம். மாண்புமிகு அம்மாவின் அரசு தடுப்பணை கட்டியதன் விளைவாக, தடுப்பணைகளிலே நீர் தேங்கியிருக்கும் காட்சியை நாம் பார்க்கின்றோம். இது மக்களுடைய அரசு, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரே அரசு என்பதை நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

பல்லாண்டு காலமாக செங்கல்பட்டைச் சேர்ந்த மாவட்ட மக்கள் கோரிக்கை வைத்திருந்தார்கள். ஆகவே, காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பிரித்து செங்கல்பட்டு மாவட்ட நகரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை இன்றைக்கு தொடங்கியிருக்கின்றோம். இந்தப் பகுதி வேளாண் மக்கள் நிறைந்த பகுதி, தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, இந்த அரசு எப்பொழுதும் இந்த மாவட்டத்திற்குத் துணை நிற்கும் என்று சொல்லி, செங்கல்பட்டு மாவட்டம் உருவாவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களுக்கும், அவருக்குத் துணை நின்ற அரசு உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்தத் திட்டம் விரைந்து செயல்படுவதற்கு இங்கே இருக்கின்ற பொதுமக்களும், கழக முன்னோடி நிருவாகிகளும் தொடர்ந்து வலியுறுத்தியதன்பேரில், இன்றைக்கு புதிய மாவட்டம் விரைந்து தொடங்கப்பட்டிருக்கின்றது. இந்த மாவட்டம் அனைத்து வளங்களும் பெற்று சிறப்படைய வேண்டும் என்று வாழ்த்தி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

2020ஆம் ஆண்டிற்கான அரசு பொதுவிடுமுறை நாட்கள்

வ. எண்	பொது விடுமுறை	தேதி	கிழமை
1.	ஆங்கிலப் புத்தாண்டு	01.01.2020	புதன்கிழமை
2.	பொங்கல்	15.01.2020	புதன்கிழமை
3.	திருவள்ளுவர் தினம்	16.01.2020	வியாழக்கிழமை
4.	உழவர் திருநாள்	17.01.2020	வெள்ளிக்கிழமை
5.	குடியரசு தினம்	26.01.2020	ஞாயிற்றுக்கிழமை
6.	தெலுங்கு வருடப் பிறப்பு	25.03.2020	புதன்கிழமை
7.	*வங்கிகள் ஆண்டு கணக்கு முடிப்பு (வணிக வங்கிகள் / கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும்)	01.04.2020	புதன்கிழமை
8.	மகாவீர் ஜெயந்தி	06.04.2020	திங்கட்கிழமை
9.	புனித வெள்ளி	10.04.2020	வெள்ளிக்கிழமை
10.	தமிழ்ப் புத்தாண்டு மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பிறந்த தினம்	14.04.2020	செவ்வாய்க்கிழமை
11.	மே தினம்	01.05.2020	வெள்ளிக்கிழமை
12.	ரம்ஜான் (Idu'l Fitr)	25.05.2020	திங்கட்கிழமை
13.	பக்ரீத்	01.08.2020	சனிக்கிழமை
14.	கிருஷ்ண ஜெயந்தி	11.08.2020	செவ்வாய்க்கிழமை
15.	சுதந்திர தினம்	15.08.2020	சனிக்கிழமை
16.	விநாயகர் சதுர்த்தி	22.08.2020	சனிக்கிழமை
17.	மொகரம்	30.08.2020	ஞாயிற்றுக்கிழமை
18.	காந்தி ஜெயந்தி	02.10.2020	வெள்ளிக்கிழமை
19.	ஆயுத பூஜை	25.10.2020	ஞாயிற்றுக்கிழமை
20.	விஜயதசமி	26.10.2020	திங்கட்கிழமை
21.	மிலாதுன் நபி	30.10.2020	வெள்ளிக்கிழமை
22.	தீபாவளி	14.11.2020	சனிக்கிழமை
23.	கிறிஸ்துமஸ்	25.12.2020	வெள்ளிக்கிழமை

*தமிழ்நாட்டிலுள்ள வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
22.12.2019 அன்று சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற 46ஆவது இந்திய சுற்றுலா மற்றும்
தொழில் பொருட்காட்சி 2019–2020ஐ தொடங்கி வைத்தார்கள்.

Published by Dr. P. SANKAR, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr. P. SANKAR, IAS